உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0

R. No. M. 3606 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.
ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹூ மார்கழி-மீ 9-உ (23—12—1934) | மலர் 18.

## எங்கள் வேலை.

(கடம்பங்குளம் தோழர் ப. நாராயணன் அவர்கள் பாடியது)

"பாரதியாரின், பாரத தேசமென்று பெயர் சொல்லுவோம்" என்ற மெட்டு.

பல்லவி

சாதியழிப்போம் வெறுஞ் சடங்கழிப்போம்—கொடுஞ்
சாத்திரக் குப்பையெல்லாஞ் சேர்த்தொழிப்போம்(சாதி)

சரணங்கள்

1. சாதியி லுயர்ந்தோமென்று பட்டஞ்சூட்டி—பல
சாத்திரங்கள் தானெழுதிக் கோர்த்துவைத்து
வீதியில் வரவிடாது தடுக்குகின்றார்—இந்த
வீணர்க ளுக்குமதி கொடுத்திடுவோம் (சாதி)

2. மாதரை யிட்டுவந்து கோயில்கள்தோறுஞ்—சில
மடையர்கள் சாமிபேரால் பொட்டுமேகட்டி
தீதே புரியவிட்டுத் தேவடியாளை—இவர்
தினமு மனுபவிக்கும் செய்கை போக்குவோம் (சாதி)

3. பாழுங் கிழவனுக்குப் பத்துவயதுச்—சிறு
பாலகியை மாலையிடும் பான்மையொழிப்போம்
வாழும் பருவப்பெண்ணை விதவையென்று—வீட்டுள்
வைத்தடக்கும் பாமரருக் கெடுத்துரைப்போம் (சாதி)

4 விதவா விவாகமதை விரைந்து செய்வோம்
வீரத் தமிழரென்று பேருமெய்துவோம்
நிதமுங் கலப்புமணச் செய்திகள் கேட்டு
நெஞ்சம் மலர்ந்துவுடல் விம்மிமகிழ்வோம் (சாதி)

5. ஆத்திக ரென்றுசிலர் கூட்டம்போட்டு—நம்மை
ஆனமட்டுந் திட்டிடினும் நாங்கள் மலைக்கோம்
"நாத்திக!" ரானநாங்கள் சொன்னவையெல்லாம்
நலந்தரு மென்றுணர்ந்தால் நாடுதற்கென்ன (சாதி)

6. கடவுளைக் காப்பதற்குக் கங்கணங்கட்டோம்
காப்பதற்குக் காங்கிரசு! ஆத்திக!! ருண்டு
படரும் பகுத்தறிவைப் பாலருக்கெல்லாம்
பாலோடு ஊட்டுவித்து நாங்கள் வளர்ப்போம் (சாதி)

7. பக்கத்து வீட்டிலுள்ள பாலர் பசியால்
பரிதவித் துடல்வியர்த் தயர்ந்து நிற்க
தக்க தருமமென்றும் பாற்குடங்களை
சாமிக்கென்று கல்லிற்கொட்டுஞ் சாலமழிப்போம்(சாதி)

8. பாடுபட்டுத்தேடிய பணங்களையெல்லாம்
பாதைவழி நாமிறைக்கோம் யாத்திரைக்கென்று
கேடுகெட்ட தண்ணீரெல்லாந் தீர்த்தங்களென்று
கிறுக்கரைப் போலவினி நாங்கள் குளிக்கோம் (சாதி)

9. சாமியைத் தொழுவதானால் தரகர்வைக்கோம்
சாலவும் பணத்தைக்கொண்டு கோவிலைக்கட்டோம்
பாமரர்க்குப் பகுத்தறிவை யுண்டுபண்ணுவோம்
பந்திபந்தி யாய்த்தெருவில் பள்ளிகள்வைப்போம் (சாதி)

10. சாத்திரப் பேய்களெல்லாம் நாங்களோட்டுவோம்
சாதி சமயப்பேயை நாங்களோட்டுவோம்
நேத்திரத் தாலேபார்த்தால் தீட்டென்று சொல்லும்
நெறிகெட்ட பேய்களையும் நாங்கள்வாட்டுவோம் (சாதி)

11. சாதி பிரித்தபல நூல்களையெல்லாஞ்
சமுத்திரத்துத் தண்ணீரிலே நாமமிழ்த்துவோம்
நீதியுயர்ந்தமதி நூல்களைக்கற்று—நல்ல
நிலையடைவோஞ்சுய மதியடைவோம் (சாதி)

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 |
| விவாக விடுதலை | 0-4-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 |
| மனித உற்பவம் | 0-8-0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| The Right of Temple Entry (English) | 1-0-0 |
| The Crux of the Indian Problem (English) | 1-0-0 |
| உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| சாமிகளின் அடிமை | 0-12-0 |
| லோகல்போர்டுஆக்ட்(சென்னை) | 2-0-0 |
| பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |
| பெண்ணுரிமைக் கீதங்கள் | 0-1-0 |
| சமதர்மக் கீதங்கள் | 0-0-6 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## இயக்கப் பாட்டுப் புத்தகங்கள்.

இப்புத்தகங்கள் சுயமரியாதை, சமதர்மம் ஆகிய கொள்கைகளை விளக்கி அறிய கருத்துக்களுடன் பாடப்பட்டவை.

### சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள்.

பாரதியார் நடையையும், வர்ணமெட்டுகளையும் அனுசரித்து கடம்பங்குளம் தோழர் ப. நாராயணன் அவர்களால் பாடியது. நல்ல பதிப்பு. ஈ. வெ. ராமசாமி படத்துடன்
விலை அணா 0—4—0.

### சுயமரியாதைப் பாடல்கள்.

விலை அணா 0—2— 0.

### சமதர்மப் பாடல்கள்.

நாகைத் தோழர் வி. சாமிநாதன் அவர்களால் பாடியது.
விலை அணா 0—1—0.

### சமதர்மக் கீதங்கள்,

தோழர் ப. ஜீவானந்தம் அவர்களால் பாடியது.
விலை அணா 0—1—0.

### பெண்ணுரிமைக் கீதங்கள்.

தோழர் ப. ஜீவானந்தம் அவர்களால் பாடியது.
விலை அணா 0—1—0.

### மாதர் சுதந்திரம்.

இது பண்டிதர் சாமி சிதம்பரனார் அவர்களால் எழுதப்பட்டதாகும். இந்நூலில் பெண்கள் எவ்வெவ் வழிகளில் சுதந்திரம் பெறவேண்டும் என்பதும், பெண்கள் சுதந்திரத்துக்கு ஆண்கள் எவ்வளவு முட்டுக்கட்டையாய் இருக்கிறார்கள் என்பதும், பெண்கள் எப்படி தங்கள் சுதந்திரத்துக்கு பாடுபட வேண்டும் என்பதும் விளக்கமாக்கப்பட்டிருக்கிறது.
விலை அணா 8.

### மனித உற்பவம்.

இது தோழர் சிங்காரவேலு B. A., B. L, அவர்களால் எழுதப்பட்டது. பிரபஞ்ச உற்பத்தி—ஜீவராசிகள் சூரிய சந்திரன் உற்பத்தி—மனிதர்கள் எப்படி உண்டானார்கள் என்னும் விஷயங்களும் மனிதர்கள் ஜீவன்கள் பூர்வ சரித்திரம் இன்னது என்றும், இனி ஏற்படப்போகும் மாறுதல் என்ன என்றும் சரித்திரம்—விஞ்ஞானம் ஆகியவைகளை ஆதாரமாய் கொண்ட ஆராய்ச்சி நூல்.
விலை அணா 8.

### சாமிகளின் அடிமை,

இந்நூல் அமரிக்க சீர்திருத்த மாது மிஸ். மேயோ அம்மையால் எழுதப்பட்ட தேவதாசிகள் என்னும் ஆங்கிலப்புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. 170-பக்கம் கொண்டதாய் நல்ல கிளேஸ் காகிதத்தில் தெளிவானஎழுத்தில் பதிக்கப்பட்டது. ஏற்கனவே 1—8—0 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இப்போது விலை அணா 8.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# "காங்கிரஸ்-சமதர்மம்"

## இரு முரண்பட்ட பதங்கள்.

### சுதந்திரமான அரசியல் கட்சி அவசியம்.

(காங்கிரஸ் சமதர்மக் கட்சியைப்பற்றி லண்டனிலிருந்து வெளிவரும் "Indian-Forum" என்ற பத்திரிகையில் தோழர் R. பால்மர் தத்தர் எழுதியது)

பம்பாயில் "காங்கிரஸ் சோஷலிஸ்ட் குரூப்" என்ற ஒரு பிரிவினை ஏற்பட்டதானது, இந்திய தேசிய இயக்கத்திற்குள் எங்கு பார்த்தாலும் பலத்த விவாதத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது. 1934-ம் வருஷம் பிப்ரவரி மாதம் இந்தக்கட்சியார் தங்கள் வேலைத் திட்டத்தை வெளியிட்டார்கள். அதில் தோழர்கள் கிருஷ்ண மேனன், எம். ஷெட்டி, எம். ஆர். மசானி இன்னும் அநேகரும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை ஆதரித்து ஜவஹர்லால்நேரு எழுதிய ஒரு கடிதமும் அத்துடன் பிரசுரமாயிருக்கிறது. அதில் நேரு "காங்கிரல் லட்சியத்தை தன் வசப்படுத்தக் கூடியதாய் காங்கிரசிற்குள்ளேயே ஒரு இயக்கம் ஏற்பட்டிருப்பதை வரவேற்பேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

காங்கிரஸ்காரர்கள் இந்த இயக்கத்தைப்பற்றி எவ்விதம் கருதக்கூடும்? இந்த வேலைத் திட்டம் மேற்கண்ட போராட்டத்திற்குச் சரியான வழிதானா?

மேற்கண்ட இக்கேள்விகளுக்கு சட்ட மறுப்பியக்கம் அடியோடு குலைந்து சரணாகதியடையும்படி ஏற்பட்டு தேசிய இயக்கம் பெரிய குழப்பத்திலாழ்ந்து, புது மார்க்கத்தைத் தேடுகின்ற இது சமயம் பதில் சொல்ல வேண்டியது அவசியமாகிறது.

இந்த வேலைத்திட்டம் எம்மாதிரியான ஒரு நிலைமையில் ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆராய்வோம்.

1934-ம் வருஷம் மே மாதம் தேசிய காங்கிரசானது பாட்னாவிலே பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு சரண் அடைந்தது. 1933-ம் வருஷத்தில் முழு சுதந்திரத்திற்காகவென்று வெகு ஆர்ப்பாட்டமாக ஆரம்பிக்கப்பட்ட சட்ட மறுப்பு இயக்கம் எவ்வித நிபந்தனையுமின்றி நிறுத்தப்பட்டது. சட்டசபைப் பிரவேசம் செய்ய தீர்மானம் செய்தாகி விட்டது.

1934-ம் வருஷம் ஜூன் மாதம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தேசிய காங்கிரஸ் ஒரு சட்ட விரோதமான கூட்டமல்லவென்று நற்சாட்சிப் பத்திரம் அளித்தனர்.

உடனே 1934-ம் வருஷம் ஜூலை மாதம் இந்தியாவின் பொதுவுடமைக் கட்சி (Communist Party) சட்ட விரோதமான கூட்டமென பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் பகிரங்கப் படுத்தினார்கள்.

இந்த தொடர்பான சம்பவங்களின் சம்பந்தா சம்பந்தங்களை எளிதில் மூடனும் அறிவான். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஒரு பக்கம் தேசியகாங்கிரசை சட்டத்திற்குப்புறம்பான பரம விரோதி அல்ல என்பதோடு, அது கவர்ன்மெண்டாருக்கு சகபாடி என்பதாகவும், நல்ல பிள்ளையென்றும் கூறிவிட்டு மற்றொரு புறம் பொதுவுடமைக்கட்சியை கவர்ன்மெண்டாருக்குப் பெரிய விரோதி என்றும், அதை அடக்கி ஒடுக்க வேண்டுவதில் முழு கவனம் செலுத்த வேண்டியது அவசியமென்றும் அறிக்கை மூலம் வெளிப்படுத்தினார்கள்.

வெகு தந்திரமும், ஆட்சி அனுபவமும், தான் செய்வதை அறிந்து செய்யும் ஆற்றலுமுள்ள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் இம்மாதிரியான போக்கு அவர்கள் இனி எப்பக்கம் தங்கள் முழு எதிர்ப்பையும் செலுத்துவார்கள் என்பதை நன்கு வெளிப்படுத்துகிறது. காங்கிரஸ் போராட்டத்தை நடத்திய தேசிய பூர்ஷ்வாக்கள் அதனால் பாமர ஜனங்களிடையே ஏற்பட்ட பெருமிதமான உத்வேகத்தைக் கண்டு அலறி அதனால் தங்களுடைய ஆதிக்கத்திற்கு எவ்வளவு ஆபத்து—எங்கு பங்கம் விளையுமோ என்பதை உணர்ந்து நடுநடுங்கி, இயக்கத்தை நிறுத்தி, அதன் அரைகுறையான உயிரையும் போக்கி விட்டு, இப்பொழுது கவர்ன்மெண்டாரின் நெருங்கிய ஒத்துழைப்பை நாட முனைந்திருக்கின்றனர். இப்படி காங்கிரசால் மோசம் செய்யப்பட்ட பாமர மக்களோ தங்கள் போராட்டத்திற்குப்புதிய தலைமையை நாடுகின்றனர். ஏகாதிபத்திய ஆட்சியையும், அதன் கொள்ளையையும் கடைசி வரையிலும் எதிர்த்துப்போராடுவதில் முதன்மையாய் விளங்கும் ஒழுங்கு படுத்தப்பட்ட தொழிற் கட்சிதான் இவர்களை நடத்திச்செல்ல முடியும். எப்படியெனில் தொழிலாளர் சங்கங்களும், பொதுவுடமைக் கட்சிகளும் பல தோன்றுவதைக்கொண்டு இவைகளை இனிவரும் பொதுஜன போராட்டத்தில் முன்னணியில் நின்று நடத்திச் செல்லுமென நன்கு புலனாகிறது. இதுகாறும் காங்கிரசை ஆதரித்த பெரும்பாலோர், இப்பொழுது பொதுவுடமைக்கட்சியின் வேலைத்திட்டத்தாலும், அதன் புரட்சிக் கொள்கைகளாலும் பெரிதும் இழுக்கப்படுகின்றனர். அதே சரியான வழி எனக்கொள்ளவும் முற்படுகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரசினுடைய தோல்விக்கு சரணாகதிக்கு பொருப்பாளிகளாகிய ஜவஹர்லால் நேரு உள்பட்ட தலைமையாளர்களாலும், காந்தியாரின் ஆசீர்வாதத்தோடு கூடவும் "காங்கிரஸ் சமதர்மக்கட்சி" முன்னுக்கு இழுக்கப்பட்டிருப்பதின் கருத்தென்ன? இந்தவிடத்தில் நாம் அவசியம் உணர வேண்டியது ஒன்றுண்டு. இந்த புதிய கட்சி தோன்றியதினால் தலைமை ஸ்தானமோ, அல்லது வேலைத்திட்டமோ எவ்வித மாற்றத்தையாவது அடைந்து விடாதா? இல்லை. ஆனால் காங்கிரசானது தலைமை ஸ்தானத்திற்கு யோக்கியதை இல்லை என்று நிச்சயிக்கப்பட்ட ஒரு நிலைமையை மறைத்து, பொது ஜனங்களை மறுபடியும் மயக்கக் கூடிய சமதர்மம் என்ற புதிய வர்ணத்தில் வெளிவருவதற்கான சூட்சி என்பது வெளிப்படையாகத் தோன்றவில்லையா? (ஜெர்மனியில் ஹிட்லர் தலைமையின் கீழ் நடந்து வரும் முதலாளித்துவத்தை ஆதரிக்கும் நாசிக் கட்சியாரும் கூடத் தங்களை சமதர்மிகளென்றே சொல்லிக் கொள்கிறார்கள்!)

நாம் இப்படிச் சொல்லுவது இன்னும் காங்கிரசை (ஆதரிக்கும்) ஆதரித்து அதை அடியோடு சமதர்ம கொள்கைக்கு மாற்றிவிடலாம் என்று மனோராஜ்யம் செய்து கொண்டிருக்கும் ஒரு சாராருக்கு கடுமையாகத் தோன்றலாம். ஆனால் இப்படி நம்பியிருப்பவர்களுடைய எண்ணம் எவ்வளவு அந்தரங்க சுத்தியாயிருப்பினும், எப்படி 'நாசிசோஷலிஸ்டுகள்' நாசிகளால் உபயோகப்படுத்தப் படுகிறார்களோ அது போலவே காங்கிரசின் கீழுள்ள சமதர்மத்திட்டம் என்பதை நம்புகின்றவர்களும் வீணே அரசியல் காரணங்களுக்காக பூர்ஷ்வாக்களால் ஆயுதங்களாக உபயோகப்படுத்தப்பட்டு ஏமாற்றமடைவார்கள் என்பதை உணர வேண்டும்.

காங்கிரஸ் சமதர்மத் திட்டத்தை சிறிது கவனிப்போமாகில் அதில் எப்படி சமதர்மத்தின் முக்கியாம்சங்கள் நழுவ விடப்பட்டிருக்கின்றதென்பதை அறிந்து கொள்ளலாம்.

சமதர்மமென்றால் என்ன? பல தேசங்களில் தொன்று தொட்டு நடைபெற்ற சமதர்ம இயக்கங்களைக் கொண்டும், காரல் மார்க்ஸின் உபதேசங்களைக் கொண்டும் அதாவது உண்மையான சமதர்ம தத்துவம் என்பது உழைப்பாளிகளின் முன்னேற்றத்திற்கும், விடுதலைக்கும், பூர்ஷ்வாக்களின் கொள்ளை, ஆதிக்கம் முதலிய ஆட்சியை ஒழித்து உழைப்பாளிகளின் ஆட்சிக்குட்படுத்தி பொது உற்பத்தி பொதுவுடமை தத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு புதிய சமூக அமைப்பை ஏற்படுத்துவதேயாகும்.

சமதர்மத்தின் ஜீவ நாடி வகுப்புப் போராட்டம். மற்ற கட்சிகளில் சாராத உழைப்பாளிகளின் சுதந்திரமானதோர் அரசியல் கட்சியை ஸ்தாபித்தல் பூர்ஷ்வாக்களின் ஆதிக்கத்தை (அதாவது ஏகாதிபத்திய பூர்ஷ்வாக்கள், இந்திய பூர்ஷ்வாக்கள் உள்பட) கவிழ்க்கப் போராடி இறுதியில் (இந்திய ஏழை விவசாயிகளுடைய கூட்டுறவையும்) இந்திய உழைப்பாளிகளின் கூட்டுறவைக் கொண்டதோர் உழைப்பாளிகளின் சர்வாதிகார ஆட்சியை நிலை நாட்டுதல் என்பதாகும்.

காங்கிரஸ் சமதர்ம வேலைத்திட்டத்தில் மேற்கண்ட முக்கியாம்சங்கள் ஒன்று கூட காணப்படவில்லை. வகுப்புப்போராட்டத்தையோ, உழைப்பாளிகளின் சர்வாதிகார ஆட்சியைப் பற்றியோ ஒரு வார்த்தை கூட குறிப்பிடவில்லை. அதுமாத்திரமின்றி தொழிலாள வகுப்பாருக்கு ஒரு சுதந்திரமான அரசியல் கட்சி வேண்டுமென்பதையும் குறிப்பிடவில்லை.

இது ஏதோ தற்செயலாக விடப்பட்டிருக்கிறதென கூறுவதற்கில்லை. அது வேண்டுமென்றே அவ்விதமாக தயாரிக்கப்பட்டிருக்கிறது. வேலைத் திட்டத்தில் தொழிலாளிகளின் தொழிற்சங்கங்கள் ஏற்படுத்துவதற்கும், விவசாயிகளின் கிருஷிகர் சங்கங்கள் ஏற்படுத்துவதற்கும், அதோடு சிறு வியாபாரிகள், கைத்தொழிலாளிகள், குடைக்கூலிக்கு குடியிருப்போர்கள் முதலானவர்கட்குத்தனித்தனிசங்கங்கள் ஏற்படுத்துவதற்கும் விரிவாக யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் தொழிலாள வகுப்பாருக்கென தனித்ததோர் அரசியல் கட்சி இருக்க வேண்டியது அவசியமென்பது குறிப்பிடப்படவேயில்லை.

இதற்குக் காரணமென்ன? காங்கிரஸ் சமதர்ம திட்டத்தின் உண்மையான நோக்கம் என்னவெனில், காங்கிரசில் ஆதிக்கம் வகித்து நடத்திச் செல்லும் அரசியல் பூர்ஷ்வாக்களின் இஷ்டத்திற்குத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் உபயோகித்து அடக்கி ஆள வேண்டியதேயாகும்.

இன்னும் அநேக முரணான விஷயங்களுமுண்டு. அவைகள் காங்கிரஸ் வேலைத்திட்ட அறிக்கையிலிருந்தும், நேரு எழுதிய கடிதத்திலிருந்தும் மிகுதியாக வெளிப்படுகின்றது. சமதர்ம லட்சியமென்றும், தொழிலாளிகளின், விவசாயிகளின் பொருளாதார ஸ்தாபனமென்றும், பொருள் இயல் ஸ்தாபனமென்றும் அவைகள் எப்பொழுதும் காங்கிரசின் அரசியல் தலைமையின் கீழ் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு எப்பொழுதும் நடக்க வேண்டுமென்றும், அடிக்கடி அழுத்தமாக எச்சரித்திருக்கிறார். நேரு

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

# ஜஸ்டிஸார்.

(பெருங்கருணையுடையார்)

1917-ம் ௵ பிப்ரவரி ௴ ஜஸ்டிஸ் பகுதியார் அனைவருக்கும் ஆட்சி முறையில் நியாயங் கிடைக்க வேண்டுமென்று முறையிட ஆரம்பித்து ஆங்கிலத்தில் "ஜஸ்டிஸ்" என்றும், தமிழில் "திராவிடன்" என்றும், தெலுங்கில் "ஆந்திரப்பிரகாசிகா" வென்றும் பட்டிகைகளை நாள்தோறும் வெளியிட வாரம்பித்தனர். இப்பகுதியார் பெரும்பாலாரென்பது சொல்லாமலே விளங்கும். இவ்வகையார் த்தங் குறைபாடுகளை யெடுத்துக் கூற இம்மூன்று பட்டிகைகளும் நற்றுணைக் கருவிகளாயிருந்தன. இவர்கள் நியாயவாதிகளாக விருந்தனரே யன்றி தங்கள் வயிறு வளர்த்தாலொன்றே பெரிதென்று நினைத்து வெளி வந்தவரிலர்.

பொது மக்களுக்கு நல்லகாலம் வந்ததென்று நாடெங்கும் மகிழ்ச்சியுண்டாயிற்று. இராஜாக்கள், ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், பகதூர்கள், பணக்காரர்கள் தலைவர்களாக வமைந்திருந்தது நாட்டு நலத்திற்கு நல்லு அறிகுறியாகவிருந்தது. பூசுரர்கள் மனம் புண்பட்டு தங்கள் ஊக்குன்றி விடுமே யென்ற ஏக்கமுற்றிருந்தனர்.

மந்திரிகள் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட பொழுது அன்னார் ஆட்சி கௌரவமாக விருந்தது. கலெக்டர்களெல்லாம் ஜஸ்டிஸ் அமைச்சர்களைச் கனப்படுத்தினார்கள். இது வரை வந்துள்ள மந்திரிகளிற் பெரும்பான்மையோர் நீதி தவறாமல் நடு நிலைமையிலிருந்து தாழ்ந்த மக்களுக்குதவி புரிந்து வந்தனர். சர்க்காருக்கு நிலவரி கொடாதவர்களுக்கு வாக்குரிமை கிடையாததனால் புல்லுருவிகள் போன்றவர்கட்கு வருத்தமுண்டாயிற்று.

ஆட்சிப்பகுதிகளில் ஆண்மைசெலுத்த வசதியற்றதாகத் துயருற்றனர். வெகு காலமாக எம்மருங்கினும், எத்திசை திரும்பினும் புல்லுருவிகளே பெருகி வாழ்ந்து வந்தனர்.

நியாயவாதிகளே இன்று பொருதலை முறை ஆட்சியுற்றிருப்பினும் புல்லுருவிகளை அறவேகளைதல் முடியாதென்றவுண்மை வெள்ளிடை மலை போலாயிற்று. ஆதலால் உடன் பிறந்தாரை எவ்வகையானும் பிரித்துப் பகையாளிகளாக்கினொழிய புல்லுருவிகளுக்குப் பிழைப்பில்லை என்று தோன்றவே ஆறறிவுடைய மக்களை ஐயறிவுடைய மாக்களாக வாக்குதலே தகைமையென்று கருதி ஐம்புலன் பொறிகட்கும் அருத்தியளித்தனர்;

காந்தியார்பெயரால் பிறர்பொருளை மாந்தினர். இதுகாறும் 48 ஆண்டுகளாக நிகழ்ந்த சர்வ இந்திய மக்கள் கூட்ட விழாக்களால் பலர் உயர் பதவிகள் பெற்றனரேயல்லாமல் வறியருக்கு விடுதி கிடையாது; வரி கொடுப்பவர்க்கு சரி சமத்துவங் கிடையாது. காரணம் என்ன? எம்மக்கட்கும் நியாயங் கிடைக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

மக்கட்கிளர்ச்சியுண்டான காலத்தில் பணப்பவுசு பெற்றவர்கள் சாதாரண ஜனங்களுடன் கலந்து அளவளாவி அன்னாரையும் தங்களுடன் சேர்த்துக்கொண்டு முன்னேற்றஞ் செய்யத்துணிந்திருப்பாராயின் கோடிக்கணக்காக ரூபாய் பிரிந்திருக்கும். மூன்று விதினத்தாள்ளும் செவ்வனே நடத்தப்பட்டிருக்கும், கடன் ஏற்பட்டிராது, இயக்கத்திற்கு இழிவுவந்திருக்காது.

போனது போகட்டும் ஆனதற்கு அழுவதால் பயனென்? "ஊக்கமது கைவிடேல்" என்றமுதுமொழியைக் கைப்பிடித்து எழுகின்ற இயக்கமும் முன்போல்செழித்தோங்கும்

1917ல் நான்சிறிதுகாலம்ஜஸ்டிஸ் திராவிடன் பட்டிகைகளுக்கு முறையே துணையாசிரியராகவும் ஆசிரியராகவும் இருந்ததுண்டு. டாக்டர் நாயர், திவான்பகதூர் செட்டியாரிருவரிடமும்எனக்குமிருந்த பழக்கமிருந்தமையால்அவ்விருவருடனும் அடிக்கடிபுது இயக்கமோங்கும் பொருட்டுச்சிலவழிகள் கூறினேன். அவைறயே இப்பொழுதுங்கூறப்போகிறேன். பொப்பிலிமகாராஜா முதலான பிரமுகர்கள் இப்பொழுதேனும் சிறிது செவிசாய்ப்பரேல் நலமுண்டாம்.

காங்கிரஸ் பெயரால் வெற்றிகிடைத்திருப்பதைத்தவிர வேறுசட்சிப்பெயரால் வெற்றிகிடைக்கவில்லை. காங்கிரசில் சேர்ந்த நியாயவாதிகளைத் தழுவிக்கொள்ளுதல் ஜஸ்டிஸ் பக்கத்தார் முதற்கடமையாகும்.

வீடுஇரண்டு பட்டால் கூத்தாடிகளுக்குக் கொண்டாட்டம். வயிறே பெரிதென்றெண்ணுத எம்மக்களையும் ஒன்று படுத்த வேண்டும். இவ்வொற்றுமை எப்பதவிக்கும் மேலாகும். பதவிக்கு வேட்டையாடும் மக்கள் ஏனையரை அத்தன்மையரென்று கூரையேறிக்கூவுதல்இயல்பே வேசி மக்களை வேதியரென்பதும் குருட்டுக்கண்ணைச் செந்தாமரைக்கண்ணன்பதும் மங்கலவழக்காம். இது நிற்க ஒவ்வொரு ஜில்லாவிலும் இவ்வியக்க ஆர்வமுற்றவர் ஒருவர் இருவரையேனும் தேடவேண்டும்.

அன்னார் ஒவ்வொருஊருக்கும்போய் குறைந்தது ஐவரையாயினும் சேர்த்துக் கிளைச்சங்கம்அமைக்க வேண்டும் ஒவ்வொருகிளைச்சங்கமும்திராவிடன் தருவிக்குமாறு ஏற்பாடு செய்வது எளிது.

ஆறுமாதம் இவ்வியக்கத்திற்காகப் பாடுபட முன்வரும் பிரமுகர்களே இயக்கத்தலைவர்களாவார்கள். தாலூகாத்தோறும் 100 பிரதிகள் பரவுமானால் ஜில்லா தோறும் ஏறக்குறைய ஆயிரம் பிரதிகள் செலவாகும்.

12 தமிழ் ஜில்லாக்களிலும் குறைந்தது நாள்தோறும் 10 ஆயிரம் திராவிடன் செலவாகும். பலதுளி பெருவெள்ளம். 10 ஆயிரம் மக்கள் ஜஸ்டிஸார்கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் நாள்தோறும் படிப்பர், பேசுவர், பரப்புவர். இவ்வாறுபரவவேண்டுமானால் இதுவே தருணம். முயற்சி மெய்வருத்தக்கூலி தரும். இது வுண்மை. சிறிதும் ஐயம் வேண்டாம். தாலூகா தோறும் சங்கம் ஏற்படவேண்டும். ஒவ்வொருஜில்லாவிலும் தலைச்சங்கமிருக்க வேண்டும். ஜில்லா சங்கத்திற்கும் கிளைச்சங்கங்கட்கும் எழுத்துப்போக்கிருக்க வேண்டும். ஆண்டு தோறும் ஜில்லாத்தலைநகரில் விழா நிகழ்த்தப்படவேண்டும். ஜில்லாவில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றிப் பேசி குறைகளை நீக்க முயலவேண்டும். ஜில்லாக்கள் 24 சென்னை மாகாணத்தில் இருபதால் ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு ஜில்லாத் தலை நகரில் பற்பல ஜில்லாக்களின் பிரதிநிதிகள் கூடுவாராயின் மக்களுக்குள் ஒற்றுமையும், அன்பும் பெருகும்.

திராவிடனுக்கு ஏற்படுவதுபோலவே ஜஸ்டிஸ் பேப்பருக்கும் குறைந்தது 12000 பேப்பர் செலவாகும். மனப்பால் குடிப்பதென்று கிஞ்சித்தேனும் நினைக்க வேண்டாம். உயர்ந்த நடுத்தரமான பதவிகளிலிருந்து சம்பளம் பெற்றுச்சுகமே வாழ்ந்து வருகின்ற ஜஸ்டிஸ் பக்கத்தார்எத்தனையோபேர்களிருக்கின்றார்கள். சி. டி. நாயகம் போன்ற உண்மையான உழைப்பாளிகள் ஒரு ஜில்லாவில் 12 பேர் கிடைப்பது அரிதாகாது. பெரும்பான்மையோர் வயது முதிர்ச்சியுடன் உடல் தளர்ச்சியுமுடையதாயிருக்கலாம். சிறு தொகையை சம்பளமாகப் பெறுபவர்கள் குடும்ப சம்ரக்ஷணைக்காக மேலும் மேலும் பாடுபடவேண்டியவர்களாயுமிருப்பார்கள். ஆதலால் தகுந்தவருவாயும், சம்பளமும் தக்க திடகாத்திரமுள்ள ஆர்வத்தினர் இயக்கத்திற்காகக் கங்கணங் கட்டினால் முடியாததொன்றுமில்லை. எந் நாட்டிலும் தலைவர்களாக வருபவர்கள் கற்றறிந்த சிலரேயாவர். அன்னாருடைய ஒழுக்க விருப்பத்தால் அனைவரும் அவரை அணுகுவர், அவர் சொல்லைக் கேட்பர், அவருடன் சேர்ந்து இயன்றஅளவு உழைப்பர், பக்கத்துச் சொல் பதினாயிரம் என்பது முதுமொழி, ஆறுமாதம் விடாமுயற்சிசெய்யின் யாண்டும் ஜஸ்டிஸ் மணங்கமழும், மாகாணத் தலைவர்கள் யான் மேற்கூறிய எண்ணம் ஒவ்வொரு ஜில்லாவிலும் 12 ஊக்கமுள்ள பேர்களைப் பொறுக்கிப் பிரயாணச் செல்விற்காகப் பணவுதவி செய்வராயின் ஜஸ்டிஸ் இயக்கத்திற்குப் போதுமான நிதியும் சேரும், இயக்கத்தின் நாள்த்தாள்களும் எங்கும் பரவும், பரவவே இயக்க வேலைகளை எவரும் அறிவர், இயக்கம் நாளொரு மேனியாக வளர்ந்தோங்கும்.

வயிறே தெய்வமென்று கருதும் புல்லறிவாளர் நல்லறிவு பெற்று நியாயவாதிகளை நாடுவர், புல்லுருவி வாழ்வினை ஒழிப்பர்.

ஜஸ்டிஸ் மக்களே! கண் விழியுங்கள், துயிலாதீர்கள், ஒன்று சேருங்கள், ஒருவருக்கொருவர் உதவி புரியுங்கள், பொறாமை கொள்ளாதீர்கள், அனைவருக்கும் ஒருங்கே பதவிகள் கிடையா. முறைப்படி நாட்படக் கிடைக்கும். ஊரெங்கும் வாழக்கேடொன்றுமில்லை என்ற மேலான சீரியக் கொள்கையைக் கூடியவரை கைக்கொள்ளுங்கள். யாக்கை நிலைக்காது, இளமை நிலைக்காது, செல்வம் நிலைக்காது, இன்பம் நிலைக்காது புகழொன்றே நிலைக்கும், நல்லம்யாமென்ற மனச் சான்றே நன்னிலைச் சான்றாகும். தமக்கென்று மட்டு மேவாழாமல் பிறருக்கும் உழைத்துப்பலரும் இன்புறுங்கள்- பிறப்பு வெறியை விடுங்கள். அனைவரும் மக்களென மதியுங்கள். அன்பினும் அருள், அருளால் ஆகாததொன்றுமில்லை. தருணம் தப்பினால் மரணம். "காற்றுள்ள் போதே தூற்றிக் கொள்ளுங்கள்"

---

## ஓர் நன்கொடை யறிக்கை.

---

சில வாரங்களுக்கு முன் "பகுத்தவு" "சமதர்மம்" பத்திரிகைகளில் வெளியிடப்பெற்ற தோழர் தி. அ. வே. யின் வேண்டுகோளுக்கிணங்க விதவாவிவாக வீரப்பெண்மணி தோழர் சுப்பாரெட்டியார்—சுப்பம்மாள் (C/o தோழர் S. N. ஜான் ரெட்டியார் சவ்வாசுபுரம், கல்லூரணி போஸ்ட், அறுப்புக்கோட்டை வழி.) அவர்களின் பிரசவ வசதிக்காக கீழ் கண்ட பிரகாரம் பல கனவான்கள் நன்கொடை அனுப்பியுள்ளார்கள் என S. N. ஜான்ரெட்டியார் அறிவிக்கிறார்.

நன்கோடை விபரம்.

தோழர்கள் (1) கே. ஏ. சுவாமி, காஷியர், சு. ம. சங்கம், சேலம் ரூ 5, (2) டி. ஆர். வெங்கிடாசலபதி, வைக்கல்காரதெரு, மதுரை ரூ 3, (3) யம் யஸ். வெங்கிடசாமி, மைலாப்பூர், சென்னை ரூ 3, (4) யஸ். வி. சுந்தரம் செட்டியார், மொயின் ரோடு, பெக்கு, பர்மா ரூ 2, (5) சி. சு. மு. சு. அருணாசலம் மெட்டுக்குண்டு ரூ 2, (6) வீர. சு. பு. வீரையா அறுப்புக்கோட்டை ரூ 5, (7) ஓர் ஏழை அனுதாபி ரூ 2. ஆ ரூ 22.

---

## தோழர் சத்தியமூர்த்திக்கு கருப்புக்கொடி.

"நீர் சமூக சீர்திருத்த விரோதி"

16-12-34ந் தேதி காலை ஈன்னிக்கோட்டையில் தோழர் சத்தியமூர்த்தியை ஊர்வலமாக அழைத்துச் சென்ற போது, இந்நகரிலுள்ள இளைஞர்களில் சிலர் கருப்புக் கொடிகளைக் காட்டி தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். ஷை இளைஞர்கள் தோழர் சத்தியமூர்த்திக்கு எழுதியுள்ள பகிரங்கக் கடிதமொன்றில் கீழ்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்:— இந்திய சுதேசிகாட்சியை ஆரம்பிக்க வந்துள்ள உங்களை நாங்கள் அன்புடன் வரவேற்கிறோம். உங்களுடைய அரசியல் வாழ்க்கையை நாங்கள் சிரத்தையுடன் கவனித்து வருகிறோம். சமீபத்தில் இந்திய சட்டசபைத்தேர்தலில் வெற்றி பெற்ற தற்காக உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம். எனினும் சமுதாய, மத விஷயங்களில் உங்களுக்குள்ள அபிப்பிராயங்களைப்பற்றி குறிப்பிட அனுமதிப்பீர்களெனக் கருதுகிறோம். அவ்விஷயமாக உங்களுடைய அபிப்பிராயமானது மிகவும் பிற்போக்கானதாகவும், வருந்தத் தக்கதாகவு மிருக்கிறது. சமதர்மமுறையில் உங்களுக்குள்ள துவேஷம் ஜன்மத்தோடு பிறந்ததாகும்.

மற்றும் சாரதா சட்டம், தீண்டாமை விலக்கு மசோதா, ஆலயப்பிரவேச மசோதா முதலியவைகளையும் நீங்கள் ஆதரிக்கவில்லை. தேர்தல் சமயத்தில் நீங்கள் சனாதனிகளுக்குக் கூறிய உறுதிமொழிகள் மோசமானவைகளாகும்.

கேரள சர்வ கலாசாலை அமைப்பதை நீங்கள் முன்னர் எதிர்த்தீர்கள். ஆனல் தமிழ் சர்வகலாசாலை அமைப்பதை நீங்கள் மனப்பூர்வமாக ஆதரித்தீர்கள். எனவே, பற்பல முக்கிய விஷயங்களிலும் உங்களுக்குள்ள கர்னாடக அபிப்பிராயமானது, எங்களுக்கு மிகுந்த கலக்கத்தை உண்டு பண்ணியிருக்கிறது. எனவே ஷை அபிப்பிராயங்களை நீங்கள் மாற்றிக் கொண்டு, தற்போதுள்ள நிலைமையை அனுசரித்து நடந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

த. ந.

## சுசீந்திரம் திருவிழா.

இவ்வூரில் நடைபெறும் திருவாங்கூர் சுசீந்திரம் திருவிழா முந்தின வருஷங்களை விட இவ்வருஷம் மிக ஆடம்பரமாக சர்க்கார் நடத்தப்போவதாகத் தெரிகிறது. ஆனல் திருவாங்கூர் சர்க்காருக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி கவலையில்லை.

## தூக்கம் வேண்டாம்.

அமெரிக்காவில் மஸாச்சு ஸெட்ஸ் என்னும் இடத்தை அடுத்த ஒரிலியன்ஸ் என்னுமிடத்தில் ஐஸக் ஸமால் என்ற 60 வயது சென்ற ஒரு தொழிலாளி தூங்குவது கூடாது என்ற விரதம் கொண்டு தூங்குகிறவன் அறிவீனன் என்று கருதி ஒரு நாளைக்கு 23 மணிநேரம் தூங்காமல் வேலை செய்து கொண்டு இருக்கிறார். ஒரு மணி நேரம் தூங்காமல் ஓய்வு எடுத்துக் கொண்டு வருகிறார்.

## ரெயில் ஓட்டம்.

ஸ்காட்ஸ்மான் என்ற ரெயில் மணி ஒன்றுக்கு 90 மைல் வீதம் ஓடிக்கொண்டிருப்பதை பெருமையாக லண்டன் வாசிகள் பேசிக் கொள்ளுகிறார்கள். ஆனல் ஹாரிஸ்மான் என்ற ரெயில் மணி ஒன்றுக்கு 120 மைல வீதம் அதாவது நிமிடத்திற்கு 2 மைல் வீதம் ஓடுகிறது.

## விமான வேகம்.

இத்தாலியிலிருக்கும் பிரான்விஸ்கோ ஆஞ்சிலோ என்ற இளைஞர் 1933-ம் வருடம் மணி ஒன்றுக்கு 428 மைல் வீதம் பறந்தார். இப்பொழுது மணி ஒன்றுக்கு 440 மைல் வேகத்தில் பறக்கிறார்.

## யுத்தத்தை நிறுத்த ஒரே வழி,

### பெண்களுக்கு லான்ஸ் பரியின் வேண்டுகோள்.

லண்டனுக்கு அருகில் கூடிய பெண்கள்மகாநாட்டில் தோழர் ஜியார்ஜ் லான்ஸ் பரிபேசியதாவது.

"வரும் யுத்தத்தை நிறுத்த வேண்டுமானல் உங்கள் துணைவர்களையும், பந்துக்களையும் இராணுவத்தில் சேரா திருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளும்படி உங்களை கேட்டுக்கொள்ளுகிறேன்."

## உஷ்ணத்தால் ஓடும் கெடியாரம்.

சுவிச்சர் லாந்தில் சமீபத்தில் நூதன முறையில் கெடிகாரங்கள் வெளி வந்திருக்கின்றன. இவைகளுக்கு சாவிக் கொடுக்க வேண்டியது இல்லை. கைகளில் கட்டிக் கொண்டால் உடம்பிலுள்ள உஷ்ணத்தால் ஒழுங்காக ஓடிக்கொண்டே இருக்கின்றன.

## இடியோசை ரேடியோ.

அமெரிக்காவில் சமீபத்தில் ஒரு பெரிய ரேடியோ யந்திரம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறார்கள். அவ்வியந்திரத்தின் உதவியால் சராசரி மனிதக்குரலின் அளவை 10 ஆயிரம் மடங்கு அதிகமாக்கிதொனிக்கச் செய்கின்றது.

## துருக்கிப் பெண்களுக்கு ஓட்டுரிமை.

இனி துருக்கியில் 22-வயதுக்கு மேற்பட்ட சகல பெண்களுக்கும், வாக்குரிமை யளிக்கவேண்டுமென்றும், 30-வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு பார்லிமெண்டு அங்கத்தினர்களாக உரிமை இருக்கவேண்டுமென்றும் சர்க்கார் கட்சியினர் சிபார்சு செய்திருக்கிறார்கள். இந்த சிபார்சுகள் கூடிய சீக்கிரம் சட்டமாகிவிடுமெனக் கூறப்படுகிறது.

(வீ. கே.

## மின்சார கோபுரம்.

### வேண்டும் போது மழை

சோவியத் ரஷியாவைச் சேர்ந்த துருக்கிஸ்தானத்தில் ஒரு குன்றின் உச்சியில் பெரிய மின்சார கோபுரம் ஒன்று கட்டுகிறார்கள். இதன் உதவியால் அங்குள்ள எண்ணிறந்த ஏக்கர் விஸ்தீரணமுள்ள பருத்தி காடுகளுக்கு வேண்டும் பொழுது மேகங்களைத் தருவித்து மழை பொழிய செய்கின்றார்கள்.

## விவசாயிகளின் கடன் சுமை,

### விசேஷ அதிகாரி நியமனம்.

சென்னை மாகாணத்து, விவசாயிகளின் கடன் சுமையை குறித்து விசாரணை செய்ய சென்னை அரசாங்கம் தோழர் சத்தியநாதன் ஐ. சி. எஸ். அவர்களை நியமித்திருக்கிறது. இப்போதாவது சென்னை சர்க்கார் விவசாயிகளின்கடன்சுமையைஅறிய முயற்சிப்பதைக் கண்டு மகிழ்கிறோம்.

## வாழ்க்கை விஷயங்கள்

### கடவுளும், மதமும் கற்பனையே.

அமெரிக்காவை அடுத்திருக்கும் மெக்ஸிகோ தேசம் ஆறுவருடத்திட்டம் ஒன்றையிட்டு வேலைசெய்ய ஆரம்பித்திருக்கிறது. அதன் முக்கிய நோக்கம் எல்லா மக்களுக்கும் வாழ்க்கை விஷயங்களைப்பற்றிப்படிப்பிப்பதற்கென்று கூறப்பட்டிருக்கிறது. ஆண் பெண் சம்பந்தங்களை பொறுத்தவளவில் அரசாங்கம் யாதொரு வித்தியாசமும் கருதாமல் சிறுவர் சிறுமியர்கள் எல்லோருக்கும் உடற்கூற்றின் எல்லா விஷயங்களையும் போதிக்கு மென்றும் ஆனல் மதம் எனப்படுவது ஒரு ஏமாற்றே என்றும் கடவுள் எனச் சொல்லுவதும் வெறும் கற்பனையே யென்றும் போதிக்கு மெனக் கூறப்படுகிறது.

## பெண்ணின் பலம்

### 1½ அங்குலக் கம்பியைச் சுருட்டுதல்.

மிஸ் மீரா பானர்ஜி என்ற வங்காளயுவதி அதிசயிக்கத்தக்கஉடல் வலிமையுடைய பெண்ணாகும். இவர் நீலமணிதாஸ் என்ற பிரசித்தி பெற்ற சாண்டோவுடைய சிஷ்யை. வங்காளத்திலுள்ள சகல பயில்வான்களுடையவும் மதிப்பைப்பெற்று விட்டார். 7 அடி நீளமும், ஒன்றரை அங்குல கனமும் உள்ள இரும்புக்கம்பிகளை வளைத்து மிக எளிதாகச் சுருட்டிவிடும் ஆற்றல் இவ்விளம்பெண்ணுக்கு உண்டு என்று கேட்கும் பொழுது அற்புதமாகவேயிருக்கின்றது.

## ராயல் அச்சுக்கூட திறப்பு விழா.

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்குசேலம்தோழர்ஆர்.நடேசன் அவர்களின் அச்சுக்கூடத்திறப்புவிழாவை முன்னிட்டு நகர பிரமுகர்கள் வியாபாரிகள், முனிசிபல் கவுன்சிலர்கள் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்கள் சுமார் 500 பேர்களுக்கு மேலாக ராயல் அச்சுக்கூடத்தின் மேல்மாடியில் கூடிவிட்டனர்.

தோழர் எ. எம். பாலசாமி அவர்களால் பிரேரேபிக்கப்பட சேலம் நகர சபைத்தலைவரான எஸ். எ. அய்யாசாமி அவர்கள் அக்கிராசனம் வகித்து முன்னுரையாக அச்சுக்கூடத்தின் அபிவிருத்திக்கான விஷயங்களைப்பற்றி எடுத்துக்கூறி தோழர் எஸ். கணேசசங்கரன் பி. ஏ. பி. எல். அவர்களை புதிய அச்சுக்கூடத்தின் திறப்பு விழா ஆற்று மாறு கேட்டுகொண்டார்.

கரகோஷத்தினிடையே தோழர் எஸ். கணேசசங்கரன் அவர்கள் எழுந்து சுமார் 1 மணிநேரம் மேல்நாட்டுத்தொழில் முறைக்கும் நம்மவர்கள் தொழில் முறைக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக்கூறி தோழர் நடேசன் அவர்களின் பொது நலத்தொண்டையும் கூறி அச்சுக்கூடத்தைத்திறந்து வைத்தார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் அச்சுக்கூடசொந்தக்காரரும் பொதுஜன ஊழியருமானதோழர் ஆர். நடேசன் அவர்கள் வந்தனேபசாரம் கூறினர். சந்தன தாம்பூலத்திற்குப்பின் கூட்டம் இனிது கலைந்தது.

## ஆரணியில சுயமரியாதைக் கூட்டம்.

16-12-34-ல் ஆரணியில் தோழர் வி. சி. நடேசன் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அது சமயம், காஞ்சிபுரம் நாஸ்திக சமதர்ம தோழர் சி. கே. குப்புசாமி அவர்கள் ஒரு அரிய சொற்பொழிவை நிகழ்த்தினர்.

(ஒரு நிருபர் எழுதுகிறார்)

## பிராமணரல்லாதார் வாலிபர் சங்கம் தூத்துக்குடி.

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம், சங்கத் தலைவரும், முனிசிபல் கவுன்சிலருமான தோழர் கூ. ஸா. ஆ. பெரியசாமி அவர்கள் தலைமையில் 15-12-34ந்தேதி சனிக்கிழமைமாலை 7 மணிக்கு நாகம்மாள் ஞாபகார்த்த சமதர்ம வாசகசாலையில் நடைபெற்றது. பிராமணரல்லாத வாலிபர்கள் அநேகர்விஜயம் செய்திருந்தனர். அடியிற்கண்டதீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு வந்தனோபசாரத்துடன் இரவு 8½ மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

நிறைவேறிய தீர்மானங்கள்.

(1) தோழர் கே. எம். பாலசுப்ரமணியம் பி. ஏ., பி. எல்., அட்வகேட் அவர்களை சென்னை மாகாணத்தின் சார்பாக இந்திய சட்ட சபைக்கு நியமனம் செய்யும்படி வைசிராய் அவர்களையும் சென்னை கவர்னர் அவர்களையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

(2) காலஞ்சென்ற தோழர் ஜே. என் ராமநாதன் அவர்களின் நிதிக்கு பொருள் சேர்த்து மதுரைக்கு அனுப்புவதற்கு தோழர்கள் கூ. ஸா. ஆ. பெரியசாமி, அ. து. சின்னசாமி, சு. உ. வெற்றிவேல், எம். என். ராஜன் இவர்களை கொண்ட கமிட்டி நியமிக்கப்பட்டது.

(3) ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டி கூட்டத்தை இம்மாதம் கடைசிக்குள் கூட்டுவித்து தோழர் ஈ. வெ. ரா. அவர்களின் திட்டத்தை ஒப்புக்கொள்ளும்படி ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களை மறுமுறையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது என ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

## விதவைகளின் புனர் விவாகம்.

முல்டான் ஆரிய சமாஜ் மண்டபத்தில் விதவைகளின் புனர் விவாகத்தைப்பற்றிப் பேச ஒரு மகாநாடு நடந்தது. மகாத்மா ஹம்ஸராஜ்தலைமை வகித்தார். பலபுருஷர்களும் ஸ்திரீகளும் வந்திருந்தனர். இக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. வாலிப விதவைகளுக்குப்புனர்விவாஹம் செய்வது வேதசாஸ்திரங்களுக்கு விரோதமல்ல ஆதலால் தாராளமாக அவ்விவாஹங்களை நடத்தி வைக்கவேண்டும்.

2. லாகூர் விதவாவிவாகசபையின் வேலைகளை இம்மகாநாடு பாராட்டுகிறது.

3. விதவைகளின் தொகை அதிகரித்து வருவதால் ஹிந்துக்கள் விதவைகளின் மறுவிவாகத்தை அதிகமாக ஆதரித்து அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும். (வீ. கே.)

## சுயமரியாதைத்திருமணம்.

மதுரை ஜில்லா நிலக்கோட்டை தாலுகா வாடிப்பட்டி கிராமத்தில் 10-12-34ந் தேதி பகல் 3மணிக்கு நீரோதான் தோழர் கே. வெங்கிடசாமிக்கும், ச. புதுப்பட்டி சொக்கம்மாளுக்கும் நடைபெற்ற சுயமரியாதைத்திருமணஒப்பந்தத்திற்குதோழர்மஞ்சுளாபாய் அவர்கள்தலைமைவகித்தார். தோழர்ஈ. வெ. ராமசாமி அவர்களும், சோழவந்தான் தோழர்கள் ஆவடையப்பன், சின்னசாமி, சுப்பிரமணியம், பட்டாபிராமய்யர், மற்றும் சிலரும் பேசினார்கள். பின் தலைவர் மஞ்சுளாபாய் அவர்களால் பெண்ணுரிமைக் கீதங்கள் பாடப்பெற்றது. எஸ். அங்கணன், வி. கோவிந்தன் அவர்களால்சுயமரியாதைக் கீதங்கள் பாடப்பெற்றது. தோழர் மஞ்சுளாபாய் அவர்கள் பெண்களுக்கு ஆண்கள் இழைக்கும் கொடுமைகளைப் பற்றியும், பிரபல காங்கிரஸ் வாதியும், மூன்று தடவை சிறை சென்றவருமானதோழர் சின்னச்சாமி அவர்கள் தோழர் ஈ. வெ. ராமசாமியால் சுயமரியாதை இயக்கம் தோற்றுவித்து மக்களுக்காகத் தொண்டாற்றி ஏழு தடவை சிறை தண்டனை அடைந்து சமதர்மத்தை நிலைநாட்ட அரும்பாடுபட்டு உழைத்தும் மூடப்பழக்க வழக்கவழக்கங்களை அடியோடு அழித்து பகுத்தறிவை வளர்த்து தொண்டுபுரிவதை மிகத்தெளிவாக சொற்பொழிவாற்றினர். பின்னர் வந்தனோபசாரத்துடன் சந்தனதாம்பூலம் வழங்கப்பட்டதுஎன ஒரு நிருபர்எழுதுகிறார்.

—0—

## சென்னை மயிலாப்பூர் பிராமணரல்லாதார் வாலிபர் சங்கம்.

மயிலாப்பூர் சுயமரியாதைச் சங்க கட்டிடத்தில் சென்னை மயிலாப்பூர் பிராமணரல்லாதார் வாலிபர் சங்கக் கூட்டம்10-12-34உ திங்கட்கிழமை மாலை திருவாளர் டி. நல்லசிவம் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் நடந்தது. அது காலை கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது. இந்திய சட்டசபைக்கு தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்களை நியமிக்கும்படியாக கனம் மேன்மை தங்கிய வைஸ்ராய் அவர்களையும், சென்னை மேன்மை தங்கிய கவர்னர் அவர்களையும் இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

கடந்த 15 ஆண்டுகளாக தாழ்த்தப்பட்டவர் விடுதலைக்கும், பொதுவாக இந்திய மக்கள் விடுதலைக்கும் தொண்டாற்றி வரும் தோழர் ஜெ. சிவ ஷண்முகம் எம். ஏ. முனிசிபல் கவுன்சிலர் அவர்கள் சென்னை சட்டசபை உபதேர்தலுக்கு பிரதிநிதியாக நிற்கின்றபடியால் நமது ஜஸ்டிஸ், காங்கிரஸ் கட்சியார்களை ஆதி திராவிடர் முன்னேற்றம் கருதி, போட்டி போடாமல் இருக்கும்படி இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

தோழர் ஜெ. என். ராமநாதன் அவர்கள் மரணமடைந்ததற்காக இக் கூட்டம் வருந்துவதுடன் தனது அனுதாபத்தை அன்னார் குடும்பத்திற்கு தெரிவித்துக் கொள்ளுகிறது. 9-12-34ல் சென்னை பொது ஜன கூட்டத்தில் ஜே. என். ராமநாதன் அவர்களின் குடும்ப உதவிக்காக பணம் சேர்ப்பதற்கு ஏற்பட்டுள்ள கமிட்டிக்கு இச்சங்கம் உதவி செய்கிறது.

என காரியதரிசி எழுதுகிறார்.

## தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு

முன்பே அறிவித்திருந்த படி 3-12-34 திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு வட ஆற்காடு ஜில்லா செங்குந்தர்களின் மகாஜனக்கூட்டம் ஒன்று திருவத்திபுரம் பக்ஷீஸ்வர ஆலயத்தில் தோழர் க. பொன்னுசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. கூட்டத்திற்கு சுற்றுப்பக்கத்திலிருந்து பலர்விஜயம் செய்திருந்தார்கள்.

தென்னிந்திய செங்குந்தர் மகாநாட்டை வட ஆற்காடு ஜில்லாவின் சார்பாக திருவத்தி புரத்தில் 26, 27-1—35ம் தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்துவதென்று தீர்மானித்து கீழ்க்கண்ட வரவேற்புக்கழகம் அமைக்கப்பெற்றது.

சமூகமகாநாட்டிற்கு திருவத்திபுரம் தோழர் லோகநாதமுதலியார் ஜில்லா போர்டு அங்கத்தினர் அவர்களையும், வர்த்தகர் மகாநாட்டிற்கு குடியேற்றம் தோழர் எம். வி. பீமராஜாமுதலியார், முனிசிபல் சேர்மன் ஜில்லா போர்டு மெம்பர், அவர்களையும், வாலிபர் மகாநாட்டிற்கு தோழர் எ. ஆர். செல்லப்பா அவர்களையும் வரவேற்புத்தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. பொதுக்காரியதரிசியாக தோழர் கே. எஸ். குப்புசாமி முதலியார் அவர்களையும் பொருட்காப்பாளர்களாக தோழர்கள் கு. அப்பாசாமி முதலியார் பட்டுமணிகை, பெ. முத்துசாமி முதலியார் திருவத்திபுரம் ஆகியவர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மகாநாட்டிற்குக் கூடிய வரையில் அதிகமான தொண்டர்களைத் திரட்டவேண்டுமென்று முடிவு செய்து திருவாளர்கள் பி. பொன்னம்பலம் முதலியார் தொண்டர் படைத் தலைவராகவும் வி. ஆறுமுகம் முதலியார் உப தலைவராகவும் நியமிக்கப் பெற்றனர்.

பந்தல் கமிட்டி, சாப்பாட்டுக்கமிட்டி, ஊர்வலக்கமிட்டி, விளம்பரசபை வசூல் கமிட்டி ஆகிய சப் கமிட்டிகள் பலவும் நியமிக்கப் பெற்றன. மகாநாட்டு வேலைகள் வெகு தீவிரமாக நடைபெற்று வருகின்றன. வசூல் கமிட்டியார் ஜில்லாவின் பல ஊர்களுக்கும் சென்று மகாநாட்டு வசூலை தீவிரமாகச் செய்து வருகிறார்கள். முதல் மகாநாட்டைப் போல் இம்மகாநாடு எல்லா வகையிலும் சிறப்பாகவே நடைபெறுவதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன என மகாநாட்டின்காரியதரிசிஎழுதுகிறார்.

## சுகாதாரக் கொண்டாட்டம்.

திருநெல்வேலி தாலுகா, சிவந்திபட்டி இந்து ஆதிதிராவிட ஸ்கூலில் 7-12-34 முற்பகல் ரேஞ்சு சுகாதார ஐ. சி. வி. தோழர் முத்தையா அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு, அக்கிராசனர் "தொத்து நோய்கள், மதுசாரம்" என்பன பற்றியும் ஷை ஸ்கூல் ஆசிரியர் தோழர் ஐ. எம் ராஜையா, "சுகாதாரவிழா" என்பது பற்றியும், பிரசங்கிக்கப்பெற்று, பந்தய போட்டியில் ஜெயித்த, மாணவர்களுக்கு பரிசுகளும் மற்றவாணவ—பொது ஜனங்கள் எல்லோருக்கும்தின் பண்டங்களும் வழங்கப்பட்டது. மானேஜர் சுடலைமுத்து அவர்களால் அக்கிராசனருக்கு மாலை சூட்டி கூட்டம் இனிது முடிந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## பெரியகுளம் தாலுக்கா கம்ம வாலிபர் மகாநாடு, லெட்சுமிபுரம்.

லெட்சுமிபுரத்தில் 12-12-34ல் பெரியகுளம் தாலுக்கா கம்ம வாலிபர்மகாநாட்டின் நான்காவது ஆலோசனைக் கூட்டம் உத்தமபாளையம் பாரதி ஆசிரியர் தோழர் நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர்கள் வீரலட்சுமி அம்மாள், டி. சின்னப்பா, பி. ஸ்ரீனிவாசன், சவுரிநாதன் முதலியபல தோழர்கள் பல அரிய விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## கலப்பு மணம்.

"பூலாங்குரிச்சி" மெ. மு. முத்துராமன் செட்டியாரவர்கள், குமாரன் தோழர் ராமனுதன் செட்டியாரவர்களுக்கும், ஆவினிப்பட்டி தோழர் ந. மு. ந. நல்லமுத்தப்ப செட்டியாரவர்கள் அன்னிய நாட்டிலிருந்து கொண்டு வந்த வளர்ப்புப்புதல்வி, செல்வி, லெட்சுமி அவர்களுக்கும் 2-12-34 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு மணமகன் இல்லத்தில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தனவணிகர் குலத்தில் இம்மாதிரி திருமணங்களுக்கு வாலிப இளைஞர்கள் இசைந்து நடைபெறுமானால் வணிகர் குலப் பெண் விலை மார்க்கட்டு தானுகவே குறைந்து விடுமென்பது திண்ணம். என எல். பி. காசிவிஸ்வநாதன் எழுதுகிறார்.

### யாரெல்லாம் நீதிக்கட்சியை

# வஞ்சித்தவர்கள், வஞ்சிக்கிறவர்கள்?

(தோழர் செ. தெ, நாயகம்)

நம் நாட்டில் பிறப்பால் உயர்வு தாழ்வு ஏற்பட்டிருக்கிறதென்பதும், அந்த ஏற்றத் தாழ்வை நிலைக்கச்செய்பவர்கள், அது நிலைப்பதால் பெரும்பலன் பெறும், பார்ப்பனர்கள்என்பதும், அந்த ஏற்றத்தாழ்வின் கொடுமையை விலக்குவதற்கு உறுதியான எளிய வழி, பிறப்பால் பிரிக்கப்பட்ட மக்கள் தொகுதிகள் யாவற்றிற்கும் ஒத்த உரிமை கொடுப்பது ஒன்றே என்பதும், நீதிக்கட்சியின் மூலக் கொள்கை. அதுவே அக்கட்சி உண்டானதற்கும், கொடுமைப் படுத்தப்பட்ட மக்கள் யாவரும் அதை ஆர்வத்துடன் வரவேற்றதற்கும், காரணம். அக்கட்சிப் போர்வை போர்த்துக் கட்சியின் முதலணியில் இடம் தேடிக்கொண்டவர்கள், தன்னலம் பற்றியோ, மடமையாலோ இந்த மூலக்கொள்கையைப்புறக்கணித்து நடந்த போதிலும், பிறர் உண்மைப் பற்றுடன் அக்கட்சியை விடாதிருப்பதற்குக் காரணம், அந்த மூலக்கொள்கையில் பின்னவர்க்கிருக்கும் உறம் பெற்ற நம்பிக்கையே.

2. நீதிக்கட்சிக்குச் சட்ட சபையில் குறடாவாயிருந்தவர். கட்சியை வஞ்சித்து நடந்தார் என்றும், அதற்காக அவரை அந்தப்படியிலிருந்து நீக்கிவிட்டதாகவும், எங்கும் பெரும் பேச்சாகவும், எழுத்தாகவும் இருக்கிறது. அவர் செய்த வஞ்சனை எனச் சொல்லப்படுவது, நடந்த சட்டசபை தேர்தலில், நீதிக்கட்சிக்குப் போதிய உதவி செய்யவில்லை என்பதும், எதிர்க் கட்சிக்கு வேண்டிய உதவி செய்தார் என்பதுமே. இது உண்மையாயிருந்தால், அப்படி வஞ்சனை செய்தவர்கள், செய்பவர்கள், அவர் ஒருவர் தானா? பிறர் இருந்தால், ஒன்று அவர்களை வஞ்சகத் தொழிலிருந்து தடுத்தாட்கொள்ளவேண்டும். முடியாவிட்டால், அவர்களை வஞ்சகர்களுடன் சேர்த்து வெளிப்படுத்த வேண்டும். இதுதான் ஒழுங்காகும்.

3. கடந்த சட்ட சபைத் தேர்தலில் நீதிக் கட்சியின் வெற்றிக்கு இடையூறு நேர்ந்தது, ஆட்களாலும், அவர்கள் பணத்தாலுமாத்திரமல்ல. தப்புச் செய்திகளையும், பொய்யுரைகளையும், நீதிக்கட்சியின் கொள்கைகளையும், செய்கைகளையும் தாழ்த்திய கட்டுரைகளையும், ஓயாது வெளிப்படுத்திய செய்தித் தாழ் முதலிய வெளியீடுகள் செய்த கேடு, பெரும்பணம் படைத்த ஆட்களும், அவர்கள் பணமும் செய்ததை விட வலிமை வாய்ந்திருந்தது. அவ்வாறு கேடு விளைவித்த செய்தித் தாட்களுக்கும், வெளியீடுகளுக்கும் செல்வாக் களித்தவர்கள் யார்? அவைகளை விலை கொடுத்து வாங்கினவர்கள் கொடுத்த பணத்தாலல்லவா அத்தாட்கள் கொழுத்துக் கும்மாளம் போட்டுக் குறும்பு செய்தன. தேர்தல் காலத்தில் நீதிக் கட்சியினர் ஒருவர் மாற்றானுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்துதவினாரென்றால், நீதிக் கட்சியினர் என்று தங்களைப் பறை சாற்றிக் கொண்டிருந்த பலர், பல நாட்களாக மாற்றான் தாட்களுக்குப் பல பத்தாயிரம் ரூபாய் கொடுத்து அவைகளை வளர்த்து விட்டார்களே; அவர்களுடைய வஞ்சகம் இவ்வொருவருடைய வஞ்சகம் என்று சொல்லப்படுவதற்கு நூறு மடங்கு அதிகப்பட்டது என்று நீதி உணர்ச்சி உள்ள ஒருவரும் மறுக்க முடியாது. இது மாத்திரமா? இக்கூறும்பு தாட்களின் பொய்யுரையை மறுத்து, உண்மையையும், நேர்மையையும் வெளியிட நீதிக் கட்சிப் பக்கம் போதிய செய்தித் தாட்கள் இல்லாத குறைக்கும் வஞ்சகத்தில் ஊறிய போலிக் கட்சியினர் தான் பெருங்காரணம். நீதிக்கட்சியின் தமிழ் தாளாகிய “திராவிடன்,” குற்றுயிராகக் கிடந்து சாவு குறியாக பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த காலத்தில், தாங்கள் தமிழ்தாள் படிக்கிறதில்லை என்று வெக்கங் கெட்டுப் பெருமை பேசிக்கொண்டிருந்தார்கள். தாயைத் தள்ளிய இந்த வஞ்சகர்கள் கட்சியின் ஆங்கிலத் தாளுக்குப் பணங்கேட்டால், அது ஒருவர் தாள் என்றும், மாற்றான் தாளைப்போல் சீர் பெற்று நடக்கவில்லை என்றும் நொண்டிச் சாக்குச் சொல்லி ஏமாற்றி வந்தார்கள். கட்சிக்கு உயிர்ப் பிச்சைக் கொடுத்த கட்சித் தலைவரே கட்சித் தாளுக்கு வேண்டிய பணம் செலவிடவேண்டுமென்ற, தங்கள் மானங்கெட்ட மனப்போக்கையும் வெளிப்படுத்தி வந்தார்கள். மாற்றான் தாளுக்குப் பணம் உதவித் தன் தாளை தரைமட்டப்படுத்திய இவர்களின் நீடித்த வஞ்சகம், தேர்தலில் தன் கட்சிக்கும், மாற்றான் கட்சிக்கும் ஒருங்கே உதவியதாகச் சொல்லப்படும் பழைய குறடாவின் தனி வஞ்சகத்தை விடப் பெரிதும் வன்மையுடையதல்லவா? இப்படிப் பட்ட இழி குண வஞ்சகர்க்ள், சொற்ப வரும்படி உள்ளவர்கள் முதல் பெரும் வரும்படியுள்ளவர்கள் வரை சிறு படிப்பாளி முதல், பெருங் கல்வியாளர்வரை, நீதி கட்சியால் கை தூக்கி விடப்பட்டவர்கள் முதல் நீதிக்கட்சியால் உயர எதிர் பார்ப்பவர்கள் வரை, எல்லாப் படியிலும் நிரம்பி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட வஞ்சகர்கள் அங்கங்கே ஒழிப்பிலும் மறைவிலுங் காலந்தள்ளுகிறார்கள். உருமாற்றி ஒதுங்கியிருக்கும் இருள் இடங்களிலிருந்து அவர்களை வெளிப்படுத்தி நல்லுருப்படுத்தி உண்மையாளாக்கி வைத்துக் கொள்ளவேண்டும். முடியாவிட்டால், தன்னுருவோடு கட்சியைவிட்டு அப்புறப் படுத்தவேண்டும். இரண்டிலொன்று உடனே செய்யாவிட்டால் கட்சி இளைத்துக்கொண்டே தான் போகும் அவர்களை யார் வெளியாக்குவார்கள் என்பதைப் பலர் ஆத்திரத்துடன் எதிர் நோக்கினார்கள்.

4. மக்களின் எல்லாத் தொகுதிகளுக்கும் ஒத்த உரிமை அளிக்கவேண்டும் என்ற கட்சிக் கொள்கையை சம்பள வேலைகளிலும் வற்புறுத்துவதில் கட்சித் தலைவர்கள் காட்டும் அக்கரை வேண்டிய அளவுக்கு ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இல்லை. அரசாட்சியில் நேரே சம்பளம் பெறும் வேலையில் மாத்திரமல்ல. அரசாட்சியின் பண உதவி பெறும், அல்லது அரசாட்சியின் பாதுகாப்பில் தொழில் புரியும், நிலையங்களில் சம்பளம் பெறும் வேலையிலும், மக்களின் ஒவ்வொரு தொகுதியினரும் அத்தொகுதியின் எண்ணிக்கை உரிமைக்குத் தக்கபடி வேலை பெற ஏற்பாடு செய்யவேண்டும். தெளிவாகச் சுருங்கச் சொல்லில் அரசாட்சி; நாட்டாண்மை, நகராண்மை, புகைவண்டி அரசாட்சியின் உதவி பெரும் தனி உடைமைப் பள்ளிக்கூடங்கள், வாசக சாலைகள், இவை ஒவ்வொரு துறையிலுமுள்ள வேலையில் ஒவ்வொரு படியிலும் பார்ப்பார்கள். அவர்கள் எண்ணிக்கை உரிமைப்படி நூற்றுக்கு மூவருக்கு மேல் வேலை பெறக்கூடாது. இப்படியே ஒவ்வொரு தொகுதிக்கும் இது பது நியமனத்தில் மாத்திரமல்ல. உள்ள வேலை முழுவதிலும் இந்தத் தாரணை இருக்கவேண்டும். பார்ப்பார்களும் அவர் எண்ணிக்கையின் உரிமைப்படிதோட்டி வேலையிலும், அமைச்சர் வேலையிலும் பங்கு பெற நீதிக் கட்சி உதவி புரியவேண்டும். பிறப்பால் வேற்றுமையுள்ள அளவும் இந்நீதி முறைக்கு இடமிருந்தே தீரும். இக்கொள்கையில் ஐயமுள்ளவர்கள், அதை வற்புறுத்தத் தயங்குபவர்கள், நீதிக் கட்சியில் இருக்கவோ, அதை நடத்தவோ கருதுவது வஞ்சகமாகும். அப்படிப்பட்டவர்கள் அமைச்சர்களாக இருந்தாலும் கட்சிக்கு வஞ்சகர்களே யாவார்கள். அப்படிப்பட்வர்களும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டாலொழிய கட்சி இளைத்துக்கொண்டேதான் போகும். கட்சித் தலைவர் இதிலும் மன உறுதி காட்டித் தன் திறமையையும், கட்சியின் கொள்கையில் தனக்குள்ள உண்மைப் பற்றையும் காட்டுவார் எனப்பலர் எதிர் பார்க்கிறார்கள்,

5. இவ்விரு வஞ்சக ஒழிப்பாவது உடனே நடைபெற்றாலொழிய அடுத்த மாகாணத் தேர்தலில் நீதிக்கட்சி பெருந்தோல்வி பெறும் என்றஞ்ச இடமாகும்.

---

## தஞ்சை ஜில்லா நான்காவது சுயமரியாதை மகா நாடு.

---

12-12-34ந் தேதி மாலை தஞ்சை சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தில் கூடிய தஞ்சை ஜில்லா 4-வது சுயமரியாதை மகாநாட்டின் வரவேற்பு கமிட்டியார், ஷை மகாநாட்டை தஞ்சையில் வருகிற 1935ந்தாம் வருஷம் ஜனவரிமாதம் 3-வது சனி, ஞாயிறு (19,20-1-35) களில் நடத்தி விட வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். ஜில்லாவில் உள்ள சுயமரியாதை தோழர்களும், அனுதாபிகளும் ஆங்காங்கு பொருள் திரட்ட வரும்தோழர்களுடன் கலந்து தங்கள் தங்களால் இயன்ற பொருளை சேகரித்துக் கொடுப்பதோடு தாங்களும் அம் மகாநாட்டில் கலந்து ஷை மகாநாட்டை வெற்றிகரமாய் நடத்திவைக்கும்படி கேட்டுகொள்ளுகிறது.

தலைவர், திறப்பாளர் முதலியவர்களின் பெயர்கள் அடுத்த அறிக்கையில் வெளியிடப்படுமென ஷை மகாநாட்டின் காரியதரிசி எழுதுகிறார்.

---

## கரூர் தென்னிந்திய நல உரிமைச் சங்கம்-

---

### அவசரக்கூட்டத்தின் நடவடிக்கை.

---

கரூர் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் அவசரக் கூட்டம். 13-12-34ந் தேதி காலை 9மணி சுமாருக்கு அதன் காரியாலயத்தில். உபதலைவர் தோழர் வேலாயுதம் அவர்கள் தலைமையில் கூடியது நிருவாக அங்கத்தினர்கள் பலரும் வந்திருந்தனர். கீழ்க்கண்ட தீர்மானத்தை தோழர் கே. எம். ராஜு பிரேரேபிக்க தோழர் எஸ். முத்தியாலு கிருஷ்ணன் ஆமோதிக்க, ஏகமனதாக நிறைவேறியது.

இந்தச் சங்கம் பிராமணரல்லாதாரியக்கத்தலைவரும், சிறந்த வக்கீலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களிடத்து அனுதாபம்காட்டி உழைப்பவருமானசென்னை அட்வோகேட் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்களை இந்தியசட்டசபைக்கு நாமினேஷன் அங்கத்தினராக நியமனம் செய்யும்மாறு மேன்மை தங்கிய இராஜப் பிரதிநிதி அவர்களை கேட்டுக்கொள்ளுகிறது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

# ஈ. வெ. ராவின் மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களின் சுற்றுப்பிரயாணம்.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, நீலாவதி, முத்துசாமி வல்லத்தரசு M. L. C., மஞ்சுளாபாய் ஆகியவர்கள 9-12-34ந் தேதி விருதுநகருக்கு வந்து சேர்ந்தார்கள்.

## யானையுடன் ஊர்வலம்.

ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் சுயமரியாதைத் தோழர்களும், ஏராளமானமக்களும் ஜேகோஷத்துடன்வரவேற்று மாலைகள்சூட்டிபெரியதொரு இரட்டைக் குதிரை பூட்டிய பீட்டின் வண்டியில் வைத்து முன் புறம் யானை செல்ல, வாத்தியங்கள் முழங்க ஆயிரக்கணக்கான பேர்களின் ஜே சப்தம் வானம் இடிபட பின்புறம் பல மோட்டார் வண்டிகள் வர பெருத்ததொரு கூட்டத்துடன் கடைவீதி வழியாய் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

பொது விடுமுறைக்காக கடைகள் எல்லாம் மூடப்பட்டிருந்தும் கடைகள் தோறும் ஊர்வலத்தை நிறுத்தி, நிறுத்தி மாலையிட்டு சந்தனம் பன்னீர் கற்கண்டு வழங்கப்பட்டு வந்தது.

மாலைகள் அடிக்கடி வண்டி நிறைந்து கொண்டே வந்தன.

ஊர்வலம் சுயமரியாதை வாலிபர் சங்கத்துக்குச் சென்றவுடன் அங்கு சற்று நிறுத்திய பிறகு ஒரு பிரபல திருமண நிகழ்ச்சிக்குச் சென்று அம்மண விழாவுக்கு தலைமை வகித்து பின் ஜாகைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு ஒரு விருந்து நடந்தது

பிறகு வெளியூர்களில் இருந்து வந்த பல தோழர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்கள்.

## பொதுக்கூட்டம்.

மாலை 7 மணிக்கு வெயிலு கந்தம்மன் ஆலயத்துக்கு முன்புறம் உள்ள காலி இடத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. பிரம்மாண்டமான ஜனக்கூட்டம் பல ஆயிரக்கணக்கில் வந்து கூடி இருந்தார்கள்.

பல பெண் மக்களும் வந்திருந்தார்கள். கூட்டத்துக்கு தோழர் முத்துசாமி வல்லத்தரசு M. L. C. (புதுக்கோட்டை) அவர்கள் தலைமை வகித்து கூட்டத்தின் நோக்கத்தையும், ஜஸ்டிஸ் கட்சியில் தற்காலம் ஏற்பட்டிருக்கும் சங்கடமான நிலைமையையும் பற்றி விவரித்துப் பேசினார்கள்.

பிறகு நீலாவதியம்மையார் அரசியலில் பெண் மக்கள் சம்மந்தப்படவேண்டிய அவசியத்தையும், ஆண் மக்கள் அவர்களுக்குச்செய்ய வேண்டிய கடமையைப் பற்றியும் எடுத்துப் பேசினார்கள்.

பிறகு மஞ்சுளாபாயம்மையார் சில பாட்டு பாடுவதன் மூலம் தொழிலாளர் கஷ்டங்களை விளக்கினார்.

பிறகு தோழர் ஈ. வெ. ரா. பேசியதாவது

## “தற்கால அரசியல் நிலைமை”

பின்னர் ஈ. வெ. ராமசாமி ‘தற்கால அரசியல் நிலைமை’ என்னும் விஷயமாக சுமார் இரண்டு மணி நேரம் விரிவாகப் பேசினார். அவர் பேசியதின் சுருக்கம் வருமாறு:—

தொழிலாள சோதரர்களின் க்ஷேமத்திற்கு இவ்வூரில மாதம் ஒரு முறை பூர்ண ஓய்வு ஏற்படுத்தி இருப்பது போற்றத்தக்கதாகும். இவ்விழாவைக் கண்டு நான் பெரிதும் சந்தோஷம் கொண்டேன் அவர்களுடைய நாளில் அவர்களைப்பற்றியே பேச நான் விரும்பி வந்தேன். ஆனால் இங்கு வந்த பின்னர் விருதுநகர் வாசிகள் ‘தற்கால அரசியல் நிலைமை’ ஜஸ்டிஸ் கட்சி, ஆகியவைகளைப் பற்றியும், எடுத்துக் கூறும்படி கேட்டதால் அதைக் கூற வேண்டியவனாய் இருக்கிறேன். இந்த சமயத்தில் இவைகள் எவ்வளவு முக்கியமானவைகளாக இருக்கின்றதோ, அவ்வளவு குழப்பமான விஷயங்களாகவும் இருக்கின்றன.

## ‘அரசியல் என்பது மக்களை ஏமாற்றும் இழிவான சூட்சி’

அரசியலின் பெயரால் இன்று உலகில் எங்கும் திருட்டு, புரட்டு, கொள்ளை, கொலை, பாமர மக்களை ஏமாற்றுதல் முதலாகிய இழி காரியங்கள் எல்லாம் நடக்கின்றன. கலகங்கள் கூட சில விடங்களில் நடக்கின்றன. எப்படி என்றால் அரசியல் சம்பந்தமான பிரசார கூட்டங்களில் கலகம் ஏற்பட்டு விடுகின்றது. மதத்தின் பெயரால் ஷை திருட்டு, புரட்டு சகலமும் நடந்த காலத்தில் மக்கள் குருட்டு நம்பிக்கையிலிருந்தார்கள். மக்களுக்கு பகுத்தறிவு ஏற்பட்டு சரி தப்பு என அறியும் யோக்கியதை வந்த பிறகு சோம்பேரி சுயநலக் கூட்டத்தார்களால் மக்களை ஏமாற்ற வேறுவித தந்திரம் பண்ணவேண்டுமென்ற நோக்கத்துடன் செய்யப்பட்டு அரசியலின் பெயரால் மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள். ஒருவன் மதபக்தியின் யோக்கியதையை விளக்கினால் எப்படி மதத்துரோகி என அழைக்கப்பட்டானோ அது போலவே இன்று தேசபக்தியின் யோக்கியதையை விளக்கினால் தேசத்துரோகி என நாமம் சூட்டப் பெறுகின்றான். ஜாதி, மதம் என்று முன்தெரியாத காலத்தில் ஏமாற்றிய கூட்டம் இன்று அதை விட்டு விட்டு தேசம், சுயராஜ்யம் என்று ஏமாற்றுகிறார்கள். இன்றைய அரசியலில் விளம்பரத்திற்கு அளவில்லை. அதைப்பற்றி ஜனங்களுக்குச்செய்யப்படும் மோசப்பிரசாரத்திற்கும் குறைவில்லை. இந்நாடு அரசியல் என்னும் வார்த்தையின் கீழ்சுயராஜ்ய வேலை என்பது செய்ய தகுதியுடையதா? என்பதைக் கவனிக்க வேண்டும். வெளிதேசக்காரர் எப்படி நடுநிலைமையாயிருந்து கவனிப்பாரோ அவ்வாறு கவனித்தால்தான் உண்மை விளங்கும். இங்குள்ள பிரிவுகளைப்பாருங்கள். இதை மறந்துவிட முடியாது. மதப்பிரிவின் தன்மை எப்படி இருக்கின்றது? காந்தியார்கூட ‘நான் ஹிந்துமதத்திற்காகத்தான் உயிர் வாழ்கின்றேன்’ எனக்கூறி உள்ளார். முஸ்லீம் வீரர்கள் அலி சகோதரர்கள் பேசுகையில் தாங்கள் முதலில் முஸ்லீம் என்றும் இரண்டாவது தான் இந்தியன் என்றும் பேசுகிறார்கள். கிறிஸ்தவன் தங்கள் தங்கள் வேத கட்டளை தான் பிரதானமென்றும், முதலில் கிறிஸ்துவன் என்றும், இரண்டாவதுதான் இந்தியன் என்றும் பட்டவர்த்தனமாகப் பேசுகிறார்கள்.

இது போலவே நமது தேசியப் பார்ப்பனர்களும் தாங்கள் முதலில் வருணாச்சிரமப்பிராமணர்கள் பிறகுதான் இந்தியர் என்கிறார்கள்- இந்தியன் எனும் ஒரு தலைப்பின் கீழ் யாவரும் வருவதற்குள் தங்கள் தங்கள் மதத்திற்கு பந்தோபஸ்து செய்யப்பார்க்கின்றார்கள். காந்தியார் முதல் அதையே தான் சுயராஜ்யம் என்கின்றார்கள். நான் இவ்விடத்தில் மிகைப்படுத்தி கூறுவதாக எண்ணக்கூடாது. இந்தியர் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய லண்டன் மகாநாடுகளில் என்ன தாண்டவமாடிற்று? மத விஷயங்களேதான்.

ஒருக்கால் இந்தியர்கள் இப்படி சண்டைபோடட்டுமென அப்படிப் பட்டவர்களை சர்க்கார் அழைத்ததாய்க் கூறலாம். ஆனால் மத சம்பந்தமுடையவர்களைக் கூப்பிடாவிட்டால் நாஸ்திகர்களையா கூப்பிடுவது? பிறகு அது புகார் செய்யப்படுமல்லவா? முஸ்லீம் லீக் ஏற்படுத்தப்பட்டு உழைத்து வருகின்றது. கிறிஸ்தவர்கள் தாங்கள் சொற்பதொகையினர் என்று கூறி தங்கள் விகிதாச்சாரம் பற்றி பேசுகின்றார்கள். பார்ப்பனர்கள் ‘வருணாச்சிரமம்; வருணாச்சிரம சுயராஜ்ய சங்கம், இந்துமகாசபை முதலியவை ஏற்படுத்தி வேலை செய்து வருகிறார்கள். வகுப்பு சம்பந்தமாய் வந்த தீர்ப்பு விஷயமாய் நடைபெறும் விஷயம் யாவரும் அறிந்ததே. மாளவியாஜியும் அது காரணமாகவே விலகிக்கொண்டார்.

## பிராமணரல்லாதார் இயக்கம்.

ஹிந்துக்களில் தென்னாட்டில் சென்ற 18 வருடகாலமாய் பிராமணர்—பிராமணரல்லாதார் விவகாரம் நடந்து வருகின்றது. அரசியல் கிளர்ச்சி சம்பந்தமாய் நம் மக்களுக்கு பெருத்த பதவிகள், பட்டங்கள் (ராஜா, பரம்பரை ராஜா பட்டங்கள்) கிடைக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் ஏழைமக்கள் கஞ்சிக்குத் திண்டாடுகின்றார்கள். தொடக்கூடாத—கிட்ட வரக்கூடாத பறையர்கள், சூத்திரர்கள் இன்னும் இருந்துதான் வருகிறார்கள். அவர்களின் பிரதிநிதியாய் சென்று இருப்பவருக்கு மாதம் 5000, 6000 சம்பளம் கிடைக்கின்றது. வருணாச்சிரமமும் ஜெயித்து விட்டது. ‘நாட்டிற்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்கு புல் சுமக்கும் தொழில் போகாது’ என்னும் பழைய காலப்பாட்டி மொழிபோல் தோட்டிக்கு இன்றும் இன்னும் வரப்போகும்

(ராமராஜ்ப) சுயராஜ்யத்தாலும் புல் சுமக்கும் வேலையும், கக்கூசு அள்ளும் வேலையும்தான் இருக்கப் போகின்றது. தோட்டிக்கும், பார்ப்பானுக்கும் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை, ஏற்படப்போவதுமில்லை. நம் பணத்தை வெளி நாட்டிற்குப்போகாமல் தடுத்து உள் நாட்டில் விட்டுவைத்தால், உள் நாட்டு முதலாளிகளும், வக்கீல்களும், டாக்டர்களும், வியாபாரிகளும், புரோகிதர்களும் சுகமடையலாம். பகல் முழுதும் உழைத்தும், பலராலும் இழிவுபடுகின்ற—கஷ்டமடைகின்ற அவனுக்கு விடுதலையுண்டாகும்படியான திட்டம் அதில் என்ன என்று பாருங்கள்.

சுயராஜ்யம் என்றால் என்ன?

சுயாட்சி என்பதற்கு அடிமைத்தனத்தை நீக்கி நாட்டை நாமே ஆள்வது என பொருள் வைத்துக் கொள்வோம். அயல் நாட்டார் போய்விடுகின்றார்கள். பின்னர் யார் கையில நாடு இருக்கும்? நம் நாட்டு முதலாளிகள், ஜமீன் தார்கள், டாக்டர்கள், வக்கீல்கள் புரோகிதர்கள் ஆகியவர்களிடமே தான் இருக்கும். அதனால் ஏழைகளுக்கு லாபமென்ன?

அவ்வாறு அயலானிடம் ராஜ்யமில்லாமல் தன்கையில் ராஜ்யத்தை வைத்திருக்கும் இங்கிலாந்து தேசத்தை எடுத்துக் கொள்வோம். அங்கு 4½ கோடி மக்கள் இருக்கின்றார்கள். ஒருவரும் அந்நுபோய் சுரண்டவில்லை அவர்கள்தான் வெளிஇடங்களிலிருந்து சுரண்டிபோய் கொட்டுகின்றார்கள். அவர்கள் பணம் வெளியே போவதில்லை. அந்த தேச ராஜாவே, பார்லிமெண்டு மெம்பர்களே ஆளுகிறார்கள். அப்படி இருந்தும் அங்கு கஷ்டமடைகின்றவனுக்கு சுபிட்சம் ஏற்படவில்லை, 70லக்ஷ மக்கள் உடல்வலிஇருந்தும் வேலையற்று உணவில்லாது திண்டாடுகின்றார்கள். அதை ராஜா ஆள்கின்றார் எனக் கூறலாம். முடிமன்னர்களை துரத்தியடித்து "குடிகளே ஆளும் குடி அரசு" நாடுகளைப் பாருங்கள். கெய்சர் சக்கரவர்த்தியை விரட்டியடித்த ஜெர்மனியில் தெருக்களில் உணவு கிடைக்காமல் பலர் திரிகின்றார்கள். வேலைக்குத் தக்க கூலியும் கிடையாது. ஆனால் அது யுத்தத்தினால் கடன்பட்டு கஷ்டப்படுகின்றதென் றுவாதிக்கலாம். உலகத்தில் குபேரநாடு என மதிக்கப் படும் அமெரிக்க குடியரசு நாட்டைப்பாருங்கள். அது அன்னியநாட்டு ஆட்சியை ஒழித்து அந் நாட்டுக்குடிகளால் கோடிகணக்கில் ஓட்டுப்பெற்ற குடிஅரசு பிரசிடெண்டேதான் இருந்து ஆட்சி நடத்துகிறார். அந்நாட்டு வியாபாரிகள் மணிக்கு ஆயிரக்கணக்கில் டாலர்கள் சம்பாதிக்கின்றார்கள். அந்நாட்டு நிலச்சுவான்தார்கள் விளைவில் ஏக்கராவுக்கு 500 ரூ. 600 ரூ. வெள்ளாமை அனுபவிக்கிறார்கள். 50, 60 மாடி உள்ள வீடுகளில் முதலாளிகள் வசிக்கின்றனர். 10, 15 மாடி வீடுகளை ஒரு தெருவிலிருந்தும் மற்றொரு தெருவிற்கு ரதம்போல் நகர்த்திக் கொண்டு போகின்றார்கள். பெரிய ரசாயன நிபுணர்கள் வாழ்கின்றார்கள். அங்கும் 2கோடி மக்கள் வேலையில்லாது திண்டாடுகின்றார்கள். 1ஜதை உடுப்புடன் 6, 7 பேர்களைக்கொண்ட குடும்பம் காலம் தள்ளுகின்றது. மக்கள் படுக்க இடமின்றித் தவிக்கின்றனர். அன்னார்களுக்காக என்ன நடக்கிறது? வேலை நேரத்தைக்குறைத்து அதன் மூலம் சிலருக்கு வேலை கொடுக்கின்றனர். தொழிலாளர்களுக்கு சர்க்காரே சம்பளம் நிர்ணயம் செய்கின்றது. எப்படி இருந்தும் அவர்கள் கஷ்டம் நீங்கினபாடில்லை. இங்கு சுயராஜ்யம் வந்தாலும், குடி அரசு ஆனாலும் பார் வந்தாலும் கஷ்டப்படுகின்றவர்களுக்கு என்ன பயன் ஏற்படும்? ஒரு உதாரணம் பாருங்கள். படிப்பு இல்லாத நம் கையிலிருந்து சென்ற 40வருடத்தில் 100க்கு 6என்பது 8ஆக உயர்ந்துளது நம் மாகாணத்தில் தான். ஜஸ்டிஸ் கட்சி இருக்கின்றது. அது துரோகக்கட்சி ஆதலால் ஒன்றும் செய்யவில்லையென்று வைத்துக் கொள்வோம். பம்பாய், ஐக்கியமாகாணம், கல்கத்தா ஆகிய மாகாணங்களின் நிலைமை என்ன? இங்கு கல்வி மந்திரியாய் "ஜஸ்டிஸ் தேசத்துரோக" தோழர் குமாரசாமி ரெட்டியார் இருந்தார். ஆனால் பம்பாயில் தேச பிரியர்தான இருந்தார்களே என்ன ஆச்சுது? அரசியல்கஷ்டப் படுபவர்கள் ஏழைகள்தான். உயிர் விடுப்பவர்களும் ஏழைகள்தான் அனுபவிப்பவர்கள் கோடீஸ்வரர்களும், புரோகிதர்களுந்தான்.

என்ன சொல்லி ஜெயித்தார்கள்?

இந்திய சட்டசபைத்தேர்தலில் காங்கிரஸ் வாதிகள் ஜெயித்தார்கள். என்ன சொல்லி வாக்குகேட்டார்கள் "சமூக சம்பந்தமாய் சபையில் ஏதாவது தீர்மானம் வந்தால் ஆதரிப்பதில்லை. அப்படி மசோதாக்கொண்டுவருவதுமில்லை" என்றும் "ஒடுக்கப்பட்டவர்கள், ஜாதிதீண்டாமை, உயர்ஜாதி, யோக்கியம், ஆகியவைகள் நிரந்தரமாயிருக்கபந்தோபஸ்தும்" கூறினர். தோற்ற ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றிசொல்லுவதில் எனக்கு அநுதாபமுண்டு சுயமரியாதை இயக்கத்துக்கு அவர்கள் சென்ற 8வருடகாலங்களாக ஆதரவளித்து வந்திருக்கின்றார்கள் முதலில் பெண்கள் ஓட்டுரிமையை பற்றி கேட்டவர்கள் ஜஸ்டிஸ் கட்சியார்களே. ஏழைகளுக்குக் கட்டாயப் படிப்பு கொடுக்க ஏற்பாடு செய்தவர்கள், ஜஸ்டிஸ்காரர்களே. எல்லா ஜாதி மதத்திற்கும் அரசியல் சம சுதந்திரம் கொடுத்தது ஜஸ்டிஸ் கட்சி, அப்படியிருக்க ஜஸ்டிஸ் கட்சி துரோகக்கட்சி எனக்கூறி விஷமப்பிரசாரம் செய்து தேர்தலில் ஜெயித்தார்கள் என்று கூறினர்.

கடைசியாக தொழிலாளர்களின்நன்மையை பொட்டி சில வார்த்தைகள் கூறியபின் இரவு 10 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

விருதுநகரிலிருந்து காலை 4 மணி வண்டியில் புறப்பட்டு தோழர்கள் ஈ. வெ. ரா. மஞ்சுளாபாய் முதலியவர்கள் காலை 7-மணிக்குவாடிப்பட்டி ஸ்டேஷன்வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்து மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாய் ஊருக்குள் அழைத்துச் சென்றார்கள். மற்ற நிகழ்ச்சிகளை 6-ம் பக்கத்தில் பிரசுரித்திருக்கிறது.

சோழவந்தான்.

பிறகு வாடிபட்டியில் இருந்து பகல் 3-மணிக்குப் புறப்பட்டு சோழவந்தானுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு மாலை 7 மணிக்கு ஆற்றங்கரையில் தோழர் சின்னசாமி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சுப்ரமண்யம், வெங்கிடசாமி, பட்டாபிராமய்யர், ஆவுடையப்பா, அவர் சகோதரர் முதலிய சுமார் ஆயிரம் பேர்கள் வரையில் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர் முகவுரைக்குபின் தோழர் மஞ்சுளாபாய் சமதர்ம பாடல்கள் பாடியபின் தோழர் ஈ. வெ. ரா. "அரசியல் சூக்ஷியும், பார்ப்பனரல்லாத மக்களும்" என்பது பற்றி ஒரு நீண்ட உபன்யாசம் செய்தார், இரவு தோழர் கண்ணுபிரம் அவர்கள் இல்லத்தில் போஜனம் நடந்தது,

அருப்புக்கோட்டை.

பிறகுசோழவந்தானில்இருந்து அருப்புக்கோட்டைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். அங்கு தோழர்வீரைய்யா அவர்கள்ஜாகையில்தங்கி இருந்தார்கள் மாலை3½-மணிக்குசொக்கலிங்கம் முகம் தேவாங்கர் ஸ்கூலுக்குஎதிரில்தோழர் மல்லையா அவர்கள் தலைமையில் ஒரு பிரம்மாண்டமான கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு நாடார் மக்களும், தேவாங்கர் மக்களும் பெண்களும் மற்ற பலருமாக சுமார் 2000 பேர்களுக்கு மேலாகவே விஜயம் செய்திருந்தார்கள். மழை தூரியும் கூட ஒருவருமே நகராமல் 2½-மணிநேரம் "தொழிலாளர் விடுதலை" என்பது பற்றிய பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

கீழ ஈரல்.

பிறகு 11-ந் தேதி இரவு 10 மணிக்குமேல் அருப்புக் கோட்டையிலிருந்து புறப்பட்டு விருதுநகர்வழியாய் கோவில்பட்டிக்கு12 ந்தேதி காலை 6-மணிக்குத்தோழர் ஈ. வெ. ரா. மஞ்சுளாபாய் ஆகியவர்கள் வந்ததும் ரயில்வே ஸ்டேஷனில் மாலையிட்டு நேரேகீழ ஈரலுக்கு அழைத்துச செல்லப்பட்டார்கள்.

அங்கு தோழர் ஈ. வெ. ராமசாமி, மஞ்சுளாபாய் ஆகியவர்கள் வாத்தியங்களுடன் ஊர்வலமாய் சுமார் ½-மைல் தூரம் அழைத்துச் செல்லப்பட்டார்கள். திருமணத்திற்குப் பல ஊர்களிலிருந்தும் பெண்களும், ஆண்களுமாகசுமார் 2000-க்கு மேற்பட்ட ஜனங்கள் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத் தக்கது.

தூத்துக்குடியில் இருந்து தோழர்கள் பெரியசாமி, வைகுண்டம், பெருமாள் முதலிய 10, 20 பேர்களும், திருநெல்வேலியில் இருந்து தோழர் முருகலிங்கம் அவர்களுடன் சுமார் 5, 6 பேர்களும், மற்றும் அருப்புக்கோட்டை, விருதுநகர், சாத்தூர், முத்துராமலிங்கபுரம் முதலிய பல ஊர்களில் இருந்தும் பல தோழர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

திருமண ஒப்பந்த நிகழ்ச்சி சரியாய் 1 மணிக்கு துடங்கியது. 3 ஜதை மணமக்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு மண்டபத்தில் வீற்றிருந்தார்கள். நிகழ்ச்சிக்கு தோழர்ஈ. வெ. ராமசாமியை அக்கிராசனம் வகிக்குமாறு தூத்துக்குடி தோழர்வைகுண்டம் அவர்கள்கேட்டுக் கொள்ள ஈ. வெ. ரா. அவர்கள் தலைமைவகித்தது திருமணம் என்பது பற்றி சில வார்த்தைகள் சொல்லி இத்திருமண நிகழ்ச்சியில் மணமக்களைத் தவிர மற்றெவருக்கும் யாதொரு வேலை

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க

# பகுத்தறிவு.

ஈரோடு, 1934-௵ டிசம்பர்-௴ 23-௳.

## ஜஸ்டிஸ் கட்சி.

ஜஸ்டிஸ் கட்சியைப்பற்றி பார்ப்பனர்கள் குறை கூறி வருவதையும், அதை "வெட்டி 500கஜ ஆழத்தில் புதைத்து விடவேண்டு"மென்று தோழர்கள் சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் சொல்லுவதையும் நமது பார்ப்பனரல்லாத மூடப்பாமர ஜனங்கள் நம்பி விடுகிறார்கள் என்பது மாத்திரமல்லாமல் பார்ப்பனரல்லாதாரிலேயே படித்த பகுத்தறிவுள்ள மக்கள் என்பவர்களும் கூட அப்பார்ப்பனர்களுடன் கூடிக்கொண்டு குலத்துரோகிகளாய் நடித்து வருவதைப்பார்த்து வருகிறோம்.

பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஏற்பட்டு சுமார் 15-வருஷகாலமே ஆயிருந்தாலும் கூட அது ஏற்பட்ட பிறகு இந்த நாட்டுக்கு 100க்கு 97 பேர்களாய் உள்ள பார்ப்பனரல்லாதார் சமூகத்துக்கும், சிறப்பாக தாழ்த்தப்பட்ட சமூகத்துக்கும் எவ்வளவு பயன் அளித்து வந்திருக்கின்றது என்பதை உணர்ந்தால் பார்பனர்களின்சூட்சியும், அவர்களுக்கு உதவி செய்யும் மூடர்களுடையவும், கூலிகளுடையவும், குலத்துரோகிகளுடையவும் யோக்கியதையும் சிறிதாவது விளங்காமல் போகாது.

இதற்குச் சமீபத்தில் நடந்த ஒரு விஷயத்தை சின்ன உதாரணமாக காட்ட ஆசைப்படுகின்றோம்.

அதாவது இவ்வருஷம் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் உத்தியோகத்துக்கு 87 பேர்கள் சர்க்காருக்கு தேவை இருந்ததால் அதைப் பூர்த்தி செய்ததில்பார்ப்பனர்களுக்கு 16 ஸ்தானங்கள் மாத்திரம் கொடுக்கப்பட்டு விட்டு பாக்கி 71-ஸ்தானங்கள் பார்ப்பனரல்லாதார்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த 71ஸ்தானங்களிலும் ஆங்கிலோ இந்தியருக்கு1, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 11, கிறிஸ்தவர்களுக்கு 13, முகமதியர்களுக்கு 15 ஸ்தானம் வழங்கப்பட்டு மற்ற "ஜாதி இந்துக்கள்"என்போர்களுக்கு 31 ஸ்தானமும்வழங்கப்பட்டிருக்கிறது ஜனகணித விகிதாச்சாரப்படி பார்த்தால் பார்ப்பனர்களுக்கு அவ்வளவு (16) ஸ்தானங்கள் வழங்குவது மிகமிக அதிகமானாலும் ஜஸ்டிஸ் கட்சி என்பதாக ஒரு "உத்தியோக வேட்டைக்கட்சி" இல்லாதிருக்குமானால் இந்த 87 ஸ்தானங்களும் அந்த திருக்கூட்டத்தாருக்கே போயிருக்கக்கூடும் என்பதில் எதாவது சந்தேகம் இருக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

சப்இஸ்பெக்டர் வேலை என்பது விளையாட்டான உத்தியோகம் என்று யாரும் மதித்துவிட முடியாது.

தென்னிந்தியாவில் போலீஸ் இலாக்காவிலும், முனிசீப்புஇலாக்காவிலும் (நிர்வாகம், நீதி என்கின்ற இரண்டு இலாக்காவிலும்) பார்ப்பனர்கள் ஆதிக்கம் இல்லாதிருந்து இருக்குமானால் நேற்று நடந்த இந்திய சட்டசபைத்தேர்தல்களின் முடிவு இந்தப்படி ஆயிருக்காது என்பதற்கு அனேக ஆதாரங்கள் காட்ட நம்மால் முடியும். இது ஒருபுறமிருக்க இந்தநாட்டுக்குப் பழம்பெரும் குடி மக்களாகிய பார்ப்பனரல்லாதார் நிலை இந்த 20ம் நூற்றாண்டிலும் சூத்திரராயும், சண்டாளர்களாயும் மதிக்கப்படவே முடியாது. ஆகவே கப்பலுக்கு சுங்கான் எப்படி முக்கிய கருவியோ அது போல் மக்களை நடத்துவதற்கு போலீசும், முனிசீப்பும் சுங்கான் மாதிரியாய் இருந்து வருகின்ற அவ்வளவு முக்கியமானதாகும்.

அப்படிப்பட்ட பதவியாகிய போலீசில் இந்நாட்டில் ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுவதற்கு முன் எப்படி இருந்து வந்தது என்பதும் இன்று எல்லா மத—வகுப்புக்காரர்களுக்கும் இடம் கிடைக்கும்படி செய்தது ஜஸ்டிஸ் கட்சியா அல்லது காங்கிரசா என்பதும் யோசித்துப்பார்த்தால் உண்மை விளங்கிவிடும்.

ஆனால் "உத்தியோகம் தான் பெரிதா தேசம் பெரிதா" என்று பார்ப்பனர்கள் நம்மைப்பார்த்து கேள்விகள் கேட்பார்கள். பார்ப்பனர்களது கூலிகளும் அடிமைகளும் இதற்குப் பின்பாட்டும் பாடுவார்கள்.]

உத்தியோகத்தை மனதில் வைத்தே தேசம், தேசாபிமானம் என்று பார்ப்பனர்கள் பேசிவரும் இரகசியம் பார்ப்பனரல்லாத "தேசாபிமானிகள்" பலருக்குத் தெரியாது என்பதோடு பலர் தெரிந்தும் தங்கள் பிழைப்புக்கு வேறு விதி இல்லாமல் பின்பாட்டுப்பாடுகிறார்கள் என்றே நினைக்கிறோம்.

இன்று தமிழ்நாட்டில் உள்ள எல்லா தேசபக்த பார்ப்பனர்களையும் எடுத்துக்கொண்டால் அவர்களது பிள்ளை குட்டிகள் பேக்துப்பிறார்கள் எல்லாம் எதைஎதிர்பார்த்துஇன்று வாழுகின்றார்கள்-வளர்க்கப்படுகின்றார்கள்-S. S. L. C., F.A, B A,M.A , BL.M. L.முதலிய படிப்புகள்படிப்பிக்கப்படுகின்றார்கள் என்பவைகளைக் கவனித்தால்பார்ப்பனர்கள் தேசாபிமானத்தைப்பிரதானமாகவா அல்லதுஉத்தியோகத்தைப் பிரதானமாகவா கருதியிருக்கிறார்கள்என்ற இந்த சூட்சி விளங்காமல் போகாது. பார்ப்பானர்கள் சர்க்கார உத்தியோகத்தை எதிர்பார்க்காமலும், நம்பி இருக்காமலும் வெறும் புத்திக்காகவும் அறிவுக்காகவும் தேச பக்திக்காகவுமே படிக்கிறார்கள் என்று இந்த நாட்டில் இன்று எந்த முட்டாளாவது கருதி இருக்கிறாரா என்று கேட்கின்றோம்.

ஆகவே உத்தியோகத்தையே பூராவும் நம்பி உயிர் வாழும் ஒரு கூட்டம்—உத்தியோகத்திலேயே 100-க்கு 70, 80, 90 கணக்கில் புகுந்துகொண்டும், நத்திக்கொண்டும் மற்றவர்களை உள்ளே விடவொட்டாமல் சூட்சி செய்து வயிறு பிழைக்கும் ஒரு கூட்டம்—அதற்காகவே தங்கள் பிள்ளை குட்டி பேத்து பிறர்களை தர்ப்பித்து செய்து கொண்டு அரசாங்க ஆதிக்கத்தைக் கைப்பற்ற எல்லாவித இழிதொழிலையும் கையாடும் ஒரு கூட்டம்.

"உத்தியோகம் பெரிசா தேசம் பெரிசா" என்று உத்தியோகத்தில்100-க்கு 25-வீதம்கூட இல்லாதநம்மைகேட்பதாயிருந்தால் இதில்யோக்கிய பொறுப்போ, நாணயமோ கடுகளவாவது இருக்க முடியுமா என்று கேட்பதோடு இதை கடுகளவு அறிவாவது இருக்கும்மனிதன் நம்ப முடியுமா என்றும் கேட்கின்றோம்.

இந்த சூட்சிகளை வெகு காலமாக அனுபவத்தில் தெரிந்து அனுபவித்து வந்த சர். தியாகராயர், டாக்டர் நாயர் போன்ற மேதாவி—அறிஞர்கள் தான் உத்தியோகத்தில் விகிதாச்சாரம் கிடைக்க வேண்டும் என்கின்ற கொள்கையோடு இந்த ஜஸ்டிஸ் கட்சியை ஆரம்பித்தார்களே ஒழிய மற்றபடி வெள்ளைக்காரர்களே எல்லா உத்தியோகத்தில் இருக்க வேண்டுமென்றோ, இந்த நாட்டை என்றென்றைக்கும் வேறுநாட்டாரே ஆள வேண்டுமென்றோ கருதி அல்ல என்பது நமது அபிப்பிராயம்.

இந்த இயக்கத்தின் பயனாய் பார்ப்பனர்களின் ஏக போக, (உத்தியோக) அனுபவிப்பு குறைந்த பிறகு தான் பார்ப்பனர்கள் "உத்தியோகம் வேறு, தேசாபிமானம் வேறு" என்றுசொல்ல ஆரம்பித்தார்களே தவிர அதற்கு முன்பு வரை உத்தியோகங்களே தேசாபிமானமாய் இருந்து வந்தது யாரும்அறியாததல்ல. உதாரணமாக ஜஸ்டிஸ் கட்சி ஏற்படும் வரை காங்கிரஸ் பிரசிடெண்டுகளும், காரியதரிசிகளும் ஹைகோர்ட் ஜட்ஜுகளாகவும், நிர்வாக சபை மெம்பர்களாகவும் இருந்து வந்ததே போதுமானதாகும்.

ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுவதற்கு முன்பு தீண்டப்படாதார் நிலை எப்படி இருந்தது என்பது இப்பொழுது கூலிக்கு மாரடிக்கும் சில பச்சகாள தேசபக்தர்களுக்கும், அரை டிக்கட்தேச பக்தர்களுக்கும் தெரியாவிட்டாலும் ஒரு40 வயதுக்கு மேல்பட்ட பார்ப்பனர்—பார்ப்பனரல்லாத 'தேசபக்தர்" எவரும் அறிந்ததேயாகும். அப்படிப்பட்ட கூட்டத்திற்கு இன்று போலீஸ் இலாகாவில் சப் இன்ஸ்பெக்டர் பதவியில் 87க்கு 11 ஸ்தானங்கள் வழங்கப்பட்டிருக்கிறது என்றால் அந்த சமூகத்துக்கு காங்கிரஸ்சமுதாயத்துறையிலோ, உத்தியோகத்துறையிலோ சாதித்தது என்ன என்பது நமக்குவிளங்கவில்லை.

சர்க்காருடையவும், ஜஸ்டிஸ் கட்சியாருடையவும் ஆதிக்கத்தில் உள்ள ஸ்தலங்களாகிய உத்தியோகம், சட்ட சபை, ஸ்தல ஸ்தாபனம், ரயில் வண்டி, கச்சேரிகள், ரோட்டுகள் பள்ளிக்கூடங்கள் முதலாகிய இடங்களில் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமை வழங்கி அவர்களது சுயமரியாதை காப்பாற்றப்பட்டிருப்பதை எவராவது இன்று மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

ஆனால் பொது ஜனங்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் காங்கிரசினுடையவும், பார்ப்பனர்களினுடையவும் ஆதிக்கத்தில் இருந்து வரும் கோவில், குளம், சத்திரம், சாவடி முதலிய இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்ன செய்தார்கள் என்பதை ஒரு சிறு விரல் விட்டு சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம்.

எந்தப்பார்ப்பனர் பள்ளிக்கூடத்திலாவது ஒரு ஆதிதிராவிடருக்கு வாத்தியார்வேலையாவது கொடுத்தார்களா மாணாக்கனாகவாவது சேர்த்துக்கொண்டார்களா? "சும்மாஇருக்கும்சங்கையூதிக்கெடுத்தான்பண்டாரம்" என்பதுபோல்கோவில்களைப் பற்றிலட்சியமே இல்லாத தாழ்த்தப்பட்ட சமூகத்தாரிடையில் புராணப் பிரசங்கம் செய்வதின் மூலம் அவர்களுக்கு கோவில் வெறியை உண்டாக்கி அதன் பெயரைச் சொல்லி கோவில் பிரவேசத்துக்கு சத்தியாக்கிரகம் செய்வதாயும், பட்டினி கிடப்பதாயும் சொல்லி மக்களை ஏமாற்றி 10 லட்சக் கணக்கில் பொருள் பரித்து கடசியாக "பொது ஜனங்கள் பக்குவமாக இல்லை ஆதலால் கோவில் பிரவேசம் கூடாது" என்று சொல்லிவிட்டதைத் தவிர அந்தப்பணத்தில் சட்டசபைக்குப்போக சௌகரியம் செய்து கொண்டது தவிர வேறு என்ன செய்ய முடிந்தது என்று கேட்கின்றோம்.

காங்கிரஸ் பார்ப்பனர்கள் உத்தியோகத்துக்குத்தான் "உத்தியோகம் பெரிதா தேசம் பெரிதா" என்று கேட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள். ஆனால் அதே பார்ப்பனர்களை ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் "தேசம் பெரிதா கோவிலில் சென்று சாமி தரிசனம் செய்வது பெரிதா" என்று கேட்டால் அப்போது என்ன சொல்லுவார்கள் என்பது விளங்கவில்லை.

ஆனால் அதற்கும் ஒரு தந்திரமான பதில் சொன்னாலும் சொல்லுவார்கள். அதென்னவென்றால் "கோவிலுக்குள் செல்லவும், சுவாமிதரிசனம் செய்யவும் சுயராஜ்யம் வந்தால்தான் முடியும் இல்லாவிட்டால் முடியாது" என்று சொல்லி ஏமாற்றி விடுவார்கள். அதையும் நம்ம சோணகிரிகள் நம்பி விடக்கூடும்.

இவை எப்படியோ போய்த்தொலைந்தாலும்இன்று தாழ்த்தப்பட்ட சமூகம் 100ல 13 ஸ்தானங்கள் வீதம் போலீசில் இடம் பெற்றதையும் முகமதிய சமூகம் 100ல் 17 ஸ்தானங்கள் பெற்றதும் ஜஸ்டிஸ் கட்சி இல்லாமல் இருந்தால் ஒரு நாளாவது முடிந்து இருக்குமா என்பதே நமது கேள்வி.

மற்ற ஜாதி இந்துக்கள் 100ல் 35 ஸ்தானங்களும் பெற்று இருக்கிறார்கள் என்றாலும் 100க்கு 3 வீதம் ஜனத்தொகை (13 லட்சம் ஜனத்தொகை) உள்ள பார்ப்பன சமூகம் 100ல்18 ஸ்தானங்கள் (லட்சம் ஜனங்களுக்கு 1½ வீதம்) பெற்று இருப்பதும் (100த்துக்கு 70 வீதம் (325 லட்சம் ஜனத்தொகை) உள்ளபார்ப்பனரல்லாதார்சமூகம் (9லட்சம்ஜனங்களுக்கு 1வீதம்) 35ஸ்தானங்களை பெற்று இருப்பதும் இப்படி இவ்வளவு வித்தியாசத்தில் இருந்தும் ஜஸ்டிஸ் கட்சி உத்தியோகவேட்டைக்கட்சியென்று பார்ப்பனர்கள் கூப்பாடுபோடுவதும் இதற்கு சிலபார்ப்பனரல்லாதகூலிகள்பின் தாளம் போடுவதும் என்றால் இதற்குஎன்ன பெயர் சொல்லுவது என்பது நமக்குப்புரியவில்லை.

ஆகவே நமது பார்ப்பனரல்லாதார்சமூகம்அவர்களதுஜனத்தொகைக்கு ஏற்றவிகிதாச்சாரம் உத்தியோகத்தில் பெறும் வரையிலும் அல்லது பார்ப்பனர்கள் தங்கள் விகிதாச்சாரத்துக்கு மேல்பட்ட விகித உத்தியோகம் தங்களுக்கு வேண்டாம் என்று சொல்லும் வரையிலும் ஜஸ்டிஸ் கட்சி இருந்துதீர வேண்டியதே நமது அபிப்பிராயமாகும்.

அது "தேசத்துரோக"க்கட்சியாயினும் சரி, "சர்க்கார் தாசர்கள் குலாம்கள்"கட்சி ஆயினும் சரி அதனுடைய பிறப்புரிமையைப் பெற்ற பிறகுதான் அது வேறு வேலையில் இறங்கவேண்டுமே தவிர அதைவிட்டு விட்டு பார்ப்பப்பனர்களுக்குப் பயந்து கொண்டு "எங்களுக்கு வகுப்பு வாரித்திட்டம் வேண்டியதில்லை. யாரோ ஒருவர் இருவருக்கு மந்திரிபதவியோ, பெரிய சர்க்கார் உத்தியோக பதவியோ மாத்திரம் இருந்தால் போதும் நாங்களும் பெரிய தேசபக்தர்கள் கூட்டத்தில் சேர்ந்தவர்கள் தான்" என்றால் அதைவிட ஈனத் துரோகமான கட்சி உலகில் வேறு இல்லை என்றுதான் சொல்லுவோம்.

## கான் அப்துல் கபூர்கான்.

எல்லைப்புறக்காந்தி என்று பட்டஞ்சூட்டப்பட்ட தோழர் அப்துல் கபூர்கான் அவர்கள் ராஜத்துவேஷ குற்றத்துக்காக இரண்டு வருஷம் தண்டிக்கப்பட்டு விட்டார்.

தான் செய்த காரியத்துக்காவோ, பேசிய பேச்சுக்காகவோ வருத்தம் தெரிவிப்பதின் மூலம் மன்னிப்புக்கேட்டும் அரசாங்கம் மனமிரங்காமல் இரண்டு வருஷம் தண்டித்து விட்டது.

வெள்ளை அறிக்கையையும், பார்லிமெண்டு கூட்டுக் கமிட்டி அறிக்கையையும், நிராகரிக்கிறது என்கின்ற காங்கிரஸ்திட்டத்தில் அரசாங்கத்தை மன்னிப்புக் கேட்டுக்கொள்வது என்பதும் ஒரு பிரிவுபோல் காணப்படுகின்றது. ஐயோ பாவம் காங்கிரசே! நீ இன்னமும் என்ன கதிக்கு ஆளாகப் போகின்றனையோ!! உனது வீரமே வீரம்!!!

## ராமராஜ்யம் சிக்கு திரும்பி வருகிறது.

### பலாத்கார உடன் கட்டை

வட நாட்டில் தாமோ என்ற தாலூகாவைச் சேர்ந்த நோஹ்டோ என்ற கிராமத்தில் ஒரு புருஷன் காயலாவாக இருந்து இறந்து போனார். அவரது மனைவியை உடன் கட்டை ஏறும்படி அவரின் உறவினர்கள் கட்டாயப்படுத்தி நெருப்புக்குள்பிடித்துதள்ளிவிட்டார்களாம் மனைவி தப்பி ஓட எவ்வளவோ முயற்சித்தும் பயன் இல்லாமல் சாம்பலாகி விட்டதாக அசோசியேட் பிரஸ் கூறுகிறது.

இந்து மதத்தின் பெருமையும், ராமராஜியத்தின் அருமையும் சுயராஜியத்துக்கு எவ்வளவு தகுதி உடையது என்பதை இந்தியர்கள் உணர்வார்களாக.

## டாக்டர் சத்தியபால்.

பாஞ்சாலதேசத்து காங்கிரஸ் வீரராகிய டாக்டர் சத்தியபால் அவர்களுக்கு ஒரு வருஷ தண்டனை விதிக்கப்பட்டது

டாக்டர் சத்தியபால் இத்தண்டனையைக் குறித்து அப்பீல் செய்யப்போகிறாராம்.

## ஆசிரியர்கள் மகாநாடு.

### பிள்ளைகளைப்பற்றிய கவலை இல்லை.

எங்கு பார்த்தாலும் ஆசிரியர்கள் மகாநாடுகள் கூட்டப்படுவதும்; ஆசிரியர்களின் சம்பளங்கள் போராது என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதும், மந்திரிகள் முதலிய பெரிய சம்பளக்காரர்களும், செல்வவான்களும் ஆசிரியர்களை வாழ்த்தி ஆசீர்வதிப்பதுமாகவே இருந்து வருகின்றதே ஒழிய பிள்ளைகள் சம்பளம் கொடுக்க சக்தி இல்லாமல் பள்ளிக்குப்போக முடியாமல் கல்விப் பட்டினியாய் இருந்து தற்குறிகளாக 100-க்கு 92பேர் எழுத்து வாசனை அற்றகுருடர்களாக இருந்து இந்திய நாட்டை "அலங்கரித்து"க் கொண்டிருக்கிறார்களே என்ற கவலை ஒருவரிடத்திலாவது இருந்ததாகவோ, இதற்காக ஒரு மகாநாடாவது கூட்டப்பட்டதாகவோ, ஒரு மந்திரியாவது, ஒரு பிரபுவாவது, ஒரு ஆச்சாரிய ஸ்வாமிகளாவது கவலைப்பட்டதாகவோ தெரியவேயில்லை. இந்தக் காலம் செல்வவான்கள் காலமானதால் பணம் சம்பாதிப்பதைப்பற்றியே உலக நிகழ்ச்சிகள் நடைபெறுவதும் செலவிட வேண்டியவர்கள் கஷ்டத்தைப்பற்றி கவலைப்படாமல் இருக்கவும் ஆன காரியம் நடக்கின்றது. இதற்காக யார் என்ன செய்யக்கூடும்?

"எல்லாம் பகவான் செயல்" அல்லவா?

## ஆதிதிராவிடர்களுக்கு வைஸ்ராய் பதில்

சென்னை மாகாணத்தில் உள்ள ஆதிதிராவிட சங்கங்களும், பகுத்தறிவு சங்கங்களும் இந்திய சட்டசபைக்கு ஆதிதிராவிடர்கள் சார்பாகபம்பாய்மாகாணத்திற்குடாக்டர் அம்பேத்கார் அவர்களையும், சென்னைமாகாணத்திற்கு கோவை ஆர். வீரையன் அவர்களையும் நாமினேஷன் செய்யும் படி வைஸ்ராயுக்கு தீர்மானங்கள் அனுப்பியிருந்தார்கள் லார்ட் வைஸ்ராய் அவைகளுக்கு பிரைவேட் செகரட்டெரி அவர்கள் மூலமாக கீழ் கண்ட பதில் கொடுத்திருக்கிறார்.

"உங்கள் தீர்மானங்கள் கிடைத்தது. நாமினேஷன் செய்யும் போது உங்கள் தீர்மானங்களை ஜாக்கிரதையுடன் கவனிக்கிறோம்" என்றுபதில் அனுப்பியிருக்கிறார்.

## திவான் பகதூர் எ. ராமசாமி முதலியார் வெற்றி

சென்னை செனட்சபைசார்பாக தோழர் எ. ராமசாமி முதலியார் கார்பரேஷன் மெம்பராய் இருந்து வந்த காலம் முடிந்தவுடன் மறு தேர்தலுக்கு அவர் நின்றதில் அவருக்குப் போட்டியாக தோழர் வி. டி. அரசு அவர்கள் ஜஸ்டிஸ் கட்சி எதிரிகளால் நிறுத்தப்பட்டார். பலமானபோட்டி நடந்தது. பார்ப்பனர்களும் அவர்களது சிஷ்யர்களும், கூலிகளும் வி.டி. அரசு அவர்களுக்காக எவ்வளவோ முயன்றும் கடைசியில் தோழர் ராமசாமி முதலியாருக்கு 141 ஓட்டும் தோழர் வி.டி. அரசு அவர்களுக்கு 43 ஓட்டுமே கிடைத்தது. எ. ராமசாமிமுதலியார் அவர்கள் பெருமித ஓட்டுகளால் வெற்றி பெற்றார்.

வெற்றி தோல்வி என்றும் ஒருவர் பங்கிலேயே இருக்காது.

(9 ம் பக்கத்தொடர்ச்சி)

யும் இல்லை என்றும், இதுதான் சுயமரியாதைத் திருமணம் என்பது என்றும் பேசினார்.

பிறகு முதலில் தோழர்கள் தெய்வசிகாமணி (கிறிஸ்தவர்) தங்கவேலு அம்மாள் (இந்து) ஆகியவர்கள் ஒப்பந்தம் நடந்தது.

இரண்டாவதாக தில்லை நடராஜன்—ராஜம்மாள் ஆகியவர்கள் ஒப்பந்தம் நடந்தது.

மூன்றாவதாக முத்துராமலிங்கபுரம் துரைராஜன் நாச்சியாரம்மாள் ஒப்பந்தம் நடந்தது.

மூன்று ஒப்பந்தமும் 15 நிமிஷத்திற்குள் முடிந்தது. பிறகு மஞ்சுளாபாய் அம்மாள் சீர்திருத்தத் திருமணம் என்பது பற்றி சில பாட்டுகள் மூலம் விளக்கிக் காட்டினார்.

பின்பு வந்தனோபசாரங்கள் நடந்து வாசனை, புஷ்பம் வழங்கியது. பெரியதொரு விருந்தும் நடந்தது.

பிறகு தோழர் ஈ. வெ. ராமசாமி மஞ்சுளாபாய் ஆகியவர்கள் தூத்துக்குடி தோழர்களுடனும், திருநெல்வேலி தோழர்களுடனும் கோவில்பட்டி வந்து அங்கு ரயில் வேஸ்டேஷனில் இயக்கத்தின் பிற்கால நடைமுறைகளைப்பற்றி பேசி ரயிலனுப்பி விட்டு சென்றார்கள்.

## திருச்சி நகரத்தின் பெருமை.

திருச்சிக்காரர்கள் தங்களை ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்று ஜம்பம் அடித்துக் கொள்வதோடு ஜஸ்டிஸ்கட்சிக்குதாங்களேகோட்டைக்காவலாளர்கள் என்றும் பெருமை பேசிக்கொண்டு அடிக்கடி அக்கட்சியின் மீது அதிகாரம் செய்யும் விஷயத்திலும்சிறிதும் பின்வாங்குவதில்லை என்பதோடு எல்லோருக்கும்முன்னணியில்வந்தும் நின்று கொள்ளுவார்கள்.

ஆனால் காரியத்திலோ என்றால் லொட்டையையேதான் காண முடிகின்றது. நாம் இப்படிச் சொல்வதற்குக் கூட கோபித்துக் கொண்டு நமக்கும் புத்தி சொல்ல வந்துவிடுவார்கள். அதனால்உள்ள நிலைமையை மறைத்து விட முடியாது.

புதிய சீர்திருத்தம் ஏற்பட்ட காலம் முதல் ஒரு ஆசாமியையாவது திருச்சி தொகுதியானது இந்திய சட்டசபைக்கு நிறுத்தியதும் கிடையாது அனுப்பியதும் கிடையாது என்ற பெருமை திருச்சிக்கு ...என்று சொல்வதற்கு யா... ...த்துக் கொள்ளமாட்டார்கள்.

அது மாத்திரமல்லாமல் இந்த 10 வருஷ காலமாய் சென்னை சட்டசபைக்குக் கூட ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் ஒருவரையாவது அனுப்ப அவர்களுக்கு முடியவில்லை என்று சொல்வதற்கும் கோபித்துக் கொள்ளமாட்டார்கள் என்றே நினைக்கிறோம். அது மாத்திரமல்லாமல் திருச்சி நகர் தொகுதிக்குக்கூட ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக இல்லாவிட்டாலும் இந்த 10 வருஷ காலமாக ஒரு பார்ப்பனரல்லாதாராகக்கூட அனுப்ப முடியாமல் போய்விட்டதையும் கோபிக்காமல் ஒப்புக்கொள்ளுவார்கள் என்றே கருதுகின்றோம்.

திருச்சி ஜஸ்டிஸ் கட்சி வீரர்கள் ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் யாரையும் அனுப்ப முடியாமல் போய்விட்டதோடு மாத்திரமல்லாமல் இப்போது ஒரு படி பிரமோஷனாகி முன்னேறி இருக்கின்றார்கள் என்று சொல்ல வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டது.

அதாவது திருச்சி ஜஸ்டிஸ் கட்சியே தான் தான் என்று கருதிக் கொண்டிருந்தவரும் தமது தோளின் பேரிலேயே அக்கட்சியின் தலை எழுத்து இருக்கின்றது என்று நினைத்துக் கொண்டு இருந்தவருமான தோழர் பி. ஆர். தேவர் அவர்கள் இன்று காங்கிரஸ் வாக்குறுதியில் கையொப்பமிட்டு காங்கிரஸ் கேண்டிடேட்டாய் நிற்கத்துணிந்து விட்டார். ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிரிகளாய் பார்ப்பனர்களும் அவரை ஏற்றுக் கொண்டு ஞான ஸ்நானம் கொடுத்து விட்டார்கள்.

ஆகவே இனித்திருச்சிக்கும் திருச்சி ஜஸ்டிஸ் கட்சிக்காரர் என்று சொல்லிக்கொள்ளுகின்றவர்களுக்கும் ஜஸ்டிஸ் சரித்திரத்தில் முதல் அத்தியாயத்தை ஓதுக்க வேண்டியது தான் பாக்கி என நினைக்கிறோம்.

ஏதாவது கொள்கை வித்தியாசத்தால் கட்சியை குலைக்கவோ, அல்லது விட்டுப்போகவோ ஆசைப்படுகின்றவர்களைப்பற்றி நாம் ஒன்றும் குறைகூறவரவில்லை.

ஆனால் தங்கள் சொந்த சவுகரியங்களிலோ, அல்லது இஷ்டங்களிலோஏதோஇரண்டொரு விஷயம் ஒத்துவரவில்லையானால் தனிப்பட்டவருக்கு தான் இஷ்டப்படி நடக்க முடியவில்லையானால் எதிர் கட்சிக்கு போய்விடுவது என்பதானது எப்படி பொது நன்மைக் காரியமாகும் என்பதுநமக்கு விளங்கவில்லை.

தோழர்கள் சி. நடேசமுதலியார், திவான்பகதூர் பி டி குமாரசாமி செட்டியார் ஆகியவர்களும் கூட மற்றும் அவர்களைப்போல் ஜஸ்டிஸ் கட்சியாரால் அலட்சியமாய்கருதப்படும் கட்சியின் தொல்லைக்குள்பட்டும் உள்ள இன்னும் சிலரும் கூட அக்கட்சியை விட்டுப் போகாமல் இருக்கிறார்கள் என்றால் திருச்சி வீரர்கள் கட்சியை ஒழிப்பதற்கும், எதிரிகளுக்குத்துணையாய் இருப்பதற்கும் துணிந்தது அதிசயமே யாகும். இதைப் பற்றி திருச்சி ஜில்லா பல பாகங்களில் இருந்தும் திருச்சி, நகரத்தில் இருந்தும் சில தீர்மானங்களும், வியாசங்களும் வந்ததை நாம் வெளியிடவில்லை. ஏனெனில் அவை சிறிது கடினமானபதங்கள் என்று நாம் கருதியதால் பிரசுரிக்க வில்லை. நேயர்கள் வருத்தப்படாமல் இருப்பார்களாக.

## “நாங்கள் இனிமேல் பிள்ளை பெறமாட்டோம்.”

———)o(———

### பிரிட்டிஷ் பெண்களின் தீர்மானம்.

“குழந்தைகளைப் பெற்று கஷ்டப்பட்டு வளர்த்து வரப்போகும் யுத்தத்திற்கு இரையாகக் கொடுப்பதைவிட அப்படிப்பட்ட குழந்தைகளைப் பெறாதிருப்பதே மேல்.” என்று நூற்றுக் கணக்கான பிரிடிஷ் பெண்கள் திடமான தீர்மானத்துக்கு வந்து சாமர்த்தியம் வாய்ந்த டாக்டர்கள் வசிக்கும் தெருவான ஹார்லி தெருவுக்குச் சென்று அந்த டாக்டர்களின் இல்லங்களில் சூழுகின்றனராம்.

லண்டன் கர்பாக்ஷி சங்கத்தின் பிரபல டாக்டரான ப்லாகெட் என்பவரிடம் “நாங்கள் பெறப்போகிற குழந்தைகள்தான் மற்றொரு யுத்தத்திற்கு அழைக்கப்பட்டு மடியப்போகிறார்கள். ஆதலின் நாங்கள் இனி குழந்தைகளை பெறுவதில்லை என முடிவு கட்டிவிட்டோம்”. என்று அப்பெண்கள் தெரிவித்துக்கொண்டார்களாம்.

## சமதர்மப்பத்திரிகைக்கு 3000 ரூபாய் ஜாமீன்.

### ஜோலார்ப்பேட்டை சமதர்மப் பத்திரிகைக்கு சர்க்கார் 3000 ரூபாய் ஜாமீன் கேட்டிருக்கிறார்கள்.

## “முதலில் ஆட்டம பயில்”

### ஜெர்மனியில் புதிய உத்திரவு.

யௌவனம் வாய்ந்த டாக்டர்கள், வக்கீல்கள், உபாத்தியாயர்கள் நீதிபதிகள் ஆகியோர் 18 மாதம குத்துச் சண்டை, நீச்சு முதலிய ஆட்டங்கள் பயின்ற சர்டிபிகேட் பெற்றாலொழியத் தங்கள் தொழிலை நடத்த விடமாட்டார்கள் என்று ஜெர்மனி கல்வி மந்திரி உத்திரவு போட்டிருக்கிறார். வயதாகாதவர் மத போதனை செய்யக் கூடாதென்றும் உத்திரவிட்டிருக்கிறார்.

இவ்வுத்திரவுகள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொது.

# விவசாயிகளுக்கு 10 நிபந்தனைகள்.

## ஜெர்மனியில் ஒரு அறிக்கை.

விவசாயிகளுக்கென்று பத்து நிபந்தனைகளைச் சுட்டிக்காட்டி நாஜிக்கட்சி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

1. தீவிரமாக உங்கள் நிலத்தில் உழையுங்கள். ஜெர்மனியிலொரு அங்குலத்தைக்கூட நாம் வியர்த்தமாக்கலாகாது.
2. நிலத்திற்கு நிறையஎருப்போடுங்கள். பண்ணைக்கு சரியான எருவையே உபயோகியுங்கள். நிறைய விளைய வேண்டுமானல் அதிக எருப் போட வேண்டும்.
3. எப்போதும் நல்ல விதைகளையே உபயோகியுங்கள்.
4. அடிக்கடி நிலத்தில்பயிர்களை மாற்றி சமயத்துக்குத் தக்க பொருள்களை விளையுங்கள். அவ்வாறு மாற்றுவதால் விலை வாசி நன்றாயிருக்கும் ஒரேபயிரை விளைவிப்பது உமக்கும் நல்லதன்று; ஜர்மன் தேசத்துக்கும் நல்ல தன்று.
5. ஜர்மனிக்கு உபயோக மில்லாத பொருள்களை அதிகமாக விளைவிப்பதில் நிலத்தை வீணுக்க வேண்டாம்.
6. தரிசுபோடாமல் அவ்வப்போது ஆடு மாடுகளுக்கான 'பச்சை'யையாவது விளைவியுங்கள்.
7. நிலத்தை மேலும் மேலும் பண்படுத்துங்கள். உபயோகமற்ற தரிசையும் உபயோக மிருந்த நிலமாக மாற்றுங்கள்.
8. நீங்கள் எவ்வளவு புல்லுந் தழையும் தயாரிக்க முடியுமோ அவ்வளவுக்குத் தகுந்த ஆடு மாடுகளை வளர்த்து விடுங்கள்.
9. வேலைக்கு உபயோகமானமிருகங்களையே வளருங்கள். சும்மா தீனி தின்று கொண்டு கொழுக்கும் உபயோக மற்ற மிருகங்களை வளர்க்காதீர்கள்.
10. ஆடுவளருங்கள். (தினமணி)

# திருவாங்கூர் அரசரை ஏமாற்ற முயற்சி.

சில தினங்களுக்கு முன் கல்கத்தாவில் திருவாங்கூர் மகா-ராஜாவை ஏமாற்றஒரு பெரிய சூழ்ச்சி நடந்தது அது இப்பொழுது வெளிவந்திருக்கிறது.

நாகரீகம் முதிர்ந்த இக்காலத்தில் சூழ்ச்சிகளும், நவீன முறையிலேயே நடை பெறுகின்றன.

கொஞ்ச நாட்களுக்கு முன் சென்னையில் தோழர் சத்தியமூர்த்தி பேசுகிறபோல் "நெருப்பு, நெருப்பு" என்று டெலிபோனில் பேசி யாரோ ஒருவன் தீயணைக்கும் படையினரை ஏமாற்றி விட்டான். மீண்டும் இப்பொழுது கல்கத்தாவில் "டெலிபோன்கலாட்டா" ஒன்று நடந்திருக்கிறது.

வைஸ்ராய்க்கு ஒரு விருந்தளிப்பதற்காகத் திருவாங்கூர் மகா ராஜா கல்கத்தாவுக்கு போயிருக்கிறார்.

செவ்வாய்க்கிழமை மாலை மகா ராஜாவினுடைய கல்கத்தா வாசஸ்தலத்தில் டெலிபோன் மணி அடித்தது. மகா ராஜா டெலிபோனில் "யார்?" என்று கேட்டார்.

"நான் தான் வைஸ்ராய் மெய்க்காப்பாளன் பேசுகிறேன். இப்பொழுது உங்களிடம் ஒரு ஆங்கிலோ-இந்தியவாலிபன் வருவான். அவனுக்கு ஏதாவது உதவி செய்யுங்கள்" என்றுடெலிபோனில் பதில் வந்தது.

சிறிது நேரம் கழித்து ஒரு மோட்டாரில் ஒரு வாலிபன்-வந்தான் மகாராஜா அவனிடம் ரூ. 500 கொடுக்கும் படி தன்மெய்க்காப்பாளருக்கு உத்திரவிட்டார். வைஸ்ராய் விடுதிக்கு வரும்படியாகவும் அந்த மெய்க்காப்பாளர் அடையாளம் காட்டினுல் பணம் தருவதாகவும், மகா ராஜா மெய்க்காப்பாளர் வாலிபனிடம் கூறி அவனை மோட்டாரில் அழைத்துச் சென்றார்.

வழியில் ஒரு கிளப் வாசலில் மோட்டாரை நிறுத்தும்படி வாலிபன் கேட்டுக்கொண்டான். மோட்டார் நிறுத்தப்பட்டது. வாலிபன் உள்ளே சென்றவன் திரும்பி வரவில்லை. மகாஜா மெய்க்காப்பாளர் சிறிது நேரம் இருந்துவிட்டுத் திரும்பிப் போய் விட்டார்.

இந்த சமாச்சாரம் போலீஸாருக்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது. போலீசார் தீவிரமாகப் புலன் விசாரித்து வருகின்றனர். (தினமணி)

# சென்னை சென்ட்ரல் சுயமரியாதை சங்கம்.

சென்னை வரதராஜ புரத்தைச் சேர்ந்த புதுப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில்திங்கட்கிழமை 10-12-34ந் தேதி இரவு 8மணிக்கு ஒயிட்டெட் ஹாலில் டி சங்கத்தின் ஆதரவில் தோழர் பலராமன் தலைமையின் கீழ் மாதாந்திரக் கூட்டம், கூட்டப்பட்டது. அதுசமயம், தோழர் ஆர். சாமிநாதன் அவர்களால், கீழ் குறிப்பிட்டுள்ள தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அதை தோழர்களான, ஆர். பி. வடிவேலு, கே. மதுரை,ஆகியவர்களால் நீண்டநேரம் ஆமோதித்து சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

(1) சென்னை மூன்றாவது, சுயமரியாதை மகாநாட்டையும், சென்னை இரண்டாவது நாஸ்திகமாகா நாட்டையும்கூட்டுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

(2) ஈரோடு திட்டத்தை, தமிழ் நாடு முழுமையிலும் பிரசாரத்தின் மூலமாகப்பரப்பி, அமுலுக்கு விரைவில் கொண்டுவர முற்படவேண்டுமென்று தோழர் ஈ. வெ. ராவைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

(3) தென்னிந்திய, நிலச்சுவான்தார் மகாநாட்டிற்குக்கொண்டுபோன தீர்மானத்தை எதிர் நோக்குவது அவசியமில்லை யென்றும், தற்காலம் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து வேலை செய்வது தகாதென்றும், ஈ. வெ. ராவை கேட்டுக்கொள்ளபட்டது.

(4) நமது கொள்கையின் அபிவிருத்தியும், பத்திரிகையின் செல்வாக்கும் குறைவதற்குக் காரணம். தங்களுடைய தொண்டும், ஊக்கமும் குறைவாகும். ஆதலால் மேற்குறித்துள்ளவைகளுக்கு தங்களுடைய சேவையும், அவசியமாக செலுத்த கடமை படவேணுமென்று தோழர் ஈ.வெ.ரா. அவர்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதோடு டி தீர்மானங்களை சகல தோழர்களாலும், தலைவராலும் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு இரவு 9மணிக்கு தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைக்கப்பட்டது என ஒரு காரியதரிசி எழுதுகிறார்.

# அமராபதி புதூர் சமதர்ம இளைஞர் ஊழியர் சங்கம்.

இச்சங்கத்தின்வாராந்திரக்கூட்டம் இவ்வூர் சமதர்ம சாந்தி பாடசாலையில் 6-12-34 மாலை 6 மணிக்கு தோழர் எஸ். டி. வாசன் அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் "கைத்தொழிலும் இயந்திரமும்" என்பது பற்றி தோழர்கள் வி. பரமசிவம், ஆர். சுப்பிரமணியம், என். எஸ். மணியன், டி. நாராயணன் முதலியவர்கள் பற்பல மேற்கோள்களுடன் பேசினர்கள். தலைவர் முடிவுரையுடன் காரியதரிசி வந்தனோபசாரங் கூறியவுடன் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

# புதுக்கோட்டை வொயிட் புளூஸ் புட்பால் அசோசியேஷன்.

1935 ஆ ஜனவரி மாதம் 3-வது வாரத்தில் டி சங்க ஆதரவில் (Sevens) கால்பந்து பந்தய விளையாட்டு நடைபெறும். இப்போட்டியில் எல்லாரும் கலந்து கொள்ளலாம். டீம் 1-க்கு பிரவேசக் கட்டணம் ரூ. 4. செலுத்த வேண்டும். 5-1-35-க்குள் தேதிக்குள் விண்ணப்பமும் பணமும் அனுப்பி விட வேண்டும். புதுக்கோட்டைக்கு வெளியில் இருந்து வரும் டீம்களுக்கு சாப்பாடு வசதியும், இடவசதியும் இலவசமாக அளிக்கப்படும். பந்தயத்தில் கடைசி வரையிலும் ஆடி வெற்றி பெற்றவர்களுக்கு ஏழு அழகான வெள்ளிக் கோப்பைகளும், அந்த டீம் கேப்டனுக்கு ஒரு வெள்ளிக் கோப்பையும் கொடுக்கப்படும். கடைசியில் ஆடித் தோற்றவர்களுக்கு ஏழு தங்க மூலாம் பூசிய வெள்ளிப் பதக்கங்களும் பரிசாக அளிக்கப்படும். மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக ஜெயித்த 1 டீமுக்கு வெற்றிக் குறியாக ஒரு அழகான விலை உயர்ந்த வெள்ளி ஷீல்டு கொடுக்கப்படும். இது சம்மந்தமாக விஷயம் தெரிந்து கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

President,
The White Blues Football Association, Pudukotah.

# துருக்கியின் தந்தை

## கெமால் பாஷாவுக்குப் பட்டம்

துருக்கி சர்வாதிகாரி முஸ்தபா கெமால் பாஷா இனி ஆடாடர்க் என்றுஅழைக்கப்படுவர். அதன் அர்த்தம் "துருக்கியின் தந்தை" என்பதே. ஜனவரி 1ந்தேதி முதல் துருக்கியர் எல்லோரும் உபபெயர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டு மென்று கட்டாய உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

# கால் பந்தாட்டம் அருப்புக்கோட்டை

1934 ஆ டிசம்பர் மீ 9 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு அருப்புக்கோட்டை ரஹ் மாணிய்யாகமால் முஸ்லீம் புட்பால் டீமிற்கும் விருது நகர் நியூமாயபஜார் புட்பால் டீமிற்கும் சிநேக பான்மையால் இந்நகர போலீஸ்மைதானத்தில் 9பேர்கள் கொண்ட கால்பந்தாட்ட விளையாட்டு சார்ஜன் ட்மிஸ்டா காலிப் அவர்கள் பொதுமையாளராக விருந்து நடைபெற்றது. நடைபெற்ற போட்டியில் ரஹ்மானிய்யா கமால் முஸ்லீம் புட்பால் டீம் இரண்டு கோல் அடித்துஜெயித்தார்கள் இந்நகர் முஸ்லீம் டீம் பால்யர்கள் புதியவர்களாக விருந்தும் ஜெயித்ததை நகர மக்கள் பாராட்டுகிறார்கள் எனஒருநிருபர் எழுதுகிறார்.

# மைடான் டில்லி

## தெண்டாயுதபாணி கோவிலில் களவு.

இந்நகரத்தெண்டாயுதபாணி கோவிலில் களவு 24.11.34ல் காலை 9 மணி சுமாருக்கு இருமலாய்க்காரர்கள் உள்ளே பிரவேசித்து மேற்படி சுவாமி அணிந்திருந்தவேல் இதர கண், இமை, காது, உத்ராட்சம் தங்கநகை மாலை முதலானதும் ஏறக்குறைய ரூ 1000 மதிப்புள்ள பொருள்கள்திருட்டு போய்விட்டதென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## மதிப்புரை.

### சிறுவர் அறிவுக்கதிர்.

சிறுவர் அறிவுக்கதிர் (சில்ட்ரன்ஸ் மேக்கசையின்)என்னும் மாதாந்திரப் பத்திரிகை ஈரோடு லண்டன்மிஷன் கம் யூனிட்டி போதனாமுறை பாடசாலைதமிழ்ப்பண்டிதர் தோழர் கே. ஜே. வேதமுத்து அவர்களால் வெளியிடப் பட்டது. நமது பார்வைக்கு வந்தது.

அது தனது பெயருக்கேற்ப சிறுவர்களுக்கு அறிவூட்டத்தக்கதும், உற்சாகமும் தன்னம்பிக்கையும் ஏற்படுத்தத்தக்கதுமான பல விஷயமாகவும், பல அறிஞர்கள் கட்டுரையையும் தாங்கி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் சிறுவர்களுக்கான பழமொழிகள்,வேடிக்கைகதைகள்விகடங்கள் ஆகிய பலவிஷயங்களும் அதில் பொதிந்து கிடக்கின்றன.

இப்படிப்பட்ட ஒரு பத்திரிகை நமது நாட்டுக்கு மிகவும் அவசியமாயிருக்கும் சமயத்தில் தோழர் வேதமுத்து அவர்கள் இந்த தொண்டில் ஈடுபட்டதானது. சிறுவர் உலகம் இவருக்கு நன்றி செலுத்தத் தக்கதாகும்.

இதை ஒவ்வொரு பள்ளி உபாத்தியாயரும், ஆதரித்து ஒவ்வொரு மாணாக்கர்களையும் வாசிக்கச் செய்யும் படி செய்ய வேண்டியது அவசியமான காரியமாகும்.

இதன் சந்தா.

| | |
|---|---|
| வருஷம் | 0—10—0 |
| வெளிநாடுகளுக்கு | 1—0—0 |
| தனிப்பிரதி | 0—0—9 |

விலாசம்

K. J. வேதமுத்து
பத்திராதிபர்
L. M. C. போதனாமுறை ஸ்கூல்
தமிழ்ப் பண்டிதர், ஈரோடு.

### விதவா விவாகம்

திருச்சி பொன்மலை தோழர் எ. கருப்பண்ணன் அவர்கள் தோட்டத்தில் பொன்மலை சுயமரியாதை சங்கத்தின் சார்பாக 16-12-34 தேதி மாலை 5 மணிக்கு விதவா திருமணம் நடந்தது. அது சமயம் தோழர்களான ஜி. ராதா, சௌரிராஜன், திருச்சி மரியஞசை முதலியவர்கள் சுயமரியாதைக் கீதங்கள் பாடினார்கள். பின்னர் நோட்டீஸில் கண்டபடி திருச்சி தோழர் எஸ். நீலாவதி அவர்கள் குடும்ப அசௌகரியத்தை முன்னிட்டு வராததினால், தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் டி. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் பொன்மலை தோழர் பி. கந்தசாமி, செங்கோட்டை எம். தங்கம்மாள் இருபேர்களுடைய வாழ்க்கைத்துணை ஒப்பந்தம்சிறப்பாக நடந்தன.

இத்திருமணத்திற்கு ஆண்களும், பெண்களும் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர்ஒப்பந்தஉறுதிமொழிகளை கூறும்படி தெரிவித்தார். மணமகனும், மணமகளும்உறுதிமொழி கூறினார்கள். தம்பதிகள் ஒருவருக்கொருவர்மாலை மாற்றிக்கொண்டனர்.

பின்னர் பொன்மலை சுயமரியாதை சங்கத்தலைவர் தோழர் எல். வி. துரைசாமி சங்கத்தின் சார்பாகவரவேற்புப் பத்திரம்வாசித்தார். திருச்சி தோழர் ராமசுப்பிரமணியம் அவர்கள் "புரோகிதத்தையும் மூடசடங்குகளையும் ஏன் ஒழிக்க வேண்டும், இயற்கை திருமணத்தின் அவசியம் என்பது பற்றி மிக தெளிவாகப்பேசினார்.

பின்னர் தோழர் சுலைமான் சாகிப் அவர்கள் "விதவைமணம்" யென்னும் பொருள்பற்றி பேசினார். கடைசியாக தோழர் டி. கிருஷ்ணசாமி அவர்கள் சீர்திருத்த திருமணத்தின் அவசியத்தைப் பற்றி சொற்பொழிவு வாற்றிய பிறகு சங்கத்தலைவர் எம். பி. துரைசாமி அவர்கள் இத்திருமணத்திற்கு தோழர் டி. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமைவகித்ததைப் பாராட்டியும், தம்பதிகளுக்கும், பொது ஜனங்களுக்கும் வந்தனோபசாரம் கூறி தலைவர் அவர்கட்கு பூமாலை சூட்டும் படி கேட்டுக்கொண்டார். தோழர் டி. என். ஷண்முகம் அவர்கள் பெருத்தகரகோஷத்தினிடையே தலைவர் அவர்கட்கு பூமாலை சூட்டினார். இத்துடன் இரவு 7 மணிக்கு மணநிகழ்ச்சி இனிதுநிறைவேறியது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

### கடியாபட்டி கருணைநந்த வாசகசாலை.

டிசம்பர் 2ந்தேதி மாலை 5மணிக்கு ஷையூர் குமிழாங்குண்டு தென்கரையில் உள்ள த. அ. ராமநடேச ஆச்சாரியார் வீட்டில் ஷை வாசகசாலைத்திறப்புவிழா தோழர் தி. ம. நடராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஏராளமான குலாபிமானிகளும், இதர சமூக அன்பர்களும் வந்திருந்தார்கள். தோழர் வை. இலட்சுமண ஆச்சாரியார் அவர்கள் சபையோர்களை வரவேற்று நல்லுரை கூறினார். பின்னர் ராயவரம் காந்தி பாடசாலைஆசிரியர் தோழர் ரா. பாலசுப்பிரமணியபிள்ளை அவர்கள் வாசகசாலையார் செய்ய வேண்டிய விஷயங்களைப் பற்றிப்பேசினார். காரைக்குடி விஸ்வகர்ம இளைஞர் சங்கக்காரியதரிசி தோழர் ஆ. சுவாமிநாத ஆச்சாரியார் அவர்கள் 'பத்திரிகைப்பயன்'என்பதுபற்றிப்பேசினார். பின்னர் வாசகசாலையின் உத்தியோகஸ்தர்கள் தேர்தல் நடைபெற்றது. தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசி வந்தனோபசாரங்கூற கூட்டம் கலைந்தது என ஒருநிருபர் எழுதுகிறார்.

### தென்னிந்திய செங்குந்தர் ஐந்தாவது மகாநாடு.

வட ஆற்காடு ஜில்லா திருவத்திபுரத்தில் தென்னிந்திய செங்குந்தர் மகாநாடு ஜனவரி 26,27 தேதிகளில் ஐந்தாம் முறையாக்கக் கூட்டதீவிர ஏற்பாடுகள் செய்து வருவதாகத்தெரிகிறது. அச்சமயம் வழக்கம் போல் சமூக மகாநாடு வாலிபர் மகாநாடுவர்த்தகர் மகாநாடு,ஆகியவைகூடுவதோடு, பெண்கள் மகாநாடும் கூட்டவரவேற்புச்சபையார் ஏற்பாடு செய்யவேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. பெண்கள் மகாநாடு கூட்ட வேண்டிய தன் அவசியத்தைப்பற்றிச்சென்ற மூன்று வருஷங்களாக, பலர்தினசரிகள் மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும் வரவேற்புச் சபையாயிருக்கு தெரிவித்திருக்கிறார்கள். இவ்வாறு செய்ய, சென்ற இரண்டு மூன்று மகாநாடுகளில் சில அசௌகர்யங்கள் இருந்ததாகும், இரண்டொரு வருஷங்களில் பெண்கள் மகாநாடும் கூட்டஏற்பாடுகள் செய்யப்படுமென்றும், சமாதானம் சொல்லப்பட்டு வந்தன. பெண்கள் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளாத எந்த சமூக சீர்திருத்தமும் சரிவர நடவடிக்கையில் வராதென்பது யாவரும்ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மை யாகும்.

ஆகவே செங்குந்தர் பெண்கள் மகாநாடும் இவ்வருஷமாவது கூட்ட வேண்டியது மிக மிக அவசியமென்றே கருதுகிறேன். என ஒரு நிருபர் எழுதுகிறார்.

### ஏகாதசி விரகத்தால் மரணம்.

சண்டாளஏகாதசிக்கு ஒருசந்தியிருந்த இராசிபுரம் பிரபல வியாபாரி கா. வீ. சிக்கா செட்டியார் அவர்கள் மருமகன் உயிர்துறந்தார். டாக்டர்களிடம் ஷை யார் இறந்த காரணம் கேட்டதில் இரண்டு நாட்கள் வரையிலும் அன்னாகாரமின்றியும், தூக்கமின்றியும்இருந்ததால்அச்சமயம் துவாதசியன்று துளசி தீர்த்தம் குடிக்கவே திடீரென்று நெஞ்சடைத்து உயிர் நீத்தார். என்று சொல்லுகிறார்கள்.

### அமராபதி புதூர் சமதர்ம இளைஞர் ஊழியர் சங்கம்.

இச்சங்கத்தின் வாராந்திரக் கூட்டம் 13-12-1934ந் தேதி மாலை 6மணிக்கு தோழர் கே. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று அவ்வமயம் தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்களவி. பரமசிவன் எஸ். டி. வாசன் வி. எஸ். மணியன், டி. நாராயணன் முதலியோர்கள் சமதர்மத்தை ஆதரித்துப் பேசினார்கள். பின் தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறக் கூட்டம், இனிது கலைந்தது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

### சாமிக்குப் பல பெண்ஜாதி முனிசீப் கோர்ட்டில் விவகாரம்.

கும்பகோணத்தில் உள்ள தோழர் சாரங்கபாணி கோவிலில் வைக்கப் பட்டிருக்கும் தோழர் சாரங்கபாணி சாமிக்கு தோழர் ஆண்டாள் என்னும் பெண்சாமியை விவாகம் செய்ய ஷை கோவிலின் குருக்களான பண்டித சீனிவாச பட்டாச்சாரியார் ரூ. 10,000 முதல் ஒதுக்கி வைத்து ஷைவிவாகத்தை நடத்த ஆரம்பித்தார். ஆனால் கோவில் தர்மகர்த்தாக்கள் அப்படிச்செய்வது ஒழுக்கத்தவறு என்றும், வழக்கத்திற்கு மாறுபட்ட அந்த விவாகம் செல்லாது என்றும் ஆக்ஷேபித்தார்கள். அதன் பேரில் ஷை பண்டிதர் தான் செய்துமுடிக்க தீர்மானித்திருக்கும் சாரங்கபாணி—ஆண்டாள் விவாகத்தை தர்மகர்த்தாவை தடை செய்யாமலிருக்கும் படிக்கும் ஷை விவாகத்தைச் சட்ட சம்மதமாக்க அநுமதி தரும் படிக்கும் கும்பகோணம் ஜில்லா முன்சீப் தோழர் ஏ. யம். ஆர். டேவிட் அவர்கள் முன்பு ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறாராம்.

பிரதிவாதிகள் ஷை சாரங்கபாணி சாமிக்கு ஏற்கனவே கலியாணம் செய்து வைக்கப்பட்டிருக்கும் தோழர் கோமளவல்லியென்ற ஒரு அம்மன் இருப்பதாகவும், ஆதலால் சாமிக்குப் பல தாரம் அநுமதிக்கக்கூடாதென்றும் விவாதம் செய்கிறார்கள். சாரங்கபாணி சாமிக்குப் பல மனைவிகள் இருக்கும்படிவிடலாமா வென்பதை பற்றி அநேக ஆகமவேத புராண சாஸ்திர இதிகாச நிபுணர்கள் யோசித்து வருகிறார்கள். கோர்ட்டார் விசாரணையை அடுத்த ஜனவரி 8-ந் தேதிக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறார்கள்.

### திருக்கோஷ்டியூர் சாரதா வாசகசாலை.

இவ்வாசகசாலையின் ஸ்பெஷல் மீட்டிங்கில் 12-12-34ல்தோழர் பட்டமங்கலம் எஸ். வி. கே. வெங்கிடாசலத்தொண்டமான் அவர்கள் தலைமையில்கூடிற்று. அது சமயம் கா. மு. காளிமுத்து "பத்திரிகை படிப்பதன்அவசியம்"யென்பதையும், உல. சுந்தரராஜ் அவர்கள் "பெண்கல்வி" கற்பதைப்பற்றியும் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் மு. கா. ரெங்கசாமி அவர்களால் நன்றி கூறக்கூட்டம் முடிந்தது.

பின் டாக்டர் நமச்சிவாயம் அவர்களின் குமாரத்தி மரணமடைந்தற்கு வருந்து வதாகவும், தோழர் ராமநாதன் அவர்கள் மரணமடைந்ததற்கு வருந்துவதாகவும், ஜஸ்டிஸ் கட்சிக்குள்ளாக இருந்து துரோகம் செய்தவர்களைக் கண்டிப்பதாகவும்தீர்மானங்கள் நிறைவேறியது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## ஜஸ்டிஸ் கட்சித்தலைவர் அவர்கட்கு. பகிரங்கக்கடிதம்.

### கட்சியின் நிர்வாக அங்கத்தினர்.

(திருச்சி கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் எழுதியது)

அன்புள்ள ராஜாசாகிப்

டிசம்பர்மீ 11உ நடைபெற்ற சட்டசபை ஜஸ்டிஸ் கட்சியின் நடவடிக்கையும், செட்டிநாட்டு குமாரராஜா அவர்களின் ராஜிநாமாவையும் கண்டு வருந்த நேர்ந்தது. கட்சி தோல்வியடைந்த வருத்தம் மாறுவதற்குள்ளாகவே இது மற்றொரு அதிர்ச்சியை உண்டுபண்ணி விட்டது. இம் இம்மாதிரியான சம்பவங்கள் கட்சியின் வருங்காலநன்மைக்கு ஏற்றவையாயில்லையென்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவருடத்தில் கீழ்கண்ட நிகழ்ச்சிகள் நடந்திருக்கிறது.

திருச்சிதேவர், திருநெல்வேலி முதலியார், இரண்டாவது மந்திரியுடன் அபிப்பிராயபேதம், தோழர் சௌந்திரபாண்டியம் ராஜிநாமா, தோழர் மீனும்பள்ளி ஜமீன்தார்ராஜிநாமா உத்தேசம், குமாரராஜாராஜிநாமா ஆகியஇது போன்ற சம்பவங்களைத்தொடர்ச்சியாக கவனித்து வருபவர்கள் ஆந்திரா—தமிழ் நாடுகளுக்குள் போர் நடைபெறுகிறது என்ற வதந்தியை நம்பவேண்டியவர்களாக இருக்கிறார்கள் (இதற்கும், ஆந்திரா—தமிழ்நாடு "போருக்கும்" என்ன சம்பந்தமோ ப—ர்)

தேர்தலில் தோல்வி யுற்றதற்குக் காரணம் வருமாறு:—தாலூக்கா போர்டுகளை ஒழித்தது, நகர சபைகளில் கமிஷனர் நியமனம், ஏழை ஆசிரியர்கள் தமிழ்பண்டிதர்களின் சம்பளக் குறைப்புத்திட்டம், (இம்மூன்றிற்கும், தோல்விக்கும் என்ன சம்பந்தம். ப—ர்) கட்சிக்கு ஒழுங்கான வேலைத் திட்டமும், பிரசாரமு மில்லாமை, கட்சியின் தாய்மொழி பத்திரிகைகளில் கவனம் செலுத்தாதிருந்தது, பொதுஜனங்களுக்கு ஏற்பட்ட காங்கிரஸ் மயக்கம் ஆகிய இவைகளும் இதுபோன்ற விஷயங்களுமே கட்சியின் தோல்விக்கு பேருதவியாக இருந்தன என்பது உண்மையாகும். (இந்த மூன்றும் சரி. இதற்கு திருச்சிக்காரர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன? அல்லது யோசனை என்ன? ப—ர்)

கட்சியின் சார்பாகவரும் விஷயங்களை தீர்மானம் செய்யும் பொழுதெல்லாம் தாங்கள் அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களுக்கு மதிப்புக்கொடுத்ததேயில்லை. தங்களுக்காக விட்டுக் கொடுத்து நிறைவேற்றிய தீர்மானங்களின் பலனை கட்சி அங்கத்தினர்கள் இப்போது அனுபவிக்க வேண்டியிருக்கிறது. (எந்த அங்கத்தினர்? எதை விட்டுக்கொடுத்ததால் எதை அனுபவித்தார்கள். ப—ர்)

சர். ஷண்முகம் அவர்களின் தோல்வி கட்சிக்கு ஒரு பெரிய நஷ்டமாகும். அவர் கட்சியைச் சேராமல் சுயேட்சையாக நின்றிருந்தாலும் வெற்றியடைந்திருக்கக் கூடுமென்று சிலர் நம்புகிறார்கள். கட்சி அதிகமாக உழைக்குமென்று நம்பியே அவர் சொந்தமாகச்செய்ய வேண்டிய வேலையையும் குறைத்துக்கொண்டதாகத்தெரிகிறது. கட்சியின் முக்கிய அங்கத்தினர்கள் அவருடைய வெற்றியில் கவலையீனமாகஇருந்திருக்கிறாகள் என்றாலும் செட்டிநாடு 200-க்கு 115-ஓட்டுகளும், (115-ஓட்டுகள் கிடைத்ததென்று தங்களுக்கு எப்படித்தெரியும்? ப—ர்) திருச்சி 35-க்கு 30-ஓட்டுகளும், ஈரோடு எல்லா ஓட்டுகளும் கொடுத்திருக்கிறது. இந்த மூன்று நகரங்களிலும் கட்சியின் நகரசபைத் தலைவர்களோ, கட்சியின் ஜில்லாபோர்டு தலைவர்களோ, மந்திரிகளோ இல்லையென்பதை தயவு செய்து கவனிகக வேண்டும். மற்றவர்களைப்பற்றி ஆராய வேண்டியதில்லை. நமது கட்சியின் தலைநகரமாகிய சென்னையிலேயே 210-ஓட்டுகளுக்கு 62-ஓட்டுகளே கிடைத்ததாக நம்மவர்கள் சொல்லுகிறார்கள். காங்கிரஸ்காரர்களோ இது கூட கிடைக்கவில்லையென மறுக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? இது யாருடைய துரோகம்? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டியதாயிருக்கிறது (இதற்கு தோழர் விஸ்வநாதந்தான் பதில் சொல்லட்டுமே. ப—ர்)

ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் தோல்வி கட்சிக்கு ஈடுசெய்ய முடியாதமற்றொரு பெரும் தோல்வியாகும். இத்தோல்விக்கு கீழ்க்கண்டவைகளே பெருங்காரணமாக கருத வேண்டியிருக்கிறது. பிராமணர்கள் கட்டுப்பாடாக வேலைசெய்தது, பிராமணரல்லாதாருக்குள் ஏற்பட்ட பிளவு, பெண் தொண்டர்களின் சேவை இல்லாதது, தடியடிக்கதையும், தாலிஅறுப்புப்போராட்டமும், காங்கிரஸ் பத்திரிக்கைகளின் சலியா உழைப்பு, முதலியாரை ஆதரிக்கும் தேர்தல் கூட்டங்களில் சென்னைப் பிரமுகர்கள் ஒருவராவது முன்வந்து உழைக்காமை (இதற்குத்தோழர் விஸ்வநாதத்தைப்பொருத்த வரை என்ன செய்தார். ப—ர்) ஆகியஇவைகளைத் தவிர வேறு காரணங்கள் இருக்குமானால் அது முதன்மையாகக்கருதுவதற்கில்லை. தஞ்சை, கோவை ஜில்லாவின் பிரமுகர்கள் சென்னை தேர்தல் பிரசாரத்தில் பங்கெடுத்துக்கொள்ளாதிருந்தால் தோழர் முதலியார் அவர்களின் தேர்தல் பிரசாரம் எம்மாதிரி நடைபெற்றிருக்கும் என்பதை யூகிக்கவே முடியவில்லை. இது யாருடைய துரோகம் என்பதும் புலப்படவில்லை.

சென்ற தேர்தலில் எல்லா தொகுதிகளிலும் தாங்கள் முழுபலத்துடன் வேலை செய்தீர்கள். இதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. சர். ஷண்முகம் அவர்களுக்கு எதிரிடையாக ஓட்டவாஒப்பந்தத்தை எதிர்த்துப் போராடிய நண்பர் சீதாராமராஜு அவர்களையும் ஆதரித்து வேலைசெய்ய நேர்ந்தது முடிவு என்ன? அவர் 10,000 ஓட்டுகளால் தோல்வியடையப்பெற்றார் காங்கிரஸ் சார்பில் நின்ற தோழர் வி. வி. கிரி. அவர்களுக்கு தங்கள் சொந்த எஸ்டேட்டிலேயே 100க்கு 48-வீதம் கிடைத்ததாகக்கூறுகிறார்கள். இதற்காகத்தங்களையாவது குறைகூறினால் எவர்களாவது ஒப்புக்கொள்ளுவார்களா? என்பதை ஆலோசிக்க வேண்டுகிறோம்.

சென்ற தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கு செட்டிநாட்டுக் குமார ராஜாவே காரணம் என்று சென்னையிலும், வெளியூர்களிலும், பத்திரிகை உலகத்திலும், பலமான வதந்தி பரவி வந்தது. இதை மறுப்பதற்காகவே குமாரராஜா ராஜிநாமா செய்யும்பொழுது ஒரு விரிவான ஸ்டேட்மெண்டை தாக்கல் செய்ய நேர்ந்ததாகத் தெரிய வருகிறது. அதன்பிறகு கூட்டத்தில் இது காரணமல்ல வென்றும் கட்சியின் கொரடாப்பதவியை சரியாக நடத்தவில்லையென்ற குற்றம் சுமத்தப்பட்டது. இது உண்மையென்று ஒப்புக்கொண்டால் தாங்கள் தேர்தலுக்கு முன்பாக 4-வருடகாலத்தில் இம்மாதிரி தீர்மானம் கொண்டு வந்திருக்கலாம். இல்லை, ஆகவே இரண்டும் அல்லாத வேறு காரணங்களோ, அல்லது பகைமையோ நம்பிக்கையில்லாத்தீர்மானத்திற்குக்காரணமாக இருக்கவேண்டும் என்றே எண்ண வேண்டியிருக்கிறது. செட்டிநாட்டு 'குமாரராஜா அவர்களுக்கு இவ்வளவு பெரிய வலிமை இருக்கிறது என்று தாங்களும் சட்டசபை அங்கத்தினர்கள் 51 பேரும்சேர்ந்து ஒப்புக்கொண்டாலும் என் போன்றவர்களால் ஒப்புக்கொள்ள முடியாது.

கூட்டத்தை ஒத்திப்போடும்படியும், தீர்மானத்தை கமிட்டிக்கூட்டத்திற்கு அனுப்பும்படியும் இல்லாவிடில் விசாரணைக்குக்கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்றும் கட்சியின் முக்கிய அங்கத்தினர்கள் பலவூர்களிலிருந்தும் தந்தி கொடுத்திருந்தார்கள். திருச்சி எஸ் ஐ. எல். எப். சங்கத்தின் தீர்மானமும் தங்கட்கு அனுப்பப்பெற்றது. எதையும் தாங்கள் கவனித்ததாகவோ, கூட்டத்தில் தந்திகளை படித்ததாகவோ தெரியவில்லை. அதற்குப்பதிலாக குமாரராஜா அவர்கள் ராஜிநாமா செய்த பிறகுங்கூட நம்பிக்கையில்லாத்தீர்மானம் பிரரேபிக்கப்பெற்றும், ஆமோதிக்கப்பெற்றும் இருக்கிறது.

தோழர் எஸ். இராஜகோபால் அவர்கள்.



இவர் சென்ற 12-11-34ந் தேதி நடைபெற்ற ஜலகண்டாபுரம் யூனியன் பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தலில் போட்டியின்றி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ஜலகண்டாபுரம் சுயமரியாதை இயக்க முக்கியஸ்தர்களிலொருவருமாவர்.

# பகுத்தறிவாலயமும் வாசகசாலையும், சென்னை.

(தோழர் தருமதீரர் சொற்பொழிவு)

இவ்வாலயத்தின் மாதாந்திரக்கூட்டம் சென்னை தங்க சாலைத்தெருவு 297-ம் நெ கட்டிடத்தில் கூடிற்று. அவ்வமயம் தோழர் தர்மதீரர் அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் கீழ்க்கண்டவாறு தமது முன்னுரையாக நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்கள். அவை கீழ்வருமாறு:-

தோழர்களே "உலகமக்களை யாதாஸ்திதிகர்களென்றும், உற்பதிஷ்ணுக்களென்றும் இரண்டு பிரிவினைகளாக வகுக்கப்படலாம்; அதாவது பழமை விரும்பிகளென்றும், சீர்திருத்த வாதிகளென்றும் தமிழிற்ச் சொல்லப்படுகின்றன. இதில் பழமை விரும்பிகள் தங்கள் பாட்டன், முப்பாட்டன் காலங்களில் அவர்களால் அனுஷ்டித்து வந்த நடையுடைபாவனைகளையும், அவர்களால் பின் பற்றிவரப்பட்ட மதக்கொள்கைகளையும் அதாவது மனித வடிவம் கொண்ட ஆகாயக்கடவுள்களையும், அவதாரபுருஷர்களான பூலோகக்கடவுள்களையும், பூதப்பிரேத பிசாசு, மாரியம்மன் முதலிய உபக்கடவுள்களையும், மோக்ஷம், நரகம், மறுபிறப்பு, சடங்கு, ஆசாரம், கோயில், குளம், தீர்த்தம், யாகம், பலி முதலிய எல்லாவகைகளிலும் பக்தியும், திடமான நம்பிக்கையும் உடையவராய் சிறிதளவும் மாறுதலின்றி தங்களது ஜீவித வாழ்க்கையைநடாத்தி வருபவர்களாகின்றார்கள். எதாவது சிறிதளவு மாறுபாடு செய்யுமாயின் பெரியபாபமும், அதன் பலன் நரகானுபவமும் ஆகின்றனவென்றும், நம்பி வருகிறார்கள். முன்னோர்கள் அனுஷ்டித்து வந்ததும் பெரியவர்களால் எழுதப்பட்டதென்று சொல்லப்படும் புஸ்தகங்களும் தான் இவர்களுக்கு ஆதாரமென்றல்லாமல், சொந்த மூளையை உபயோகிக்க இக்கூட்டத்தார்க்குக் கிடையாது.

சீர்திருத்த வாதிகளோவெனில் உலகத்தில் நடைபெறும் எல்லாமதக்கோட்பாடுகளையும், நம்பிக்கைகளையும் தங்களது பகுத்தறிவைக் கொண்டு அலசிப்பார்த்து யுக்திக்கும், அனுபவத்திற்கும், பொருத்தமான வைகளைமாத்திரம் அங்கீகரிக்கவும், பொருத்த மற்றவை மூடநம்பிக்கைகளாக உள்ளவற்றைத்தள்ளி விடவும் செய்கின்றார்கள். உலகமெங்கும்விஞ்ஞான (science) சாஸ்திர வளர்ச்சி மூலமாக மக்களுக்கு மிக பிரயோசனகரமும், ஆச்சரியமுமான விஷயங்களையும், சம்பவங்களையும் நாம் அனுபவித்தும், கண்டுகளிப்படைந்தும்வருகிறோம். ஆனால் இவைகளெல்லாம் நம்முன்னோர்களும், பெரியவர்களும் கனவிலும் கூட கண்டிராத விஷயங்களாக இருக்கின்றன. அங்ஙனமுள்ள கல்வியும், பகுத்தறிவும், ஆராய்ச்சிகளும் மேலுக்கு மேல் சிறடைந்துபோய்க்கொண்டிருக்கும் விஷயங்களை நாம் இப்பொழுது கேட்டும், வாசித்தும், கண்டும் வருகிறோம். காலதேச வர்த்தமானங்களுக்கிணங்கியும், முன்னேற்றமடையை முயற்சித்தும் ஜீவிப்பவர்களே யதார்த்த பகுத்தறிவாளர்களாவார்கள். அல்லாதவர்கள் காட்டுமிராண்டித்தனத்தையும் மூடநம்பிக்கைகளையும் வளர்க்கும் சுபாவமுடைய மதநம்பிக்கைகளால் பின்னிழுக்கப்படுபவர்களும், அறிவீனர்களுமாகிறார்கள். ஒரு மனிதன் மரணமடைந்தால் அப்பிணத்தைப் புதைக்கவோ, கொளுத்திவிடவோ நமது பிரத்தியக்ஷானுபவமாகின்றன. பிறகு யார் தான் மோக்ஷபதவியும், சொர்க்கசுகமும், நரகதுக்கமும் அனுபவிப்பதும், மறுபிறப்பெடுப்பதும் என்று கேட்கின்றேன்? இந்த சுகதுக்கானுபவங்கள் ஆன்மாவுக்குத்தானென்று சொல்வதானல் அஃதைப்போன்ற அறியாமை வேறென்ன தானிருக்கின்றது?

ஆன்மாவோ சடப்பொருளல்லவென்றும், அணுவுக்கும் அணுவும் இந்திரியங்களால் அறியப்படாததும் மனதுக்கும், புத்திக்கும் எட்டாதது மாகின்றன வென்றும் சொல்லப்படுகின்றன. இப்பேர்ப்பட்ட ஒரு அரூபி எங்ஙனம்? எதைக்கொண்டு சுகதுக்கங்கள் அனுபவிக்கின்றது? சடப்பொருளான இந்திரியங்களும், மனதுமின்றிசுகதுக்கானுபவம் கிடையாது. இதுகளெல்லாம் வெறும் கற்பனைக்களஞ்சிய மின்றி வேறல்ல. வைதீகர்களும், மத கர்த்தாக்களும் கண்ணுக்குப்புலப்படாத எதற்கும் தெய்வீகத்தன்மை கொடுத்திருக்கின்றனர். ஆனல் இப்பொழுதோ விஞ்ஞான சாஸ்திரீகர்களால் கண்டு பிடிக்கப்பட்ட (Micrascope telescope, speatrascope முதலிய) தூரதிருஷ்டிக் கண்ணாடிக் கருவிகளால் பரமாணுக்களை ஒரு யானையளவிலும் பெரிய தாகவும் கோடான கோடிமைலிகளுக்கப்பாலிருக்கப்பட்ட வஸ்துக்களை பக்கத்திலும் காணும்படியாக சாதிக்கப்பட்டிருக்கின்றனர். இதனுல் தெய்வீகத்தன்மை யென்று சொல்லப்போந்தவைகளின் மர்மங்களெல்லாம் வெளிப்பட்டு விட்டது மனதை விட்டு ஆன்மா வேறல்ல வென்றும் நித்தியமும் நாசரகிதமான ஆன்மா ஒன்றில்லையென்றும் 2500 வருடத்திற்கு முன்பே புத்தரால் கூறப்பட்டிருக்கின்றது. அதனுற்றான் அவருக்கு அனுத்மவாதியென்றும் பெயருண்டாயிற்று. அங்ஙனம் கூறினமதகர்த்தாக்கள் வேறே எவரும் கிடையாது.

இப்பொழுது விஞ்ஞான சாஸ்திரமும், மனமும், ஆன்மாவும் ஒன்றேன்றும் (Soul or shirit is a functiion of brain) ஆன்மா அல்லது ஆவியென்றும் சொல்லப்படுவது மூளையின் ஒரு வியாபாரமென்றும் சொல்லுகின்றனர். ஆதலால் முன்னோர்கள் அனுஷ்டித்து வந்ததென்று சொல்லப்படும் பழக்கவழக்கங்களெல்லாம் சுத்த மதிக்கேடானதும் பெரியவர்களால் எழுதப்பட்டதென்று சொல்லப்படும் புஸ்தகங்கள் பொய்யும், புளுகும் நிரம்பியதும் மக்கள் அறிவையும், முன்னேற்றத்தையும்தடைப்படுத்துவதும்காலோசிதமல்லாததுமாகின்றன. அதனுல் பகுத்தறிவை வளர்த்துவதே உங்களது முக்கியநோக்கமாக வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறிமுடித்தார்.

பிறகு தோழர் உடுமலை பி. இரங்கநாதம் அவர்கள் "நமநாடு நலம் பெறுவதெக்காலம்" என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசினர். இதைப் பின்பற்றி தோழர்கள் எச். கே. கிருஷ்ணசாமி, கெ. குப்புசாமி, தி. இராதாகிருஷ்ணன், எச். என். சங்கரநாகலிங்கம் முதலியவர்கள் பின்பற்றிப் பேசியபின், ஆலயத்தின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இரவு 8-45க்கு இனிது கலைந்தது.

---

தங்களுடைய தைரியமான செய்கைகள் போற்றக்கூடியதே—ஆனல் பல விஷயங்களிலும் பலன்கள் மோசமாகிக்கொண்டே வருகிறது என்பதை மட்டும் அறிவிக்க வேண்டியிருக்கிறது.

சரியான பாதையிலோ, தவறான பாதையிலோ, நமது கட்சிவரவர பிற்போக்கு ஆகிவருகிறது. வந்துவிட்டதென்றும் கூறலாம். வெளியூர்களில் இருப்பவர்களுக்குள் ஜஸ்டிஸ் கட்சிக்குள்பூசலும், பொறாமையும்,மனத்தாங்கலும் குடிகொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. கட்சிக்குள் அன்பும், ஒற்றுமையும் சமாதானமும் நிலைபெற தாங்கள் முழுபலத்தையும் உபயோகிக்கத் தவறிவிட்டீர்கள். தமிழ்நாட்டுத்தலைவர்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய கட்டுப்பாடான போராட்டத்தின் மூலமாகத்தான் தங்களின் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமென்பதையும், இல்லாவிடில் முன்னேற முடியாதென்பதையும் பல விஷயங்களிலிருந்தும், கடைசி சம்பவத்திலிருந்தும் பலரும் வியக்கமாக அறிந்து வருகிறார்கள் என்பதைத் தங்கட்கு இதன் மூலம் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

---

## கோவை அருந்ததிய வாலிபர் சங்கம்.

9-12-34 ஞாயிற்றுக்கிழமை இரவு 7-மணிக்கு சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் தலைவர் ஆர். நஞ்சையா தலைமையில் நடந்தது. தலைவர் சுட்டாய ஆரம்பக் கல்வி என்னும் விஷயமாக பேசியப்பின் தோழர்கள் மாரிமுத்து, ராமச்சந்திரன் சுகாதாரம், தாழ்த்தப்பட்டோர் கடமை என்னும் விஷயமாகப் பேசினர்கள். அதன் பின் 9-மணிக்குக்கூட்டம் கலைதந்து என காரியதரிசி எழுதுகிறார்.

---

## மனித உற்பவம்.

இது தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. இவைகள் சொற்ப காப்பிகளேயிருக்கின்றது. வேண்டியவர்கள் உடனே எழுதிப்பெற்றுக்கொள்க, விலை 8 அணா 22, சவுத்பீச், திருவல்லிக்கேணி, சென்னை.

---


## ஒயிட்ஸ் பஸ்பம்.

பாதரசத்தினல் தயாரிக்கப்பட்டது. மூத்திர சம்பந்தமான வெள்ளை வெட்டை ரணம் உள் மூலம் வெளி மூலம் ஆப்ரேஷன் இல்லாமல் குணத்திற்கு உத்திரவாதம். 12-வேளை மருந்து ரூ. 1—2—0 வீ. பி. சார்ஜ் வேறு.

ஒயிட்ஸ் வைத்திய சாலை, அம்மாபேட்டை சேலம்.


---


## ஏஜண்டுகள் தேவை.

நமது "பகுத்தறிவு" வாரப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு

1. பொன்மலை
2. சாக்கோட்டை
3. திண்டுக்கல்
4. சென்னை
5. கோலார் தங்கவயல்.
6. பொரையார்
7. கோட்டார்
8. சிவகங்கை

முதலிய இடங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர், "பகுத்தறிவு" ஈரோடு

# கல்வியின்மையும், விதவைக்கொடுமையும்.

(தோழர் முத்திருளாண்டி)

இன்றைய மக்களுக்கு அறிவுச்சுதந்திரம் அவசியமே யொழிய அரசியல் சுதந்திரமல்ல என்பதற்கு, வேண்டிய ஆதாரங்களும், நியாயங்களும் அறிஞர்கள் பலர் எடுத்துக்காட்டியும் அரசியல் வாதிகள் செவிகளுக்கு எட்டவில்லை. அரசியல் சுதந்திரம் அதாவது, சுயராஜ்யம் அடைந்தபின் அறிவுச்சுதந்திரமாகிய சமுதாய சீர்திருத்தம், சமதர்மம், சமத்துவம் தானே வந்தடைந்து விடும்என்கிறார்கள். மக்கள்சமத்துவத்துக்கும்கூட இன்றைய ஆட்சியே இடையூராயிருக்கிறதுஎன்றும் சொல்லுகிறார்கள். ஆனால் சுயமரியாதைக் கட்சிக்காரர்கள் சுயராஜ்யம் வேண்டாம்என்று சொல்லுகிறார்களா என்று பார்த்தால் அதுவுமில்லை, மக்களை மக்கள் அடிமைப்படுத்தி மக்களை மக்கள் இழிவு படுத்தும் சுயராஜ்யந்தான் வேண்டாம் என்று சொல்லுகிறார்களே ஒழிய மக்கள் யாவரும் சகோதரர்களாக சமத்துவமாய் வாழும் சுயராஜ்யம் வேண்டாம் என்று ஒருபோதும் சொல்லவில்லை.

அறிவு வளர்ச்சிக்கு முதற்படியாயுள்ள கல்வியை எடுத்துக்கொள்வோம். இன்றைய கணக்கிலும் நூற்றுக்கு பத்துபேர் கூட படித்தவர்கள் நம் இந்தியாவில் உண்டா? ஆண்மக்களின் கணக்கே இங்கனமிருக்க ஆண்களின் அடிமைகளாயும், வேலையாட்களாயும் பிள்ளைபெறும் இயந்திரங்களாயுமுள்ள பெண்களின் கல்வியை எங்கனம் பேசமுடியும்? கல்வி இல்லாதவர்கள் என்றுபழம்பெருமை பேசுவதால் மட்டும் மக்கள் கல்வியில் முன்னேற்றம் அடைந்து விட முடியுமா?

அடுத்தபடியாக பழக்க வழக்கங்களின் பயனாக நடந்து வரும் பால்ய விவாகக் கொடுமையின் பரிதாபக் காட்சி மறைந்துளதா? இத்தீய வழக்கத்தை யொழிக்கவல்லவா ஹரிவிலாஸ் சாரதா அவர்கள் மசோதா கொண்டுவந்தார். அம்மசோதா இன்றைய அரசியல் வாதிகளான வைதீக வெறியர்களாலன்றோ! எதிர்க்கப்பட்டன. இங்கனம் அறிவுச்சுதந்திரம் பறிமுதல் செய்யப்படும் அரசியல்வாதிகளிடமிருந்து எங்கனம் சமத்துவத்தை எதிர்பார்ப்பது?

முற்காலத்தில் ராஜாராம்மோஹன் ராய் அவர்களும், வார்ட் வில்லியம் பெண்டிங் பிரபு அவர்களும் உடன்கட்டை ஏற்றுதலைத் தடுப்பதற்கு முன் இருந்த மாதிரி பால்ய விதவையர்களை அக்கால வைதீகச்சட்டத்தை அனுசரித்து நெருப்பில் கொளுத்தி விடுதலாகிய பழமை முறைப்படி செய்து விடினும் நலமாயிருக்குமே. விதவையர் பரிதாபக் காட்சியை காணாது மீட்சி பெறலாமே' தற்கால அனுபவம் அதற்குமிடமில்லையே!

1-வயது முதல்செய்யப்படும்(உணர்வு பெருவதற்கு முன் செய்யப்படும்) கட்டாயமணத்தாலன்றோ விதவையர் ஆயுள் பரியந்தம் துன்பக்கடலில் துயருறுகின்றனர்! இரத்தக்கண்ணீர் சொரிந்து பரிதவிக்கின்றனர். மிருக சுதந்திரம் கூட மக்களுக்கில்லையே! அம்மம்மா! என்னே இக்கொடிய காட்சி! உற்றார், பெற்றார், சோதரர், எனையோர் அனைவரும் உலகின்பம் வாய்த்து மிகப்பேறுபெற்று மகிழ்வுறுமிவ்வுலகில், தன்பிறவி யுன்பிறவி எனக்கருதி கற்பெனு மொன்றே கடவுள்பாலிருத்துமெனமனே கற்பனை செய்து பிறர் பழித்தலுக் கஞ்சித்தன்னலம் வெறுத்து கண்டபேரெல்லாம் வீட்டிலும், வெளியிலும்,சுபகாரியங்களிலும் "முண்டை" எனத்தூற்றி இகழ்ச்சிக்கிலக்காய் இருக்கும் நம் சகோதரிகள் துன்பக் கண்ணீர் துடைப்பது அறிவுச்சுதந்திரமா? அல்லது அரசியல் சுதந்திரமா?

இந்தப்பழமை க்கட்டுப்பாட்டினின்றும் நிலைதவறி, கற்பிழந்து, நிறைகுலைந்து, மகவீன்று, குப்பைமேட்டிலும், சாக்கடையிலும் புகவெறிந்து, ஜாதியச்சழக்கர்களை விட்டகன்று, வேசைக் குச்சுக்காரிகளென நாமம்பூண்டு அல்லலுறும் சகோதரிகளுக்கு அளவுண்டா? ஐயோ! தற்கொலை செய்து கொண்டு இறந்து போன இளநங்கையர்களின் எண்ணிக்கைதான் எத்தனை! ஆண்கள் ஐம்பது மணஞ்செய்யினும் தடுப்பாரில்லையே! ஆகவே ஆணுக்கொருநீதியும், பெண்ணுக்கொருநீதியும் விரும்பும் அரசியல் சுதந்திரம் வெண்டாமென்று சொல்லுகிறோமே யொழிய, "மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று பாரதியார் கூறிய அறிவுச்சுதந்திரத்தை என்றும் மனப்பூர்வமாய் ஏற்கிறோம்.

பிரசங்க மேடைகளிலே வாயளவில் சமத்துவப்பேச்சுகள் பேசி அல்லலுறும் மக்களின் அவதியை நீக்கச் சட்டம் வரும்சமயம் சாமி, மதம், ஜனங்கள் பேரால் பழிபோட்டு சட்டம் வேண்டாம் என்று அசட்டுவாதம் புரியும் சுயநலமிகளாகிய பார்ப்பன காங்கிரஸ் வாதிகள் என்றும் ஒரு கூட்டத்தாரின் வலையில் சிக்குண்ட மக்களாலேயே இன்றைய அரசியல் கிளர்ச்சி நடைபெறுவதால்தான் அறிவுச் சுதந்திரத்தைப் பிடுங்கும் இன்றைய அரசியல் சுதந்திரம் வேண்டாம் என்கின்றோம்.

வரப்போகும் சுயராஜ்யத்தில் மக்கள் யாவரும் சரிநிகராக வாழ்வார்களென்றால், இன்று முதலாளிவர்க்கத்தினரால் தொழிலாளிகளும், படித்த கூட்டத்தாரால் படிக்காத மக்களும், உயர்ஜாதியினரால் இழிஜாதியினர் என்று சொல்லப்படும் மக்களும், ஆண்களால் பெண்களும், கஷ்டப்பட்டு அறிவிழந்து அடிமையுற்று அவதியுறுவதை நீக்க செய்கையில் காட்ட முன்வர வேண்டும் நம் தமிழ்நாட்டு மக்களுக்கு முதலில் வேண்டுவது சமுதாய சீர்திருத்தமும் உழைப்புக்குக் கூலியுமேயாம். பசிப்பிணியால்வாடும்மக்களுக்கு இந்திர பதவி வேண்டாம்.

"தனியொரு மனிதனுக்குண
வில்லை யென்றிடில்
ஜகத்தினை யழித்திடுவோம்".

---


## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "சமதர்மம்,"

ஆசிரியர்:—வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும்,சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டுஇரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0
விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.

ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும், அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0
விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

---

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளி வருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0
மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.

---

### சிறுவர் அறிவுக்கதிர்

வெளியாகி விட்டது.

பாடசாலை மாணவர் மாணவிகளுக்கு ஒரு சிறந்த மாதாந்தரப் பத்திரிகை.

வருஷசந்தா உள் நாடு 0-10-0
,, வெளி நாடு 1-0-0
K. J. வேதமுத்து,
தமிழ்ப் பண்டிதர் L. M.
போதனு முறைப் பாடசாலை
ஈரோடு S. I. R.

---

### "சஞ்சீவி சத்து"

மனிதர் தலைமுதல் கால்வரைவரும் சகல நோய்க்கும் திவ்யாமிர்தம் போன்றது. இதனால் காது நோய், பல்வலி, விஷப்புண்கள், விஷத்தடிப்பு, காலரா, பிளேக், அஜீர்ணபேதி, மாந்தம், பசியில்லாமை, வயிற்றுவலி, இருமல், மயக்கம், ஜுரம், மார்சளி, ஜலப்பு இன்னும் அனேக நோய்கள் மணிநேரத்தில் சொஸ்தமாகும். எல்லோரும் உபயோகிக்கலாம். வாங்கி உபயோகித்து உண்மையை உணருவின்! புட்டி விலை அணா 8.

பண்டிட் வி.கே. கண்ணுபிள்ளை,
மலபார் மெடிகல் ஹால்,
218, தங்கசாலை வீதி, சென்னை.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

வின் சொந்த வார்த்தைகளை உபயோகிப்போமானால் "யாவும் காங்கிரசின் போராட்டத்தின் சம்பந்தத்திற்குட்பட்டதாக இருக்க வேண்டும் என்பதோடு, காங்கிரஸ் நடவடிக்கையை வலுவாகக் கண்டிப்பதென்கின்ற சம்பிரதாயமாகி விட்டதென்று கூறியும் —காங்கிரஸ், லட்சியத்தில் சிறிது பிற்போக்காயிருப்பினும் அதுவே தற்போதைய வெகு முன்னேற்றமான வலுவான புரட்சித்தன்மையுடைய தீவிரம்பொருந்திய ஒரே கட்சி என்பதில் ஆட்சேபனை இல்லை" என்பதை வற்புறுத்துவதைக் கொண்டுமறியலாம்.

ஆனால் காங்கிரஸ் என்பது இந்திய பூர்ஷ்வாக்களை ஆதரிக்கும் ஒரு கட்சியாயிருக்கின்ற வரையில்,பிரஸ்தாபிக்கப்பட்ட சமதர்ம வேலைத்திட்டங்கள், ஏற்பாடுகள் யாவும் பூர்ஷ்வாக்களின் அரசியல் ஆதிக்கத்திற்கே கட்டுப்படுத்துவதாகவன்றோ முடிகிறது. அதன் பலன் சமதர்மக்கொள்கைக்கு எவ்வளவு மாறுபட்டதென்பது வெளிப்படை.

இந்த முரண்பாடுகளுக்கு என்ன சமாதானம் கூறப்படுகின்றது. இந்த முரண்பாடுகளை மறைப்பதற்கு அவர்கள் சொல்லும் காரணங்களென்ன? சமதர்மம் என்பதை "பொருளாதார திட்ட"மாகக் கொண்டு அதை காங்கிரசின் "அரசியல்" திட்டத்தோடும், ஆதிக்கத்தோடும் பிணைக்கப்படுகிறது. 'கலப்பற்ற அரசியலோடு" நின்று விடுவதே காங்கிரசின் பலஹீனம் என்று நேரு கூறுகிறார். அவர் கூறுவதாவது "இந்தியர்கள் பிற்போக்கான வெறும் அரசியலில் சம்பந்தப்படுவது மாத்திரம் போதாது. உலக சம்பவங்களோடு இயல்பாக ஏற்பட்ட நமது பொது ஜன போராட்டமும் காங்கிரசை ஒரு அளவிற்கு பொருளாதார விஷயங்களைப் பற்றியும் ஆலோசிக்கும்படி செய்து விட்டது." இப்படிப்பட்ட பொருளாதாரத்திட்டம் சமதர்ம தத்துவத்திலிருந்து எடுத்து காங்கிரசினுடைய கிளர்ச்சியோடு சம்பந்தப்படுத்தலாமென்றும் அவர் கூறுகிறார்.

அதோடு காங்கிரசின் அந்தரங்க நோக்கம் தோழர் காந்தி சமதர்மத்திற்கும், காங்கிரசிற்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றி வெளியிடப்பட்டிருந்த அறிக்கையிலிருந்து இன்னும் அதிகமாகத் தெளிவாகிறது. காங்கிரஸ்காரர்கள் சமதர்ம சகாக்களை எவ்வாறு கருதுகிறார்கள் என்று காந்தியாரைக் கேட்டபோது அவர் "தொழிலாளிகள், விவசாயிகளுடைய "அவ்வப்போதைய" கோரிக்கைகளுக்காக சமதர்மிகள் செய்யும் ஒவ்வொரு கிளர்ச்சியிலும் காங்கிரஸ்காரர்கள் முற்றிலும் ஒத்துழைக்க வேண்டுமென்றும், ஆனால் அவர்களுடைய பிரசாரமானது காங்கிரசின் மூலாதாரக் கொள்கைக்கும், வேலைத் திட்டத்திற்கும் முரண்படுவதானல் அப்பொழுது காங்கிரஸ் தொண்டர்கள் சமதர்ம வாதிகளை அடியோடு எதிர்க்க வேண்டுமென்று" கூறினர்.

இவ் விடத்தில் நேரு, காந்தியார் அறிக்கையிலிருந்து ஒரு நூதனமான புதிய திட்டம் ஏற்பட்டு விடுகிறது. இதன் படி காங்கிரஸ் பூர்ஷ்வாக்களுக்கும், அவர்களுடைய "சமதர்ம" சகாக்களுமிடையே, சர்வ சாதாரணமான ஒரு தொழில் பிரிவினை ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். அதாவது காங்கிரசிற்குள்ளிருக்கும் சமதர்ம வாதிகள் பாமர மக்களின் மனப்போக்கை திருப்தி பண்ணும் வகையில் ஒரு வித முற்போக்கான லட்சியத்தை அல்லது ஒரு வித" பொருளாதார "திட்டத்தை பிரசாரம் செய்து தொழிலாள விவசாயிகளை ஒன்று படுத்தி அவர்களுடைய" அவ்வப்போதைய "தேவைக்குக் கிளர்ச்சி செய்யக் கூடியதாய் நடத்தி வரவேண்டுமென்றும், ஆனால் அரசியலும், அதன் தலைமை ஸ்தானமும் முற்றிலும் காங்கிரஸ் பூர்ஷ்வாக்கள் கையிலேயே இருக்க வேண்டுமென்பதே யாகும். (இம் மாதிரியான போக்கைத் தான் ஆதியிலேயே அதாவது பூர்ஷ்வாக்கள் அரசியல் ஆதிக்கம் வகித்து, முடி ஆட்சியை வீழ்த்தி ஜன நாயக ஆட்சியை ஸ்தாபிக்கின்ற வரையில் சமதர்ம வாதிகள் அரசியலில் சம்பந்தப் படாமல் தொழிலாள ஒற்றுமையையும், பொருளாதார விஷயங்களையும் மாத்திரம் பேசிக்கொண்டு இருக்கவேண்டுமென்ற கொள்கையை லெனின் கண்டித்திருக்கிறார்.) இதில் எவ்வித சமதர்ம அம்சமும் இல்லை என்பதேயாகும். ஆனால் அரசியல் பூர்ஷ்வாக்கள் சர்வ சாதாரணமாக தொழிலாளிகளிடத்தில் இந்த வகுப்பு ஒத்துழைப்பையே எப்பொழுதும் வற்புறுத்தி வருவது வழக்கம். இதனால் சமதர்மம் ஏற்படுவதற்கோ, உழைக்கும் சமூகத்திற்கோ ஏமாற்றத்தைத்தவிர்த்து வேறு நன்மை இல்லை.

ஆனால் இந்தியாவில் சமதர்ம இயக்கம் இதற்கு முற்றும் மாறுபட்ட வழியையே பின்பற்ற வேண்டும். காங்கிரஸ் கொள்கைக்கும், சமதர்ம கொள்கைக்கும் நேர்மாறாட்டம். காங்கிரஸ் பூர்ஷ்வாக்களுக்கும் தொழிலாள வகுப்பாருக்கும் மாறுபாடுண்டு. இவர்கள் ஒன்றுபட்டுவேலைசெய்வதென்பது தங்கள் கொள்கையை விட்டுக்கொடுப்பதற்குச்சமானமேயாகும். முதலாளிகளின் கொள்கைகளையும், தொழிலாளிகளின் கஷ்டங்களையும், ஏகாதிபத்திய ஆதிக்கத்தையும், நிவர்த்திசெய்யும் பொதுஜன புரட்சி போராட்டத்தை எதிர்த்து ஏகாதிபத்திய பூர்ஷ்வாக்களின் கூட்டுறவை இந்திய பூர்ஷ்வாக்கள் நாடுவது சகஜம் ஏழை பணக்காரரென்ற வகுப்பு வேற்றுமையையும், கொள்ளையையும் எதிர்த்துப் போராடுவதற்கு தொழிலாளர் வகுப்பாரே தகுதியுடையவர்கள். கடைசி வரையில் பின் வாங்காமல் போராடி, ஏகாதிபத்திய ஆட்சிகளை ஒழிப்பதற்குதொழிலாள வகுப்பாராலேயே முடியும்,

ஆனால் இந்திய பூர்ஷ்வாக்களோ, தங்களுக்கு மேல் சௌகரியமான நிலைமையிலிருந்து ஏராளமாகக் கொள்ளையடிக்கும் ஏகாதிபத்திய பூர்ஷ்வாக்களை (வெள்ளை நாட்டு முதலாளிகளை) எதிர்த்து அவர்களுடைய கொள்ளையை தாங்களே (கருப்பு முதலாளிகளே) அனுபவிக்க எண்ணுகின்றனர். அதோடு அவர்கள்கிளர்ச்சிகின்று விடும். இந்த சந்தர்ப்பத்தில் பொதுஜனப்புரட்சி-அப்படி வகுப்புக்கொள்ளையை அடியோடு இல்லாமல் செய்யும் போக்கில் அதிகரிக்கும் போதெல்லாம் இந்தி பூர்ஷ்வாக்கள் அதை எதிர்த்தொடுக்குவதற்குஏகாதிபத்திய ஆட்சிக்காரர்கள் சலுகையை நாடுகின்றனர். இது உலக அனுபவம். ஆகவே இந்திய சமதர்மவாதிகள், தொழிலாள சமூக விடுதலைப்போராட்ட வெற்றிக்கு மாத்திரமல்லாமல் தேசிய விடுதலைப் போராட்ட வெற்றியையும் கருதி, இந்த புரட்சிப்போராட்டத்தைக் காங்கிரசில் ஆதிக்கம் வகிக்கும் இந்திய பூர்ஷ்வாக்களின் ஆதிக்கத்தை (தலைமையை) எதிர்த்துப்போராடி இந்த பொதுஜன புரட்சியை தொழிலாளிகளே முழுதும் நடத்துவதற்கு ஒன்று சேர்க்கவேண்டியதற்காக பெரிதும் சிரமப்பட வேண்டியது அவசியம்.

இந்தப் பொதுஜன உழைப்பாள சமூகத்தாரின் போராட்டத்திற்கு முதலில் தொழிலாளிகளின் சுதந்திரமான ஒரு அரசியல் கட்சி வேண்டுவது அவசியம். இந்திய சோஷலிஸ் என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவரும் இதை ஆழ்ந்து யோசித்துஇதை எற்-டுத்த முற்படவேண்டும். எவர்கள் இந்த அவசியமான கடமையை உதாசீனம் செய்கிறார்களோ அவர்கட்கும், சமதர்மத்திற்கும் எவ்விதசம்பந்தமுமில்லையென்றேசொல்லவேண்டும். அவர்கள் உண்மை சமதர்மவாதிகளாகார். சுதந்திரமானதனித்ததோர் தொழிற்கட்சியை ஆதாரமாகக்கொண்டே தேசிய புரட்சிப்போராட்டம் என்னும் கட்டிடத்தை நிறுவமுடியும் தேசியபூர்ஷ்வாக்கள் சில சந்தர்ப்பங்களில் தற்காலிகமாகஇந்தப் புரட்சிப் போராட்டத்தில்ஒத்துழைப்பதானாலும், அதனால் தொழிலாளர்களுடைய சுதந்திரமான முழு அரசியல் சுதந்திரத்தைப்பாதிக்காதிருக்க வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே அனுமதிக்கவேண்டும். சைனாவில் காமிங்டான் கட்சியாரிடமிருந்து இந்த அனுபவத்தை அறியலாம். அவ்விடம் தேசிய பூர்ஷ்வாக்கள் ஏகாதிபத்திய ஆட்சிக்காரர்களை எதிர்த்து சிலகாலம் பொது ஜன புரட்சிப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். எனினும், தொழில் வகுப்பாரும், அவர்களுடையகட்சியாகிய கம்யூனிஸ்ட் கட்சியும் எப்பொழுதும் காமிங்டான்கட்சிக்குள் தங்கள் சுதந்திரத்தை இழக்காமலே சுவாதினத்தோடு இருந்து வந்தனர். ஆனால் சைனு பூர்ஷ்வாக்களைடத்திச் சென்ற சாங்கேஷேக் 1927ம் வருஷம் தேசியப் போராட்டத்திற்கு இரண்கம் செய்து, கைவிட்டுவிட்டு, ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுடன் திடீரென்று உடன் படிக்கைசெய்துகொண்டார். அந்நிலைமையிலும் சீனத்தொழிலாள வகுப்பாரும் தங்களுடைய கட்சியாகிய கம்யூனிஸ்ட் கட்சியும் எப்பொழுதும் பூர்ஷ்வாக்களின் அரசியல் போக்கில் சம்பந்தப்படாது, சர்வ சுதந்திரத்தோடு இருந்ததால், திடீரென்று ஏமாற்றப்பட்டபோது, தேசிய பூர்ஷ்வாக்களால் கைவிடப்பட்டபோதும், தாங்கள் பின் வாங்காமல் எப்பொழுதும் பேலவே ஏகாதிபத்திய எதிர்ப்பிற்கெல்லாம் சமாளித்து நிலை நின்றார்கள். சோவியத் சீனுவின் போராட்டத்தின் வெற்றிக்கெல்லாம் இதுவேகாரணம். ஆகவே இவைகளெல்லாம் இந்தியர்களுக்குத் தக்கபாடமாயிருந்து சரியான வழியைக்கடைப்பிடிப்பதற்கு உதவியாயிருக்கிறது.

ஆகவே "பம்பாய் காங்கிரஸ் சோஷலிஸ்ட்ஸ் குரூப்" வேலைத்திட்டத்தை நாம் வெறும் புரட்டாகவே கருதவேண்டியிருக்கிறது. இவர்களுடைய சூட்சிச்செய்கையால், பொதுஜனப்புரட்சியில் குழப்பதையும் மாறுபாட்டையும் உண்டுபண்ணி, மறுபடியும் சமதர்மிகள், பொதுவுடமைக்காரர்கள் ஆகியவர்களின் புரட்சிப் போராட்டத்தின் சக்தியை, காங்கிரசை ஆதிக்கம் செலுத்தும் பூர்ஷ்வாக்களின் ஆதிக்கத்திற்கே கொண்டுவந்து தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற சூட்சியேயாகும். எனவே, இப்பொழுது இந்திய சமதர்மவாதிகளின் முதற்கடமையாய் நிற்பது இந்திய தொழிலாளவகுப்பாருக்கென சுதந்திரமானதோர் அரசியல் கட்சியை ஸ்தாபிக்க வேண்டுவதே. இந்த முயற்சிக்கு எதிராக பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருடையவோ, அல்லது இந்திய காங்கிரசை நடத்திச் செல்லும் பூர்ஷ்வாக்களின் எதிர்ப்போ ஏற்படக் கூடுமெனினும் அவற்றை எல்லாம் லட்சியம் செய்யாமலே, தனித்த அரசியல் தொழிற்கட்சியை ஸ்தாபிப்பதனாலேயே இந்திய சமதர்மத்தை நிலைநாட்டமுடியும்.

(நாகை தோழர் கே. சாமிநாதனால் மொழிபெயர்க்கப்பட்டது)

## கோவை தேவாங்க சிறுவர் சபை.

16-12-34ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30மணிக்கு சங்கக்கட்டிடத்தில் சங்கத்தின் தலைவர் ராவ் சாகிப் சி. எம்.ராமச்சந்திரஞ்செட்டியார் அவர்கள் தலைமையில் ஓர் நிர்வாக சபைக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் சங்கத்தின் வருடாந்திரக்கொண்டாட்டம் 1935 ஞு ஜனவரிமீ நடத்தலாமென தீர்மானிக்கப்பட்டது எனகாரியதரிசி எழுதுகிறார்.

## பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணு 5.

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

(சார்லஸ் T. கோர்ஹாம் மொழிபெயர்ப்பு)

இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

(பெர்ட்டிரண்ட்ரசல் மொழிபெயர்ப்பு.)

இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

### மதம் என்றால் என்ன?

(ராபர்ட் G. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 2.

### கடவுள்.

(ராபர்ட் ஜி. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின் தன்மைகளையும், உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட்பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணு 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

(பெர்ட்டிரண்ட் ரசல் மொழிபெயர்ப்பு)

இந்நூல் மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணு 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்!

(இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில், தான்கடவுளைப்பற்றிக்க வலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணு 3.

### பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 3.

### மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். விலை அணு 4

### குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள், குடிஅரசில் எழுதிய தலையங்கங்களையும், பலமகாநாடுகளில் பேசியபேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணு 6.

### பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(பாதிரி சேனிக்யூ மொழிபெயர்ப்பு.)

இதைப்படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும் பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது 1-ம்பாகம் விலை அணு 3.

### பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவை இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணு 3.

### மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இதில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள பேதங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணு 3.

### "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்டது. இதில் சகல விதமான மூடநம்பிக்கைகளும், விபரமான பதில்கள் இருக்கின்றன. சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணு 6.

ஷை இரண்டாம்பாகம்

சுமார் 115 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணு 5.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M.A. மொழிபெயர்ப்பு

இதில் பிரமச்சரியம் என்னும் பெயரால் பல பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணு 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணு 4.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.) விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும் விலை அணா 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல். விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது. விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.
அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும். விலை அணா 2.

## பர்னாட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னாட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது. விலை அணா ½.

## மநுநீதி விளக்கம்.

இது மநுதர்ம சாஸ்திரம் என்பதில் உள்ள சூட்சிகளையும், கொடுமைகளையும் விளக்குவது. விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

பண்டிதர் மகாவித்வான் கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. இதில் அகத்தியர் என்பதாக ஒருவர் இருந்ததாகச்சொல்லுவது உண்மை அல்ல என்றும் அந்தப்படி ஒரு அகத்தியர் இருந்திருக்க முடியாது என்றும் தமிழ் சங்கங்கள் என்று சொல்லப்படுபவை கூட இருந்திருக்க முடியாது என்றும் சரித்திர ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டதாகும். விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

இது வடலூர் ராமலிங்க சுவாமி என்பவரால் சமதர்மத்தை ஆதரித்துப்பாடிய பாட்டுகள். விலை அணா 2.

## விவாக விடுதலை.

தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி.ஏ., பி.எல்., அட்வகேட் அவர்களால் எழுதப்பட்டது. இது நமது "இந்து"ப் பெண்களுக்கு விவாக விடுதலையின் அவசியத்தை வலியுறுத்துவதுடன் அது சம்மந்தமான சாஸ்திரஏற்பாடுகளையும், சட்டங்களையும் விளக்குவதுமாகும். மிகவும் ஆராய்ச்சித்திறம் கொண்டது. தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் மேல் நாட்டுப் பிரயாண உருவப்படமும், மதிப்புரையும் கொண்டது. விலை அணா 0—4—0

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.